


KALKI
14-12-80
90 காசு

சித்ரா விசுவேசுவரன்
பற்றி
இந்துமதி
எழுதுகிறார்

ஒலி பெருக்கிப் பிரச்னை ஓய்வது எப்போது?





அரசியல், இலக்கிய, ஆன்மீகக் கூட்டங்களில் ஒலிபெருக்கி அலறுகிறது. திருமண விழாக்களில் சினிமாப் பாட்டுக்கள் செவிப் பறையைக் கிழிப்பது மட்டுமல்ல யார் யார் எவ்வளவு மொய் எழுதுகிறார்கள் என்பதைக் கூட நாம் விரும்பாவிடினும் ஒலிபெருக்கி மூலம் கேட்டே ஆகவேண்டியுள்ளது. பொது மக்கள் குறிப்பாக பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கள், சிகிச்சை பெறும் நோயாளிகள் இரவு நெடுநேரம் உழைத்துவிட்டு வீடு திரும்பும் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். ஆயிற்று, மார்கழி பிறந்தால் அலறல் விடிகாலை நாலு மணிக்கே ஆரம்பமாகிவிடும். —ஆண்டவன் எப்படிச் சகிக்கிறானோ, நம்மில் பலரால் முடியவில்லை. ''எல்லாவற்றுக்கும் போலீஸ் கொடுக்கும் லைசென்ஸ்தான் காரணம்'' என்று பலர் கூறுகிறார்கள். ''கட்டுப்படுத்தக் கூடாதா?'' என்று சென்னை போலீஸ் கமிஷனர் திரு ஸ்ரீபாலைச் சந்தித்துக் கேட்டபோது:

''எல்லாத் தொல்லைகளுக்கும் காரணம் போலீஸ் லைசென்ஸ்தான் என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இந்த ஓசைப் பிரச்னை ஒரு சமுதாயப் பிரச்னை. சென்னையின் மொத்த ஜனத் தொகை முப்பத்தைந்து லட்சம். அதில் சேரிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டும் பதினொன்று லட்சம். வசதி படைத்தவர்கள் ஒரு பார்க்குக்கோ, பீச்சுக்கோ போகலாம். சினிமா பார்க்கலாம். ஆனால் வறுமைக் கோட்டுக்கு ரொம்பவும் கீழே உள்ள பலருக்கு எந்தப் பொழுது போக்கும் கையைக் கடிக்கும். அவர்களுக்குப் பிரதான பொழுதுபோக்கு செக்ஸ்தான். இதனால் அதிகக் குழந்தைகள்; மேலும் அதிகரிக்கும் வறுமை. அதை விட்டால் ஒலி பெருக்கியில் சினிமாப் பாட்டுக் கேட்பது தான் அவர்களுக்குப் பொழுதுபோக்கு. எனவே விரும்பி வரவேற்கிறார்கள்.

போலீஸ் இதுபோன்ற விழாக்களுக்கு லைசென்ஸ் வழங்கும்போது சில நிபந்தனைகளை விதிக்கிறது. மார்கழி, ரம்ஜான் போன்ற விழாக்கால சமயங்களில் ஒரு மாதம் — குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் ஒலிபரப்பலாம். குடியரசு தினம், சுதந்திர தினம் போன்றவற்றுக்கும் ஒலி பெருக்கி லைசென்ஸ் வழங்குகிறோம். பொதுக் கூட்டங்கள் நான்கு மணிநேரம்வரை நடத்த லைசென்சு உண்டு. இப்போது இதற்குக் கட்டணம் இல்லை. இலவசம்தான்.

இந்த ஓசைத் தொல்லையிலிருந்து விடுபட அரசு, மதத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தலாம். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகச் சத்தம் போடுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு கடவுள் நமக்குக் கருணை காட்டுவார் என்று பாமர மக்கள் எண்ணுகிறார்களோ என்னவோ! மனமாற்றம் ஏற்பட மதத் தலைவர்கள்தான் உதவ வேண்டும்.


சட்ட ரீதியாக ஆணைகளில் திருத்தங்கள் கொண்டு வந்தாலொழிய லைசென்ஸ் வழங்குவதை நாங்கள் அதிகமாகக் கட்டுப்படுத்திவிட முடியாது.

ஏழை மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் பொழுதுபோக்கு அம்சங்கள் தரவேண்டும். உதாரணமாக மாநகராட்சி திறந்தவெளி திரையரங்கு அமைத்து, சினிமா காட்டலாம். பூங்காக்களில் தொலைக் காட்சிப் பெட்டிகள் அமைக்கலாம். இதனால் அவர்களுக்கு ஒலி பெருக்கி இசையில் நாட்டம் குறையலாம்.

பொது ஸ்தாபனங்களும் அரசியல் தலைவர்களும் மக்களுக்கு அவர்களது உரிமைகளை மட்டும் எடுத்துச் சொல்லாமல் அதோடு அவர்களின் பொறுப்புக்களையும் எடுத்துச் சொல்ல வேண்டும். பள்ளிகளில் ஆசிரியர் பெருமக்கள் குழந்தைகளிடம் பொறுப்புணர்ச்சியை வளர்க்க முயல வேண்டும். குழந்தைகள் மூலம் அவர்களின் பெற்றோரும் தெரிந்துகொள்ளக் கூடும்.

விஷயம் தெரிந்த மெத்தப் படித்த செல்வந்தர்களே கார் ஓட்டுகையில் வீதிகளில் ஹாரனை ஒலித்துக் காதைக் கிழிக்கிறார்கள் என்றால் ஏழைப் பாமரர்களை நாம் எப்படிக் குறைகூற முடியும்?


பேட்டி: ''சிக்கி''



Kalki Shopping Page

மெட்ரோபாலிடன்
மாவரைக்கும் இயந்திரங்கள்

- நீடித்த உழைப்பு • நிகரற்ற அமைப்பு
- உங்கள் இல்லத்திற்கு உறுதுணையானது



அளவுகள் : 1 லிட்டர் முதல் 20 லிட்டர் வரை

Metropolitan Industries
72, Sastry Road, Coimbatore-641009
Phone : 32396

வியாதிகளைப் போக்கி
வெற்றிகளைக் குவிக்கின்ற

ஆழ்நிலை தியானம்

(தபால் வழி போதனை முறைப் பயிற்சி)

அன்றைய மனிதர்கள் ஆரோக்கிய உடலையும், அதிக ஆயுளையும், ஆனந்த வாழ்வையும் எல்லாம் பெற்றனர் என்ற உண்மையைக் கூறுகின்ற உயர் கலை இது. எத்தர வியாதியையும் எடுத்தெறிந்து சுகம் கொடுக்கும் கலை இது ஒன்றே.

கற்றவர் களி கொள்வார் — காலமெல்லாம் சுகம் காண்பார். நெடுங்காலம் நீடு வாழ்வார். எதற்கும் அஞ்சிடா நெஞ்சுரம் கொண்டிடுவோர். வறுமையை வென்றிடுவார். வாட்டத்தைக் களைந்திடுவார். இப் பயிற்சியில் தரும் கருத்துக்கள் தங்க நிகர் முத்துக்கள். எவரையும் நலப் படுத்தும் வளமான முறைமைகள்.

இந்த வாய்ப்பினைப் பயன் படுத்தி — இவ்வரிய கலை பயின்றிடுவீர் — இனிய வாழ்வு படைத்திடுவீர். சேரும் முறையும் செலுத்தும் கட்டணமும் அறிய — 50 ந.பை. தபால்தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரிணைத்து 10-1-81 தேதிக்குள் மனுச் செய்து கொள்ளுங்கள்.


பிரபல ஜோதிடர் — ஜோதிட ஆசிரியர்
ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி
பிளாட் நெ. 204, கதவு எண். 5,
அண்ணா நகர், மதுரை — 625020

நாடெங்கும் புகழ் பெற்ற **சாலிடேர்** டெலிவிஷனுக்கு

தமிழகத்தின் தனிப்புகழ் பெற்ற

சூப்பர் டீலர்

ஏஜென்ஸீஸ் & ஏஜென்ஸீஸ் A/C



18, தெற்கு உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை-17.
போன் : 440004/440725

Solidaire
SOLID STATE TV - that seldom fails!

"சாலிடேர்" டிவிக்குரிய அனைத்து துணை சாதனங்களையும், மிக நியாயமான விலையில் தருகிறோம். இவைகளின் உற்பத்தியாளர்களாகவோ அல்லது டீலர்களாகவோ நாங்களே இருப்பதால் இவை தரத்தில் மிக உயர்ந்தவை.

அமைதியான வீடு. வரவேற்பறையில் கலையுணர்வு தெரிகிறது. ஒரு சின்ன ஸ்டூலில் தோகை விரித்தாடுகிற பித்தளை மயில், ஸிம்பாலிக்காகத் தோன்றுகிறது. பார்த்துக் கொண்டிருக்கிறபோதே தெளிவான சிரிப்போடு வருகிறார் சித்ரா. கூடவே ஏதோ வாத்தியத்தின் தந்திகளைச் சரிப்படுத்திக் கொண்டே விசுவேசுவரன். அந்த வாத்தியத்தின் வித்தியாசமான அமைப்பில் கவரப்பட்டு, 'என்ன வாத்தியம் அது?' என்று கேட்டால் அதே புன்சிரிப்போடு சரளமாகப் பேச ஆரம்பிக்கிறார் விசுவேசுவரன்.

அதன் பெயர் சந்தூர். காஷ்மீர் பக்கத்து வாத்தியம். அதைத் தவிர வீணை வாசிக்கவும் தெரியும். க்ளாஸிக் கிடாரில்



• சித்ரா விசுவேசுவரன், இந்துமதி

சித்ரா விசுவேசுவரனுடன் சில நிமிடங்கள்....

இந்துமதி—

தேர்ச்சி பெற்றவர். லண்டனில் ட்ரினிட்டி கல்லூரியில் மேஜர் பட்டம் பெற்றவர். தற்போது எம். எஸ். விசுவநாதனின் குழுவில் வாசிக்கிறார். இசை மீது ஏற்பட்ட ஒரு அபரிமிதமான தாகத்தால் தம் சி. ஏ. பட்டம், வேலை எல்லாவற்றையும் உதறினவர்.

கணவன் — மனைவி இரண்டு பேரும் சங்கீதம் — நாட்டியம் இரண்டிலும் தேர்ச்சி பெற்றிருப்பது அபூர்வமான விஷயம் மட்டுமில்லை, ஆச்சரியமான விஷயமும் கூட.

கேட்டதும் பரவசத்துடன் சொல்கிறார் சித்ரா:

''ஆச்சரியம் மட்டுமில்லை. என் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். முதலில் நான் கல்யாணத்தைப் பற்றியே நினைக்கவில்லை. அப்படியே கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் என் நடனத்தை ரசிப்பவராக—அதற்கு ஆதரவு தருபவராக இருக்கிற ஒருவரைத்தான் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். யதேச்சையாக ஒரு நண்பரின் வீட்டில் இவரைச் சந்தித்தேன். இவரின் நாட்டிய ரசனை மட்டுமில்லாமல் சங்கீத ரசனையும் என்னைக் கவர்ந்தது. அவர்கள் குடும்பமே சங்கீதக் குடும்பம். ஜி. என். பி. இவருடைய மாமா. அப்படிப்பட்ட கலையார்வம் மிகுந்த ஒரு குடும்பத்திலிருந்து வந்த இவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டது என் அதிர்ஷ்டம்தானே?''

''சரி, உங்களுக்கு நாட்டியத்தில் ஈடுபாடு ஏற்பட்டது எப்படி?''

''நாட்டியம் என் ரத்தத்தில் கலந்தது. என் அம்மா ஒரு டான்ஸர். அப்பா பிரமாதமான ரசிகர். நான்கு வயதிலிருந்தே 'பாலே' கற்றுக்கொள்ள ஆரம்பித்தவள் நான். அப்போது நான் லண்டனில் இருந்தேன். அதன் பின் அப்பாவுக்குக் கல்கத்தாவில் மாற்றம் கிடைக்கவே, அங்கே கதகளி, மணிப்புரி கற்றுக்கொண்டேன். பின்பு தஞ்சாவூர்க்காரரும் பிரசித்தி பெற்ற நடனமணியுமான டி. ஏ. ராஜலக்ஷ்மியிடம் பரத நாட்டியம் கற்றுக் கொண்டேன். அப்புறம் வழுவூர் ராமையா பிள்ளையிடம் பயின்றேன். பதினோராவது வயதில் அரங்கேற்றம் நடந்தது.''

''அப்படியெல்லாம் பயின்று இன்று நீங்களே மிகப் பிரபலமாகி இப்போது கிருஷ்ணகான சபையினரால் சூடாமணி என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட இருக்கிறீர்கள். என் வாழ்த்துக்கள். அதுசரி, உங்கள் நிகழ்ச்சிகளில் பின்னணிக் குரல் ஏன் ஓர் ஆணின் குரலாக இருக்கிறது?''

''இதற்குக் காரணம் பெண்களில் பின்னணி பாடுபவர்கள் மிகவும் குறைவாக இருப்பதுதான். அதுவும் பெண் பின்னணிப் பாடகியானால் சில அசௌகரியங்கள் வந்து சேர்கின்றன. குடும்பத்தையும் சேர்த்துக் கவனிக்க நேரிடுவதால் குறிப்பிட்ட நேரத்துக்குப் பிராக்டீசுக்கு வரமுடியாமல் போகிறது. சில சந்தர்ப்பங்களில் வெளியூர் நிகழ்ச்சிகளுக்கும் வர இயலாமல் போகிறது. அதுவுமில்லாமல் ஓர் ஆணின் குரல் பெண்ணின் குரலுக்கு எந்த வகையிலும் குறைந்ததில்லை என்பது என் அபிப்பிராயம்.''

''ஆனால் ஓர் ஆணின் நாட்டியத்துக்கும் பெண்ணின் நாட்டியத்துக்கும் அந்த வித்தியாசம் இருக்கிறதே? பெண் ஆடுவதில் இருக்கிற நளினமும் அழகும் ஆண் ஆடுகிறபோது இல்லை என்று சொல்லப்படுகிறதே... இது ஏன்?''


''அப்படிச் சொல்லிவிட முடியாது. இங்கு நிறைய ஆண்கள் நன்றாகவே ஆடுகிறார்கள். கோபி கிருஷ்ணா, தனஞ்செயன் போன்றவர்கள் சோபிக்கிறார்கள். ஆனால் ஒன்று,

கராத்தே பயிற்சி 17

பயிற்சியாளர் : டோனி பொன்னையா

சித்திரம் : [signature] படம் : உத்ரா

தயாரிப்பு : குண்டுமணி



× பின்புறத் தாக்குதல்



× முன்புறத் தாக்குதல்



முழங்கை தாக்குதல்!
[Elbow Strike]

முழங்கைத் தாக்குதலால் மிக அருகிலுள்ள எதிரியைத் தாக்குவது எளிதானது. அதில் பலவகை உண்டு. மேல்புறம் நோக்கித் தாக்குதல், பக்கவாட்டில் தாக்குதல், பின்புறம் தாக்குதல் ஆகியவை.

ஒரே நேரத்தில் முன்புறமும் பின்புறமும் வரும் இரு எதிரிகளைத் தாக்குவதற்கு, இரு எதிரிகளை முறியடிப்பதற்கு இந்தப் பயிற்சி முறை உதவும்.

ஓர் ஆண் ஆடுகிறபோது ஆண்மையோடு ஆடினால்தான் எடுபடும். பெண்ணின் நெளிவு குழைவுகளோடு ஆடுகிறபோதுதான் அந்த வித்தியாசம் தோன்றும்.''

''பாலே நடனங்களில்கூட நிறைய Folk Music — நாட்டுப் பாடல்களை உபயோகப் படுத்துகிறார்கள். ஆனால் பரதத்தில் மட்டும் ஏன் நாட்டுப் பாடல்களை உபயோகப்படுத் துவதில்லை?''

''ஏன், குறவஞ்சியை உபயோகப்படுத்து கிறோமே! அது நாட்டுப் பாடல்தானே?''

''அது ஒன்றைத் தவிர?''

''ஐயம் ஸாரி. நாட்டுப் பாடல் என் னுடைய நடன அமைப்புக்கு ஒத்து வராது என்பதுதான் என் அபிப்பிராயம்.''

''இங்கே நிறையப் பேருக்கு Choreography என்றால் என்ன என்றே தெரியவில்லை. மேடை யைச் சுற்றிச் சுற்றி வந்தாலே Choreography என்று நினைத்துக் கொள்கிறார்களே...?''

''நீங்கள் சொல்வது ஓரளவு சரிதான். இங்கே Chorecgraphy நிறையப் பேருக்கு வரு வதில்லைதான். அதற்கு முக்கிய காரணம் அழ குணர்ச்சியை மனத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும். பாலே ஓரளவு தெரிந்திருப் பதும் நல்லது. சின்ன வயதிலிருந்தே கொஞ்சம் ஈஸ்தடிக் சென்ஸை வளர்த்துக் கொண்டால் இது சுலபமாகிவிடும். பரதம் என்பது வெறும் நாட்டியம் மட்டுமில்லை. அடிப்படையாக அதற்கு நிறையத் தேவைப் படுகிறது. இலக்கியம், சங்கீதம், அழ குணர்ச்சி, புத்திசாலித்தனம் எல்லாமே தேவைப்படுகின்றன.

''கடைசியாக ஒரு கேள்வி. பரதம் ஆடுகிறவர்கள்கூடச் சில நாட்களில் உடம்பு பருத்து விடுகிறார்களே, அது ஏன்?''

''இதற்கு முக்கிய காரணம் ஆடி ஆடித் தசைகள் நன்றாக வலிவு பெற்றுவிடுவது தான். முக்கியமாக இடுப்புத் தசைகளும், கால் தசைகளும், புஜங்களும் நிச்சயம் நல்ல வலிமை பெற்று விடுகின்றன. இதைத் தவிர அளவுசியத் தசை போட்டால் அது உடல் வாகையும், சாப்பாட்டுப் பழக்கங்களையும் பொறுத்ததாகத்தான் இருக்கும்.''

அதன் பின் சித்ரா ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் தமக்குப் பரிசாகக் கிடைத்த சில விக்கிரகங்களைக் காட்டுகிறார். ஒரே மாதிரி நாலிலும் பட்டிலும் வாங்கின சம்பத் திய புடவைகளைக் காட்டுகிறார். போட்டோ ஆல்பம், கலங்காரி வேலைப்பாடுகள்... எல்லா வற்றையும் பார்த்து முடித்ததும் இரு விக வேகவரன் ஸந்தூரில் அற்புதமாக ஒரு பாடலை வாசித்துக் காட்டுகிறார்.

சலங்கை சத்தமும், வீணை சத்தமும் அந்த சந்தூர் இனிமையும், கிடார் நாதமும் ஒன்றாக இணைந்து வெளிப்படுகிற அந்த அற்புதமான தம்பதிகளிடமிருந்து பிரிய மனமில்லை தான். ஆனாலும் என்ன செய்வது? வெளி யில் வந்த பின்னரும் அந்த இசையும் நாட்டிய மும் கேட்கிற மாதிரி தோன்றினால் அது என் பிரமைதான்.

புகைப்படம் } உத்ரா
மேலட்டை வண்ணப்படம் }

முறைக்குக் கொண்டு வராமல் அரும் பணியாற்றி வரும் தமிழக அரசுக்குத் தாராளமாகவே மார்க் போடுங்கள்!

பீகார் சிறைச்சாலையில் விசாரணைக் கைதிகள் குருடர்களாக்கப்படுகிறார்கள் என்ற செய்தியை வெளியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸின் வீரத்தை எண்ணி மகிழ்ந்திருந்தோம். ஆனால் 'எக்ஸ்பிரஸ்ஸை விடத் தாம் பெரிய வீரர்' என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார் பீகார் முதல்வர் மிச்ரா. ''87 விசாரணைக் கைதிகள் குருடர்களாக்கப்பட்டனர் என்ற செய்தி முழுப் பொய்; அபார கற்பனை'' என்று மறுத்துரைத்த கையோடு, ''உண்மையில் 31 விசாரணைக் கைதிகள்தாம் குருடாக்கப்பட்டனர்'' என்ற தகவலை வெளியிட்டார் இந்த மனிதாபிமானி! அது மட்டுமா? இந்த அநீதிக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கிறேன் என்று ஆரம்பித்து, ''சுறுக்களை விட்டுவிட்டார் மீன்களே பழி வாங்கப் படுகின்றன'' என்ற புகாருக்கும் இடமளித்திருக்கிறார். போதாக் குறைக்கு அவர் எடுத்த நடவடிக்கைகள் அநீதியானவை என்று போலீஸ் இலாக்காவிலேயே எதிர்ப்பும் கிளர்ச்சியும் தோன்றியிருக்கிறது. அடேயப்பா! மிச்ராவின் திறமும் துணிச்சலும் வேறு யாருக்கு வரும்? யாருக்கு எவ்வளவு மதிப்பெண் போடுகிறீர்களோ என்னவோ மிச்ராவுக்கு நூற்றுக்கு நூறு கொடுத்து விடுங்கள்!

சாமியாரின் மாமியார்! நாடக விமர்சனம்

விமலாவின் ஆவி என் எதிரே தோன்றி 'என்ன நாடக விமர்சனம் எழுதப் போகிறாயா? நல்லபடியாகத்தானே எழுதுவாய்?' என்று கேட்டது.

நான் கைகளைப் பிசைந்து கொண்டு தவித்தேன். ''ஐயோ! நான் என்ன பண்ணுவேன்? எனக்கு நல்லபடியாக எழுத வராதே! என் கையெழுத்து மகா மோசமாயிற்றே'' என்று நடுங்கினேன்.

''அட சட்! அறுவை ஜோக் அடிக்காதே! 'நாடகம் நன்றாக இருந்தது' என்று எழுதுவாயா மாட்டாயா?'' என்று அதட்டியது ஆவி.

''மாட்டேன்... இல்லை இல்லை மாட்டுவேன்... இல்லை... மாட்டிடறேன்'' என்று உளறினேன்.

விமலாவின் ஆவி சிரித்துவிட்டது. எனக்கும் சற்று தைரியம் பிறந்தது. ''நாடகம் நிஜமாகவே நன்றாக இருந்தது விமலா. மாமியார்-கணவர் கொடுமை காரணமாக பெண் தீக்குளிக்கும் செய்திகள் பலவற்றைப் படிக்கிறோம். மெரினா, 'பெண்கள் பயப்படக்கூடாது. கொடுக்க வேண்டிய மரியாதையைத் தர வேண்டும். அடக்குமுறை அளவுக்கு மீறினால் எதிர்க்கவும் தெரிய வேண்டும்' என்கிறார். நல்ல கருத்தை நகைச்சுவையுடன் அளிக்கும் போது வரவேற்க வேண்டியதுதானே?



''உன் மாமனாராக நடித்த சுந்தரம் அபாரமாக, ரொம்ப இயல்பாக நடித்தார். அடுத்த பாராட்டு உன் தம்பி வேஷமேற்ற விட்டல் பத்மனாபனுக்குத்தான். மற்றவர் அளித்த ஒத்துழைப்பில் பழுதில்லை. உன் மாமியாராகத் தோன்றிய காமாட்சி கொஞ்சம் ஓவர் தான். ஆனால் நகைச்சுவை பரிமளிக்க அது அவசியமாயிருக்கிறதே!''

''அதெல்லாம் இருக்கட்டும். என் நடிப்பு பற்றி என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டது விமலாவின் ஆவி.


''பிரமாதம் போ! தாம் தூம் பண்ணி நாடகச் சுவையைக் கெடுக்காமல் அளவோடு அழகாக உன் தங்கையைப் பிடித்துக் கொண்டு ஆட்டுவித்தாயே! நீ வாழ்க! உன் தங்கை ஜெயந்தியாகத் தோன்றிய விஜயப் பிரியாவும் ஜமாய்த்து விட்டாரே!''

''நீ இவ்வளவு தூரம் பாராட்டி என்ன பிரயோஜனம்? ஆ. வி. பொன் விழாவில் இந்த ஆவியை வாழ்த்தி ஒரு மாலை போடக் கூட யாருக்கும் தோன்றவில்லையே! எத்தனை விகடன் வாசகர்களை நான் மகிழ்வித்திருக்கிறேன். என்னை மறக்கலாமா? நான் பெருமைக்குச் சொல்லிக்கொள்ளவில்லை. வருத்தப்பட்டுப் பேசுகிறேன். ஓடிப்போன ஆவியானால்கூட ஒரு மங்கல நாளில் வரவேற்கும் காலமில்லையா இது?'' என்று கேட்டது விமலாவின் ஆவி.

''ஆ. வி. பொன்விழாதான் முடிந்து விட்டதே! நாடகத்தின் பொன் விழாவிலாவது உன்னைக் கௌரவிக்கிறார்களா, பொறுத்திருந்து பார். இல்லையேல், ஆவி உலகப் பத்திரிகையில் உன் தாபத்தை வெளியிட்டு ஒரு கட்டுரை எழுதிவிடு! உன் மனக்கொதிப்பு அடங்கிவிடும்'' என்றேன்.

''நல்ல யோசனை'' என்று கூறி மறைந்தது விமலாவின் ஆவி.

-குட்டி கிருஷ்ணன்


இப்போதைக்கு 51 ஆச்சு!
திருப்தி தானே!
அஞ்சையா
கோஷ்டிப் பூசல்
நிமிர்ந்த நடை! நேர் கொண்ட பார்வை!.. ரஷ்ய அதிபராச்சே!
ஆப்கன் ஆக்கிரமிப்புக்கு கண்டனம்—
இந்திரா


உன்னுடைய பாதுகாப்புக்குத் தான்.. இதெல்லாம்!
தேசிய பாதுகாப்புச் சட்டம்
ஜெயில் சிங்



வெந்து தணிந்த காடுகள்

இந்திரா பார்த்தசாரதி

6

அவளுக்கும் அருணுக்கும் இடையே ஒரு மௌனச் சுவர் எழும்பி விட்டது என்பதை விம்மி உணர்ந்தாள். தேவையா விருந்தாலொழிய அருண் அவளிடம் பேசுவதில்லை.

இந்த வாக்குவாதம் நிகழ்ந்து இரண்டு நாள் கழித்து அருண் அவளிடம் சொன்னான்: "இன்னிக்கு ராத்திரி 'அஷோகா'லே பார்ட்டி... நீ வரணும்னு நான் வற்புறுத்தலே... பட் இஃப் யூ ஃபீல் லைக்..."

"நான் வரவேண்டியது அவசியம்தானா?"

"ஓ.கே.... தாங்க்யூ.... அவசியமில்லை" என்று கூறிவிட்டு அவன் போய் விட்டான்.

இதற்குப் பிறகு அவன் அவளைக் கூப்பிடுவதை விட்டு விட்டான். வீட்டில் விருந்து கொடுப்பதும் நின்று போய் விட்டது. அவன் இரவில் நேரம் கழித்து வருவதினின்றும் விருந்து நடந்திருக்க வேண்டும் என்று அவள் யூகித்துக் கொள்வாள்.

இனி அவள் நேரம் அவளுக்குத்தான் சொந்தம் என்ற நிலையில் அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தனக்கு விருப்பமில்லாத காரியங்களைச் செய்ய வேண்டாம் என்ற சுதந்திர உணர்வுடன் மிஸஸ் பரூட்டி 'இன்டர் நேஷனல் சென்டர்' விருந்துக்கு அழைத்தபோது வர மறுத்து விட்டாள். "ஏன்" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் மிஸஸ் பரூட்டி. "ஏன் என்று காரணம் சொல்ல முடியாது. இந்த மாதிரி விருந்துகளில் கலந்து கொள்வது எனக்கு வெறும் கால விரயமாகத்தான் படுகிறது." மிஸஸ் பரூட்டி பதில் கூறாமல் போய் விட்டாள். அன்றைய விருந்தில் அவளைத்தான் விவாதித்திருப்பார்கள் என்பது அவள் அறிந்த விஷயம்தான்.

ஒரு நாள் செய்தித் தாளில் 'ரவீந்திர பவனில்' நடந்து கொண்டிருந்த சர்வதேசிய ஓவியக் கண்காட்சி பற்றி விமர்சனம் வந்திருந்தது. இந்தியப் பிரிவில் வைக்கப்பட்டிருந்த தாமோதரனுடைய ஓவியங்கள் பற்றி மிகவும் சிறப்பாகக் குறிப்பிட்டிருந்தார் அந்த விமர்சகர்.

சாயந்திரம் போய்ப் பார்ப்பதென்று தீர்மானித்தாள் விம்மி. தாமோதரனும் அங்கு இருக்கக் கூடும்.

அவனைச் சந்திக்க வேண்டும் என்று பல சமயங்களில் நினைத்ததுண்டு. ஆனால் இந்தச் சந்திப்பு எதேச்சையாக ஏற்படுவதாக இருக்க வேண்டுமேயன்றி வலுவில் அவளாகவே போய்ப் பார்ப்பதாக இருக்கக் கூடாது. அவள் இரண்டு மூன்று தடவைகள் 'இன்டர் நேஷனல் சென்ட'ருக்குச் சென்ற போது நூல் நிலையத்தில் அவன் இருக்கலாமென்று நினைத்தாள். அவன் இல்லை. 'லௌஞ்சி'லும் அவன் இல்லை.

அவளுக்கும் அருணுக்குமிடையே இந்த 'மௌனச் சுவர்' எழுந்ததற்கு அன்று அவள் தாமோதரனைச் சந்தித்தது ஒரு காரணம் என்று சொல்லலாம். அவனுடன் அன்று அவள் பேசியிராவிட்டால், அருணுடன் அந்த வாக்குவாதம் ஏற்பட்டிருக்காது என்று தான் தோன்றுகிறது. அவளுக்குள் இருக்கும் ஆற்றல் வெளிப்பட வேண்டுமென்றால் முயற்சி அவளுடையதாகத்தான் இருக்க வேண்டும் என்று தாமோதரன் கூறினான்.

அதற்குத் தேவையான அவகாசம் அவளுக்கும் கிடைத்தது. அவள் ஓவியம் வரைய ஆரம்பித்தாள். வண்ணச் சேர்க்கையைப் பற்றிய பிரக்ஞை இயற்கையாக அவளுக்கு அமைந்து விட்டது போல் தோன்றிற்று விம்மிக்கு. தாமோதரனிடம் அவள் வரைந்த படங்களைக் காட்ட வேண்டுமென்ற ஆசை அவளுக்கு எழுந்தது. ஆனால் அவனோடு எப்படித் தொடர்பு கொள்வது என்பதுதான் பிரச்னை.

இன்று சாயந்திரம் தாமோதரன் ரவீந்திர பவனுக்கு வந்திருந்தால், அவனை அழைத்துக்கொண்டு வந்து காண்பிக்கலாம். ஒரு மிகச் சிறந்த சைத்ரிகனிடம் காண்பிக்கத் தகுதி வாய்ந்தனவா இந்தப் படங்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டவுடன் அவளுக்கு லேசாக ஓர் அச்சம் உண்டாயிற்று. தாமோதரன் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகக் கூறக் கூடியவன். இது ஒரு வகையில் நல்லது. அவளுடைய எதிர்காலத்தை நிர்ணயம் செய்ய இது உதவலாம்.

அவள் ஓவியம் வரைகிறாள் என்பது அருணுக்குத் தெரியாது. இதைப் பற்றி அவனிடம் சொல்ல வேண்டியதும் அவசியமாக அவளுக்குப் படவில்லை. இலக்கியம், நுண்கலைகள் இவற்றைப் பற்றிய அவனுடைய ரசனை அவளுக்குத் தெரிந்த விஷயந்தான்.

அவள் உள்ளே சென்று அவள் வரைந்திருந்த படங்களை எடுத்துக் கொண்டு வந்து பரிசீலனை செய்தாள். நாலைந்து படங்கள் அவளுக்கு உண்மையாகவே திருப்தி அளித்தன.

வாசல் மணி ஒலித்தது. யார் இந்த நேரத்தில் வரப் போகிறார்கள்? அவள் படங்களை சோபாவில் வைத்துவிட்டு வாசற் கதவைத் திறந்தாள்.

அருண்!.... அவனை இந்த நேரத்தில் எதிர் பார்க்கவேயில்லை.

அவன் உள்ளே வந்ததும் அவனுடைய பார்வை சோபாவில் வைக்கப்பட்டிருந்த படங்கள் மீது சென்றது.

அவன் ஒரு படத்தை எடுத்துப் பார்த்தான்.

''நீ வரைஞ்ச படங்களா?''

விம்மி பேசாமல் இருந்தாள்.

அருண் அந்தப் படத்தைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தான். பிறகு கீழே வைத்து விட்டான். மற்ற படங்களை அவன் பார்க்கவில்லை.

''இன்னி சாயந்திரம் நான் பம்பாய்க்குப் போகிறேன்'' என்றான் அருண்.

அவன் அந்த நேரத்தில் வீட்டுக்கு வந்த தன் காரணம் அவளுக்குப் புரிந்தது.

''வர ரெண்டு நாளாகும்'' என்று சொல்லிக்கொண்டே அவன் உள்ளே சென்றான்.

அவன் சிறிது நேரம் கழித்து 'சூட்' கேசுடன் ஹாலுக்கு வந்தான்.

''ஸோ.... ஒரு பெரிய ஆர்டிஸ்டா ஆகப் போறே?'' என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தான்.

''பெரிய 'ஆர்டிஸ்டா' ஆகப் போறேனோ இல்லையோ தெரியாது... படம் போடறது எனக்குத் திருப்தியா இருக்கு....''

''ஐ ஸீ'' என்று சொல்லியவாறு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

''படம் எப்படி இருக்கு?'' என்றாள் விம்மி.

''நன்னா இருக்கு.... யாரானும் ஃபோன் பண்ணா, நான் பம்பாய் போயிருக்கேன்னு சொல்ல வேண்டாம். அஃப் கோர்ஸ், நான் பம்பாய் போயிருக்கிறது தெரிஞ்சவங்க, ஃபோன் பண்ண மாட்டாங்க...''

அவள் சோபாவில் வைத்திருந்த படங்களை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

அவள் திரும்பி ஹாலுக்கு வந்ததும், அருண் சொன்னான், ''ரமேஷ் வேலையை ராஜினாமா பண்ணிட்டு 'துபாய்' போயிட்டானாம்... அநேகமா ராதிகாவிடமிருந்து பிரிஞ்ச மாதிரிதான்....''

சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது.


''ராதிகாவும் என்னோட பம்பாய்க்கு வரா... ஒரு முக்கியமான 'பிஸினஸ் டீல்!'' என்று சொல்லிவிட்டு அவளை உற்றுப் பார்த்தான் அருண்.

விம்மி வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அருண் எழுந்திருந்தான். ''சரி... நான் அப்போ வரட்டுமா?''

அவன் போன ,பிறகு விம்மிக்கு எதற்கென்றே தெரியாமல் திடீரென்று அழுகை வந்தது. 'படம் எப்படி இருக்கு?' என்று அவள் கேட்டிருக்கக் கூடாது. ஓரளவு அவளை அவனுடன் சமரசப்படுத்திக் கொண்டது போலாகி விட்டது.

அவள் அப்படிக் கேட்டதின் காரணமாகத்தான் அவன் வழக்கத்தை விட இன்று கொஞ்சம் அதிகமாகவே பேசினான். ரமேஷைப் பற்றி அவன் சொல்ல இது தான் காரணம். ஒரு



வேளை இவனும் பம்பாய் போனால் திரும்பி வராமலே இருந்துவிடு வானோ? — சே! இது வேறு சூழ்நிலை... இது அவனுடைய வீடு... அவனுடைய உத்தியோகம் பொருளாதார ஈடுபாடுகள் எல்லாம் தில்லியில் தான்.... போவதென்றால், அவள்தான் அவனை விட்டுப் போக வேண்டும். ராதிகாவும் அவனுடன் செல்கிறாள் என்று எதற்காகக் கூறினான்? அவளுடைய பொறுமையைத் தூண்டவா?

அப்பொழுது அவளுக்கு ஓவியம் வரைய வேண்டுமென்ற ஆசை — ஆசையா அல்லது ஆவேசமா — திடீரென்று வந்தது.

'அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்—அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை
வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு — தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும்
உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்...'

அடிக்கடி நெஞ்சை அலைக்கழித்துக்கொண்டிருந்த இவ்வரிகளை வண்ணத்தில் காண வேண்டுமென்ற வெறி. இது சாத்தியமா? இக் கவிதையின் பொருளாக எவ்வளவு உரைகள் எழுதினாலும் அவை வெறும் வார்த்தை விரயம்தான். சொல்லுக்கடங்காத அனுபவத்தை வண்ணத்தில் சிறை செய்ய முயல்வதில் என்ன தவறு?

அவள் தன் அறைக்குச் சென்று தூரிகை வண்ணங்கள் முதலியவற்றை எடுத்து வைத்துக்கொண்டு கண்களை மூடிய நிலையில் இக் கவிதை வரிகளைத் தனக்குத் தானே சொல்லிப் பார்த்தாள்.... இதுதான் சத்திய தரிசனம். தெய்வானுபவத்தைச் சொல்லில் செதுக்கிய மாட்சி.

'நன்றாய் ஞானம் கடந்து போய்
நல்லிந்திரியம் எல்லாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும் பாழ்
உலப்பில் அதனை உணர்ந்து உணர்ந்து
சென்றாங்கு இன்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசை யற்றால்
அன்றே அப்போதே வீடு
அதுவே வீடு வீடாமே...'

அவளுக்குத் தன் உடம்பு பற்றி எரிவது போல் ஓர் உணர்வு... தீயினில் விரலை வைத்த சுகானுபவம். அகத்தினுள்ளே இருந்த பழங் குப்பை வெந்து சாம்பலாகிய பேரின்பம். அவள் தனக்குள் தான் ஆழ்ந்து மெய்சிலிர்த்து ஆனந்தக் கடலில் மூழ்கினாள்.

அவள் கண் விழித்தபோது அவளெதிரே இருந்த தூரிகையும் வண்ணங்களும் அவள் கை ஏவலுக்காகக் காத்திருப்பன போல் தோன்றின.

அவள் எத்தனை நேரம் வரைந்தாள் என்று அவளுக்கே தெரியாது. கனவிலிருந்து மீண்டவள் போல் கடிகாரத்தை நோக்கினாள்.

ஐந்தரை. 'மை காட்... ரவீந்திர பவன் போக வேண்டும்.'

பூர்ணிமா புன்னகையுடன் கேட்டாள்; ''காப்பி கொண்டு வரட்டுமா?''

''காஃபி குடித்துவிட்டு, நான் வெளியே போகிறேன். ஏதாவது ஃபோன் வந்தால், 'சாஹேப் இல்லை' என்று சொல் போதும், ஊருக்குப் போயிருக்கிறார் என்று சொல்ல வேண்டாம்....''

ஏர் போர்ட்டில் அருணை விட்டு விட்டு கார் திரும்பி வந்திருந்தது. டிரைவரை வீட்டுக்கு அனுப்பி விட்டு அவளே ஓட்டிச் சென்றாள்.

சர்வதேச ஓவியக் கண்காட்சியில் அநேகமாக எல்லா நாடுகளும் கலந்து கொண்டிருந்தன. ஒரு நாளில் பார்க்க முடியாது என்று அவளுக்குத் தோன்றிற்று.

அவள் இந்தியப் பிரிவுக்குச் சென்றாள்.

தாமோதரன் ஓர் ஓரமாக உட்கார்ந்திருந்தான். அவன் அவளைப் பார்க்கவில்லை. ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

அவள் அவனை நோக்கிச் சென்றாள்.

''நமஸ்காரம்.''

''ஓ....மிஸஸ் அருண்.''

''விம்மி.... தட் ஈஸ் மை நேம்.''

''ஹௌ ஆர் யூ!''

''ஃபைன்....''

சிறிது நேரம் மௌனம்.

''உங்க படங்களைப் பத்தி 'ரெவியூ' படிச்சேன் இன்னிக்கு.''

அவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். ஒன்றும் கூறவில்லை.

''உங்க படங்கள் எங்கே இருக்கு?''

அவன் கையினால் சுட்டிக் காட்டினான்.


அவனுடைய ஒன்பது ஓவியங்கள் வைக்கப் பட்டிருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம். சிவப்பு; கறுப்பு; வெள்ளை இருள் சாம்பல், கருநீலம், ஆரஞ்சு, மஞ்சள், கண்களைப் பிரமிக்க வைக்கும் பளீர் வெள்ளை. ஒரு தனி நிறத்தின் மூலம் இதயத்தோடு அந்தரங்கமாகப் பேசக் கூடிய ஆற்றல் ஒவ்வொரு ஓவியத்துக்கும் இருந்தது. திடீரென்று அவளுக்கு அப்படங்கள் எவற்றைக் குறிக்கின்றன என்று புரியத் தொடங்கிற்று. ஒன்பது பாவங்கள். ரசங்களின் வெளியீடுகள். ஒவ்வொரு பாவத்துக்குரிய கடவுள். ருத்திரன், காலன் முதலியோர். இந்தத் தெளிவு ஏற்பட்ட நிலையில் அந்த ஓவியங்களைப் பார்த்த போது மறுபடியும் பாரதியின் கவிதைதான் நினைவுக்கு வந்தது. 'அக்னிக் குஞ்சொன்று கண்டேன்....'

அவள் அவற்றைப் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றாள்.

''நானும் என் மனைவியும் வேலைக்குப் போற தாலே சமையல் விஷயத்தில் 'டர்ன்' போட்டுக் கொள்வோம்!''

''எப்படி?''

''இன்னிக்கு நான் சமைத்தால் நாளைக்கு என் மனைவி ஓட்டலிலிருந்து வரவழைப்பாள். இப்படி மாத்தி மாத்தி!'' - அ. ராமதாஸ்



தாமோதரன் எப்பொழுது அவளருகில் வந்து நின்றான் என்று அவளுக்குத் தெரியாது. அவன் குரல் கேட்டதும் அவள் திரும்பினாள்.

''யூ லைக் தெம்?''

''எவ்வளவு கொச்சையான கேள்வி? இன் ஃபாக்ட், நான் உங்களுக்கு நன்றி சொல்லணும்.''

''எதுக்கு?''

''இந்த அநுபவத்துக்கு...''

அவன் அவளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தான். பிறகு புன்னகை செய்தான்.

''இன்னொரு விஷயத்துக்கும் நான் உங்களுக்கு நன்றி சொல்லணும்...''

அவள் சொல்வது புரியாமல் அவன் புருவங்களை உயர்த்தினான்.

''அன்னிக்கு உங்களோட பேசினப்புறம் பல விஷயங்கள் நடந்திருக்கு... ஒண்ணு, நானே என்னைத் தீவிரமா அனலைஸ் பண்ண ஆரம்பிச்சேன். என் மனசுக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்யறதில்லேன்னு ஒரு முடிவு... அப்புறம் எந்த விதத்திலே நான் என்னை 'எக்ஸ்ப்ரஸ்' பண்ணிக்கலாம்னு யோசிக்க 'பெயிண்ட்' பண்ண ஆரம்பிச்சேன். இதுக்கும் நான் உங்களுக்கு நன்றி சொல்லணும்.''

''ஓ!...எனக்கு இப்போ ஒருபோட்டியா?'' என்று அவன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

''நான் உங்களுக்குப் போட்டின்னு நினைச்சீங்கன்னா, எனக்கு இது ஒரு பெரிய பாராட்டு''

''இன்னொரு விஷயம். யாரும் இன்னொருத்தருக்கு நன்றி சொல்லணும்னு அவசியமில்லே... ஒருத்தர்கிட்டே இருக்கிற 'ஸ்பார்க்'கைத் தூண்டி விடறதுங்கிறது, ஒரு எதேச்சையான சம்பவம். விளக்கு 'ஸ்விட்'சுக்கு நன்றி சொல்லணுமா? அது கிடக்கட்டும்... உங்க பெயிண்டிங்ஸை நான் பார்க்கலாமா?''

''ஓ எஸ்... ரைட் நௌ.... நீங்க வர முடிஞ்சா போகலாம்.''

''இப்போவா?'' என்று சொல்லிவிட்டு, அவன் சிறிது நேரம் சிந்தித்தான்.

''சரி... ஓ.கே... போகலாம்'' என்றான். திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவன் போல.

பூர்ணிமா தாமோதரனை ஏற இறங்கப் பார்த்தாள் கதவைத் திறந்தவுடன்.

''எல்லாருக்குமே என்னை ரெண்டாந் தடவை பார்க்காம இருக்க முடியாது'' என்றான் தாமோதரன் புன்னகையுடன்.

மற்றவர்களுக்கு அறிவுரை வழங்கும் இவனுக்குத் தன் உருவத்தைப் பற்றிய பிரக்ஞை ஏன் இன்னும் நீங்கவில்லை என்று விம்மிக்குத் தோன்றிற்று. தன்னைக் கண்டு தானே சிரிக்க முடிவதை ஒரு கவசமாகக் கொண்டால்தான் வாழ்க்கையில் ஒரு தன்னம்பிக்கை ஏற்படுமென்று கருதி இவன் அடிக்கடி இப்படிப் பேசுகிறான் என்று அவளுக்குப் பட்டது. ஆனால் இவனுடன் பத்து நிமிடம் பேசிக் கொண்டிருந்தால், இவன் தோற்றத்தைப் பற்றிய ஆரம்ப அதிர்ச்சி அடியோடு மறைந்துவிடுமென்று இவனிடம் யாரேனும் சொல்லியிருக்கிறார்களோ?



''விசிட்டர் அனந்த் தாடி வளர்க்க ஆரம்பித்தால்...?''

''வசிஷ்டர் அனந்த்னு கூப்பிட ஆரம்பிச்சாலும் ஆரம்பிச்சிடுவாங்க!...'' - உ. ராஜாஜி

அவன் சோபாவில் உட்கார்ந்ததும் அவள் கேட்டாள்: ''என்ன சாப்பிடறீங்க?''

''ஒண்ணும் வாணும், உங்க படங்களைக் கொண்டுவாங்க.''

அவள் தன் அறைக்குச் சென்று ஓவியங்களைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள்.

அவன் ஒவ்வொன்றையும் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்தான். அவள் மத்தியானம் வரைந்த ஓவியமும் அவற்றில் இருந்தது. பூர்த்தி பெறாத அந்தப் படத்தைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

''அதை இன்னும் முடிக்கலே.. மத்தியானம் ஒரு பரவசம் ஏற்பட்டபோது போட ஆரம்பிச்சேன்.''

''பரவசம் ஏற்படக் காரணம்?''

''பாரதி பாட்டு ஒண்ணு ஞாபகத்துக்கு வந்தது. 'அக்னிக் குஞ்சொன்று...''

''அந்தப் பாட்டா....? யாருக்குத்தான் ஏற்படாது, அந்தக் கவிதையைப் படிச்சா? 'பாரதி ஈஸ் எ டோடல் போயட்'.... 'மிஸ்டிக் எக்ஸ்பீரியன்ஸை' இதைக் காட்டிலும் அழகாகச் சொல்ல முடியுமா?.... மிஸஸ் அருண்... இந்தப் படத்தைப் போட்டு முடிச்சப்புறம்தான் நீங்க வெளியிலே கிளம்பியிருக்கணும் இன்னிக்கு... 'இமோஷன்ஸ் ரெகலக்டட் இன் ட்ரான்குலிட்டி 'ங்கிறதெல்லாம் ரெண்டாந்தர கவிஞர்களுக்குத்தான். மறுபடியும் இதே 'இன்டன்ஸிடி' யோட உங்களாலே இந்தப் படத்தைப் போட்டு முடிக்க முடியுமாங்கறது சந்தேகந்தான்'' என்றான் தாமோதரன்.

''ஒரே ஒரு ஆட்சேபணை.''

''என்ன?''

''மிஸஸ் அருண்னு சொல்ல வேணும். விம்மின்னு சொன்னாப் போதும்.''

தாமோதரன் வாய் விட்டு உரக்கச் சிரித்தான். ''ஓ...இதான் ஆட்சேபணையா?''

''சரி... உங்களோட ஓவியங்கள் எல்லாத்தையும் எனக்குப் பார்க்கணும்போலிருக்கு... எப்போ பார்க்கலாம்?''

''ஓ எஸ்.... ரைட் நௌ.... நீங்க வர முடிஞ்சாப் போகலாம்'' என்றான் தாமோதரன் புன்னகையுடன். (தொடரும்)

ஓம் நமோ பகவதே ஞானானந்தாய நம:



''எண்ணறிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்'' என்ற தாயுமானவர் அருள்வாக்கின்படி மக்கள் நன்னெறியில் சென்று பிறவிப் பயனைப் பெற்றுய்ய பிரம்ம ஞானியான **ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள்** வழி காட்டினார். ஸ்வாமிகள் ஆன்மீக நெறி காட்டிய ஒரு பெரிய மஹான். ஆதி சங்கரர் நிறுவிய ஜோதிர் மட பரம்பரையில் வந்தவர். பூரண ஞானி. ஞான சித்தர். யோக யோகி. எளிமையே உருவாகி தன் தூய அன்பால் மக்களைத் தன்பால் ஈர்த்த துறவரசர். ஸ்வாமிகளை நேரில் ஒரு தரம் தரிசித்தவர்கள் ''அநிர்வசனீயம் ப்ரேமஸ்வரூபம்'' என்ற நாரத பக்தி சூத்திரத்தின் உட்கருத்தை உணர்வார்கள். ஸ்வாமிகளை அண்டினோர்க்கு அல்லல் இல்லை. ஞானிகளின் தரிசனம் அரிது என்றுணர்ந்த மக்கள் ஞான தேவனின் தரிசனம் பெற்று ஆன்மீக நெறியில் முன்னேறினர். குன்றின் மேலிட்ட விளக்காய், ஞான ஒளி பரப்பி, அஞ்ஞான இருள் நீக்கி, பக்தர்களை ரக்ஷித்த ஸ்வாமிகள், அவரது மஹா சமாதிக்குப் பின் இன்றும் தபோவனத்தில் அவரது பிருந்தாவனமான அருளாலயத்திலிருந்து அருள் பாலிருக்கிறார். **ஸ்ரீ ஞானானந்த தபோவனத்தில் 1980ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-லிருந்து 23-ம் தேதி வரை** நடைபெறவிருக்கும் **ஸத் குரு ஸ்வாமிகளின் ஏழாவது வருஷ ஆராதனை விழாவில்** பக்தர்கள் பெரும் பங்கு கொண்டு ஸ்வாமிகளின் பேரருளைப் பெற வேண்டுகிறோம்.

பக்தர்கள்

ஸ்ரீ ஞானானந்த தபோவனம்

நிகழ்ச்சி நிரல்

20-12-80 சனிக்கிழமை	காலை :	மஹாருத்ர ஹோமம், வஸோர்த்தாரை
	மாலை :	ஸ்ரீ சண்டி ஹோமம் - பூர்ணாஹுதி
21-12-80 ஞாயிற்றுக்கிழமை	காலை :	ஸ்ரீ ஸ்கந்த ஹோமம்
22-12-80 திங்கட்கிழமை (ஆருத்ரா)	காலை :	ஸஹஸ்ர சங்காபிஷேகம்
16-12-80 முதல் 22-12-80 வரை		ஸ்ரீமத் பாகவதஸப்தாஹம் பிரவசனங்கள் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி அவர்கள், பரனூர்
11-12-80 முதல் 23-12-80 வரை		லக்ஷார்ச்சனை
23-12-80 செவ்வாய்க்கிழமை ஆராதனை		அதிஷ்டானத்தில் விசேஷ அபிஷேக பூஜைகள், பாத பூஜை, ஆராதனை, தீர்த்த நாராயண பூஜை

விழாவின் எல்லா நாட்களிலும் பாத பூஜைகள், ஏகாதசருத்ர ஜபத்துடன் அபிஷேகம், வேத பாராயணம், தேவார பாராயணம் உண்டு.

அத்தியாயம் 20

மன்னிப்பைக்கோரும் அம்மணியை நீண்ட நேரம் உற்றுப் பார்த்த டாக்டர் நல்லசிவம் யோசித்தான். ஒரு மாசுபடாத பெண்ணுகத்தான் அவன் அம்மணியைக் கருதி அவள் மீது மோகம் கொண்டிருந்தான். மோகனுடைய உயிருக்காக அவள் ஓடோடி வந்து முறையிட்டபோது அம்மணி அவனுக்கு ஒரு பிச்சை எடுக்கும் பெண் போலத் தோன்றினுள். மோகன்தான் அவளுடைய பழைய காதலன் என்ற எண்ணம் தோன்றின கணமே, அவள் தன்னை ஏமாற்றிய வஞ்சித்த துரோகியாக உருவம் எடுத்தாள். அதன் பிறகு அவள் அவனைத் தூக்கி எறிந்து பேசி, வெளியேறியபோது ஏமாற்றத்தில் பொறிந்து தன்னும் பெண்ணுகப் பட்டாள். அதன் பிறகு இதுவரை அம்மணி அவனைப் பொறுத்தவரை ஓர் ஆஸ்பத்திரி சிப்பந்தி, வெள்ளை உடை தரித்த ஒரு நர்ஸ். ஒரு டாக்டர் இடும் கட்டளையைப் பதில் பேசாமல் நிறைவேற்ற வேண்டிய ஒரு பணிப் பெண்.

இப்போது ஒரு பெண், ஒரு நர்ஸ், ஒரு பணிப் பெண் அவனுடைய நிழலை, அவ

GH

பி.வி.ஆர்



னுடைய ஆதரவைத் தேடி வருகிறாள். நடந்ததையெல்லாம் மறக்கச் சொல்கிறாள். முதிராத மனத்தில் பதியாத காதலுக்கு மன்னிப்புக் கோருகிறாள்.

ஏன்?

ஏன் இந்தத் திடீர் மாற்றம் அம்மணியின் மனத்தில் உண்டாக வேண்டும்?

அவன்மீதுள்ள அன்பாலா?

காதல் என்ற காரணத்தாலா?

இல்லை.

இல்லவே இல்லை.

அவளுக்குப் புதியதோர் வேலை கிடைத்திருக்கிறது. அதுவும் செல்வம் கொழிக்கும் அரபு நாட்டில்.

அங்கு அவள் சென்றால் இதுவரை எண்ணிப்பாராத அளவுக்குப் பணம் கிடைக்கும். அனுபவித்துப் பார்த்திராத அளவுக்கு வசதிகள் பெருகும். மூன்று ஆண்டு காலத்துக்குப் பிறகு தாய் நாடு திரும்புகையில் பாங்கில் அவளுடைய பணம் நிதியாக வளர்ந்து நிற்கும்.

அம்மணி அரபு நாடுகளில் செல்வம் சுட்டத் துடிக்கிறாள்.

ஆனால் அதே சமயம் பயப்படுகிறாள்.

அவளுக்கு வேண்டியது ஒரு துணை. ஓர் ஆண் துணை.

அவன் ஒருவன்தான் இப்போதைக்குத் தெரிந்த பெயர். பார்த்த முகம்; பழகிய மனிதன்.

அம்மணி அவனை நாடி வரவில்லை. அரபு நாடுகளை மனத்தில் பூகோளப் படமாகத் தீட்டிக்கொண்டு வெளியே கண்ணீர் சிந்துகிறாள்.

என்ன பதில் சொல்ல?

எப்படிப் பதில் சொல்ல?

திடீரென்று அவனுக்குத் தெரிந்த ஒரு நோயாளியின் நினைவு முட்டியது. அந்த நோயாளி எவ்வளவுக்கு எவ்வளவு வெளியே சிரிக்கிறானோ, அவ்வளவுக்கும் உள்ளே விஷம் ஊற்றெடுக்கிறது என்று அர்த்தம். அவன் வார்த்தை ஜாலத்தால் மாயா ஜாலம் செய்கிறவன். கடிப்பான். ஆனால் பல் பட்டது தெரியாது. குத்திக் குதறுவான். கத்தி முனை தெரியாது. இரத்தம் கசியாது.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பிச்சைக்காரன்1 : ஸஃபாரி ஸூட் ஒன்னு தைக்கக் கொடுத்திருக்கேன்!''

பிச்சைக்காரன்2 : ''எதுக்கு அண்ணே..?''

பிச்சைக்காரன்1 : ''சோழா ஹோட்டல் வாசலில் பிச்சை யெடுக்கத்தான்...! அங்கே யெல்லாம் கொஞ்சம் டீஸன்டா போய் நிக்க வேணுமா?''

உ. ராஜாஜி



டாக்டர் நல்லசிவம் அந்த நோயாளியானான். அவனுடைய முருக பக்திக்கும், நெற்றித் திருநீறுக்கும் அர்த்தம் இல்லாமல் போயிற்று.

''ஓகே அம்மணி! நீ மனம் திறந்து பேசியது என் மனச் சுமையை அகற்றிவிட்டது!'' என்றான் அவன்.

அம்மணி மெய் சிலிர்த்துப் போனாள்.

''டாக்டர்!''

''நல்லசிவம் என்றே கூப்பிடு அம்மணி! இது வீடு.''

''நல்லசிவம்... நீங்கள் எவ்வளவு நல்லவர் என்பதை மீண்டும் புரிய வைத்துவிட்டீர்கள்.... இடைக் காலத்தில் நடந்ததையெல்லாம்....''

''ஒரு கெட்ட கனவு என்று மறக்க வேண்டும் என்கிறாய்! மறந்து விட்டேன். போதுமா?''

''நாம் இருவரும் ஒன்றாகப் போக வேண்டும்.''

''போகிறோம்.''

''ஒரே நாளில் ஒரே பிளேனில்....''

''அருகருகே உட்கார்ந்து போகப் போகிறோம் அம்மணி.''

''நன்றி நன்றி நல்லசிவம்!''

''பாஸ்போர்ட், விஸா இதெல்லாம் விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டும், அம்மணி!''

''நீங்கள் உதவி செய்ய மாட்டீர்களா?''

''பின் நான் எதற்கு இருக்கிறேன்.. எல்லா ஏற்பாடுகளையும் நான் செய்து தருகிறேன்! நீ சமாதானமாக இரு....''

அம்மணி பிரமித்துப் போனாள்.

அவளுடைய பிரமிப்பில் தன்னை அறியாமலேயே ஒரு கேள்வியை உதிர்த்தாள்.

''நல்லசிவம்... நாம் தனித் தனியாக அதே சமயத்தில் ஒன்றாகச் செல்வதைவிட, ஒன்றாகவே, நான் வெறும் அம்மணியாக இல்லாமல் செல்ல ஆசைப்படுகிறேன்.''

''ஓ, எனக்குப் புரிகிறது, அம்மணி!''

''நாம் புறப்பட்டுச் செல்ல இன்னும் இருபது அல்லது இருபத்திரண்டு நாட்கள் இருக்கு இல்லையா? அதற்குள் ஒரு நல்ல நாளாகப் பார்த்து, ஒரு கோவிலில் எளிய முறையில்....''

நல்லசிவம் சிரித்தான்.

அம்மணி ஒரு கணம் துவண்டு போனாள்.

''ஏன் சிரிக்கிறேன்னு பார்க்கிறாயா அம்மணி?''

''புரியலே.''

''உனக்கு வந்திருக்கும் ஆர்டரோடு சில விதிமுறைகளை எழுதி இணைத்திருக்கிறார்கள். அதை ஒரு தடவை படித்துப் பார்!''

''என்ன விதிமுறைகள்?''

''டாக்டரும் சரி, நர்சும் சரி கல்யாண மானவர்களாக இருக்கக் கூடாது.''

''ஆமாம், டாக்டர்... நான் மறந்தே போய்விட்டேன். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் விண்ணப்பம் போடறப்போ இந்த விதிமுறைகளைப் பற்றிப் படித்திருந்தேன்!''

''என்னைக் கண்டதும் மறந்து விட்டாய் போலிருக்கு.''

''இப்ப என்ன செய்ய, டாக்டர்?''

''நல்லசிவம்!''



காந்திஜியைத் தென்னாப்பிரிக்காவில் கைது செய்த போது நீக்ரோக்களுக்கென்று ஒதுக்கி வைக்கப் பட்டிருந்த சிறையில் அவரை அடைத்து வைத்தார்கள். அங்கு நீக்ரோக் கைதிகளுக்குக் கொடுக்கப்படும் ஒரு குல்லாயும் அவர் தலையில் மாட்டப்பட்டது. அது தான் பின்னர் பிரசித்தி பெற்ற காந்தி குல்லாயின் முன்னோடி.

-பிரியா பாலு

''நல்லசிவம்?''

''மூன்று ஆண்டு கால ஒப்பந்தம் முடிந்ததும் நாம் திரும்பப் போகிறோம். அதன் பிறகு ஒரு நல்ல நாள் கிடைக்கும். ஒரு கோவிலும் கிடைக்கும்....'' நல்லசிவம் சிரித்தான்.

''நான் வரட்டுமா நல்லசிவம்?''

''போயிட்டு வா... ஒரு சின்ன ரிக்வெஸ்ட்!''

''என்ன?''

''நீயும் நானும் சேர்ந்து ஒரே நாளில் ஒரே பிளேனில் போவது நமக்குள்ளேயே இருக்கட்டும்.''

''அப்படியே நல்லசிவம்.''

''ஜி.எச்.சில் நாம் அடிக்கடி சந்தித்துக் கொள்ள வேண்டாம். ''லில்லியிடம் கூட இதை வெளியிடாதே''

''அவளுக்கு ஏற்கனவே தெரியும். நாம் அன்னிக்குப் பேசி வைத்துக் கொண்டிருந்ததை நான் லில்லியிடம் சொல்லி யிருக்கிறேன்.''

''இனிமேல் வேண்டாம்.''

''ஓகே டாக்டர்.''

''நல்லசிவம்!''

''ஸாரி, நல்லசிவம்! நான் வரேன்!''

அம்மணி அவனுடைய அறையை விட்டு வெளியேறும்போது, மகிழ்ச்சியில் தன் உடம்பு பன்மடங்கு பூரித்துப் போய்விட்டதாகப் பிரமை கொண்டாள்.

ஹாலில் ஜன்னல் அருகே சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த சபாபதி கண்ணுக்குத் தெரியவில்லை.

''அம்மணி!''

குரல் காதில் விழவில்லை.

இரண்டாம் முறையாக சபாபதி ''அம்மணி!'' என்று அழைத்தார்.

அம்மணி நின்றாள்.

''ஐயா, என்னை மன்னிச்சிடுங்க... என்னுடைய உற்சாகத்திலே நான் என்னையே மறந்து ஓடிக் கொண்டிருக்கிறேன்.''

''அவன் என்னம்மா சொல்றான்?''

''சரின்னு சொல்லிட்டார் ஐயா!''

''அப்படியா... அப்ப நான் சொன்னதை அவன் ஏற்றுக் கொண்டு விட்டானா? முருகா! எல்லாம் உன் அருள்... அம்மணி நான் உனக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இவ்வளவு பெரிய வீடு இருக்கு. இதிலே நான் ஒரு பேய் மாதிரி சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். ஆனா இவன் வெளிநாடு போறேன்னு அடம் பிடிச்சான்.... நீ வந்து அவன் மனசை மாத்திட்டே...''

''நானும் அயல் நாட்டுக்குப் போறேன் ஐயா!''

சபாபதியின் விழிகள் குத்திட்டு நின்றன. வார்த்தைகள் வரவில்லை.

''நான் வரேன் ஐயா!''

சபாபதியால் தலையைக்கூட ஆட்ட முடியவில்லை. அம்மணி துள்ளிக்கொண்டு ஓடினாள்.

''ஹாய் லில்லி!''

''என்னடி அம்மணி! உன்னைப் பார்த்து ரொம்ப நாள் ஆன மாதிரி இருக்கு! நேத்துக் காலையிலே போனே....''

''நான் திரும்பிப் பன்னிரண்டு மணிக்கு வந்தப்போ நீ கும்பகர்ணன் மாதிரித் தூங்கிட்டிருந்தே!'' என்றாள் அம்மணி.

''நான் விழிச்சப்போ மணி ஆறு...அப்ப உன்னைக் காணுமே!''

''ஏய் லில்லி! என்னை கன்க்ராஜுலேட் பண்ணுடி... நான் வெளிநாடு போறேன்.''

''ஓ, டாக்டரோடு பகல் பூராவும் சுத்திக்கிட்டிருந்தாயா?''

''ஊஹூம்... நான் மட்டும்தான்... அவன் உன்கிட்டக்கூடச் சொல்லக் கூடாதுன்னான்... ஆனா என்னாலே மறைக்க முடியலே... நீ என் டியரஸ்ட் ஃப்ரண்ட்!''

''என்னடி சொல்லப் போறே... அவன் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளப் போறான்! இதுதானே?''

''அதுவும் உண்டு. ஆனா இந்தியா திரும்பி வந்தப்புறம்! நானும் அவனும் ஒரே பிளேனில் புறப்படுகிறோம்!''

''நான் சொல்லுவதைக் கேட்கிறாயா?''

''என்ன?''

''பிளேன்லே நிறையப் பேர் இருப்பா... பாம்பே வரைக்கும் ரயில்லே போ... அதுவும் பாம்பே மெயில்லே போ... ரெண்டு ராத்திரி கிடைக்கும். எனக்குத் தெரிஞ்சவன் ஒருத்தன் ரெயில்வேயிலே இருக்கான். அவன் கிட்டக் காதைக் கடிச்சு ஒரு கூபே கம்பார்ட்மெண்ட் ஏற்பாடு பண்ணித் தரேன்... கூப்பேன்னு என்ன தெரியுமாடி! இரண்டே இரண்டு பேர் மட்டும்....''

''வழியாதேடி, லில்லி.''

''அர்ஜுன் தெரியுமில்லையா அர்ஜுன்... நீகூட அவன்கூட லஞ்சுக்குப் போனியே!''

''ஆமாம், அவனுக்கு என்ன?''

''அவனுக்கு ஒண்ணுமில்லேயடி... அவன் கூட ஒரு பெண் இருக்காளே... அவ பெயரு ....பெயரு.... ஒரு பூவோடே....''

''மல்லிகா.''

''யெஸ். மல்லிகா... அவள் ஃபாதர் நேத்து ராத்திரி போயிட்டார்.''

''அட பாவமே... மல்லிகா ரொம்ப அழுதாளா?''

''பாடியை மார்ச்சுவரிக்கு அனுப்பினப்புறம்தான் அவங்க வந்தாங்க... நான் ஒரே ஒரு தடவைதான் அவளைப் பார்த்தேன். அர்ஜுன் பக்கத்திலே இருந்தாள். அவள்

தான் மல்லிகான்னு யூகிச்சேன். அழலே. முகம் கலங்கி யிருந்தது. நல்ல அழகியடி அவள்...''

''நான் அவளைப் பார்க்க வேண்டுமே!'' என்றாள் அம்மணி.

''அர்ஜுன் அவளைத் தன் காரில் போட்டுக் கொண்டு போனதாகக் கேள்வி!''

''இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு அவன் ஜி. எச்.சுக்கு வரமாட்டான் இல்லையா?''

''எனக்கு எப்படித் தெரியும்? நீ உன் பிரயாணத்துக்கு ஏற்பாடு செய், அம்மணி! நம்ம நர்சு தொழில்லே பிறப்பும் சாவும் ஒண்ணுதான்!''

''அப்ப ஏன் அழுதே?''

''சில சமயங்களிலே நர்ஸா இருந்தாலும் மனித இருதயம் தலையை நீட்டறதே!''

இரண்டு வாரங்கள் ஓடின.

அம்மணி அடிக்கடி நல்லசிவத்துடன் டெலிபோன் மூலம் தொடர்பு கொண்டாளே தவிர, அவனைச் சந்திக்க முற்படவில்லை. தன்னை அவன் ஜி.எச்சில் சந்திப்பதை அவன் ஒரு தக்க காரணத்தால் விரும்பவில்லை என்றால், அவனுடைய விருப்பத்துக்கு எதிராக நடந்து கொள்வானேன்?

அவளுக்கு பாஸ் போர்ட் வந்தது. விஸா வந்தது.


ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை நேர விமானத்தில் இடமும் பதிவாயிற்று.

இரவு பம்பாய் போய்ச் சேர்ந்தால், இங்கட் கிழமை அதிகாலையில் துபாய் செல்லும் விமானத்தில் அவள் பிரயாணமாவாள். புதியதோர் நாட்டுக்குச் செல்லும் பயம்

இட்டிலியால் ஒரு துலாபாரம்!

அண்மையில் குருவாயூர் கோவிலில் ஒரு நூதன துலாபாரம் நடந்தது. பதினைந்து வயதான ஸ்ரீதேவி துலாபாரத்தில் ஒரு தட்டில் அமர்ந்திருக்க, மற்றொரு தட்டில் அவரது எடைக்குச் சமமாக இட்டிலி அடுக்கி பகவானுக்கு காணிக்கையாகப் படைத்தார் தாயார் சதி அம்மாள். ஸ்ரீதேவி பிறந்து மூன்று வயதாகும் வரை பழம், சோறு ஒன்றுமே சாப்பிடாமல் மிகவும் மெலிந்து இருந்தாள். சதிஅம்மாள் ''மகள் நன்றாக சாப்பிடட்டும்; உன் சன்னதிக்கு வந்து இட்டிலிமட்டும் துலாபாரம் செய்கிறேன்''. என்று வேண்டிக்கொண்டாள். அது முதல் ஸ்ரீதேவி நன்றாகச் சாப்பிட்டு வளர்ந்தாள். திருமணம் செய்யவேண்டும். அதற்கு முன் குருவாயூரப்பனுக்குக் காணிக்கை செலுத்திவிட வந்தனர். பக்தர்கள் ஏராளமாகக் கூடி நின்று இந்த இட்டிலி துலாபாரத்தைப் பார்த்து ரசித்தனர்.

— தகவல்: எஸ். எஸ். மணி



துளிக்கூட அவளுள் ஏற்படவில்லை. நல்லசிவம் உடன் இருக்கும்போது அவள் ஏன் பயப்பட வேண்டும்?

அன்று பிற்பகல் அவள் அவனுடன் தொடர்பு கொள்ள முயன்றாள்.

வீட்டில் டெலிபோன் மணி அடித்தது. யாரும் எடுக்கவில்லை. சபாபதி கூடவா வீட்டில் இல்லை?

அன்று மாலை சரியாக ஐந்து மணிக்கு மீனம்பாக்கத்தில் அவனும் அவளும் இருந்தாக வேண்டும்.

மூன்று.

ஏன் டெலிபோன் மணி இன்னும் அடித்துக்கொண்டே இருக்கிறது? நல்லசிவம் எங்கே?

ஏற்கனவே அவன் சொல்லியிருந்தபடி அவள் மீனம்பாக்கத்துக்குப் புறப்பட்டாள்.

''ஏண்டி, நான் உன் டியரஸ்ட் ஃப்ரண்ட். நான் ஸெண்ட் ஆஃபுக்கு வரவேண்டாமா?'' என்று கேட்டாள் லில்லி.

''நல்லசிவத்தோடு நான் சேர்ந்து செல்வதை யாரும் தெரிந்து கொள்ள வேண்டாம் லில்லி!''

''எனக்குத் தெரியுமே!''

''உனக்குத் தெரியும் என்பது அவனுக்குத் தெரிய வேண்டாம், லில்லி... என்னை மன்னித்துவிடு.''

''போய் லெட்டர் போடு.''

''சரி.''

''என்கிட்ட ஒரு சிலுவை இருக்கு. என் அம்மா கொடுத்தது. இருபத்திரண்டு காரட். அதை என் பரிசாத் தரேன். நீ ஏத்துக் கொள்ளணும், அம்மணி!''

''நிச்சயமா.''

''நீ ஒரு ஹிந்து.''

''ஜீஸஸும் ஒரு தெய்வம்... எந்த ஜாதிக்காரன் எந்தத் தெய்வத்தை நினைச்சாலும் அந்தத் தெய்வம் ஓடோடி வந்து காப்பாத்தும், லில்லி.''

லில்லி முத்தமிட்டுக் கொடுத்தாள். அம்மணிவாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். இயேசுவின் உள்ளங் கையிலும் பாதங்களிலும் வழிந்த இரத்தம் அவளுடைய கண்களில் நீராக வழிந்தது.

மீனம்பாக்கம்.

மணி. ஐந்து... ஐந்தே கால்.... ஐந்தரை.

அம்மணி சுற்று முற்றும் பார்த்தாள். விழித்தாள். கலங்கினாள்.

இனியும் தாமதிக்க முடியாது என்ற நிலை!

ஒலிபெருக்கி அலறியதும் எல்லோரும் எழுந்தார்கள். விரைந்தார்கள்.

எக்கணமும் நல்லசிவம் அவசரமாக வரக்கூடும் என்ற நம்பிக்கையில் அம்மணி கைப்பையுடன் முன்னேறினாள்.

விமானத்தில் ஏறினாள்.

அவள் அருகே ஒரு சின்னஞ் சிறு பிள்ளை அழகு சொட்ட உட்கார்ந்திருந்தான்.

அவள் மேலும் தேட முற்படவில்லை.

அவளுக்குத் துணை ஏற்கனவே கிடைத்து விட்டது. லில்லி அளித்த துணை. அதை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

(தொடரும்)

புதிய கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய
பற்களின் மென்மையான
எனமல் எளிதில் துவாரங்களுக்கும்,
சிதைவுக்கும் உள்ளாகிறது.
பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராகப்
பாதுகாப்பு தேவை. புதிய ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்
பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள்
குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது.
துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு
எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனமலுடன்
இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்எஃப்பி
ஃப்ளோரைட் அதில்
உள்ளது. கோல்கேட்
ஃப்ளோரி கார்ட் புல்லரிக்கும்
புதுச்சுவை கொண்டது.
உங்கள் குடும்பத்திற்கு
இன்றே வாங்குவீர்.

MFP FLUORIDE



உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி சாலைகளில்
சோதிக்கப்பட்டுள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட்
துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப்
பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது
மருத்துவ ரீதியாக நிருபணமாகியுள்ளது.
கோல்கேட்டின் தனி ஆராய்ச்சி மட்டுமே
இந்த தனிப்பட்ட எம்எஃப்பி ஃபார்முலாவை
உங்களுக்கு வழங்க முடியும்.

ஃப்ளோரிகார்டில் உள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட் எனமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

இப்பொழுது தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டுமே கிடைக்கும்.

CFT-G-2 TM

மகரிஷி



விழியில் அணைந்த விளக்கு

6

வாதநாராயண மரத்தடியில் சுமங்களா உட்கார்ந்திருந்தாள். அடி மரத்தில் வேர்கள் தாறுமாறுகப் பரவிக் கிடந்தன. மரத்தைச் சுற்றிலும் சிவப்பு நிறக் காய்ந்த பூக்கள். அடர்த்தியான வெய்யிலின் ஒரு சிறு வட்டம் கூடத் தெரியாத நிழல்.

ஒரு வாரமாகக் கோமதியைப் பார்க்கவில்லை. அவள் எங்கே போனுள்? ஒரு வாரமாகக் கல்லூரிக்கு விடுமுறையாம். அவள் தங்கியிருக்கிற ஹாஸ்டலில் கூட யாரிடமும் கூறுமல் போயிருக்கிருள்! வெளியூர் போயிருப்பாளோ? சென்னையில் அவளுடைய சகோதரன் வீடு இருக்கிறது. என்றுலும், அங்கெல்லாம் அவள் போவதில்லை என்பது தெரியும்.

அவளுடைய இரண்டாவது சகோதரன் திருமேனி, கடலூரிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி வந்திருப்பதாகக் கூறியிருந்தாள்.

அவனிடம் கொஞ்சம் அன்புடனும் அக்கறையுடனும் நடந்து கொள்கிற ஒரேயொரு உடன்பிறப்பு அவன். சொந்த விவகாரங்களில் மனக் கிலேசங்கள் இருந்தாலும் அவனிடம் அளவற்ற பாசம் கொண்டவன். எப்பொழுதேனும் கடிதம் எழுதுவதானுல் கூட அவனுக்குத்தான் அவள் எழுதுவாள். அவனிடமிருந்து வரும் கடிதத்தையும் காட்டுவாள்.

அவன் தற்பொழுது வகிக்கும் போலீஸ் உத்தியோகத்தில் பதவி உயர்வு பெற்றுச் சென்னைக்கு வந்திருக்கிறுன் என்று கூறியிருக்கிருள்.

கோமதியிடம் பேச ஏராளமான செய்தி வைத்திருந்தாள், சுமங்களா.

தூரத்தில் நடைபாதையில் பரமேஸ்வரனின் மோட்டார் சைக்கிள் வந்துகொண்டிருந்தது. தான் இருந்த இடத்தை விட்டு அவள் எழுந்திருக்கவில்லை.

அவன் மோட்டார் சைக்கிளை நடைபாதையில் நிறுத்திவிட்டு அவளை நோக்கி வந்தான். அவனுடைய நடை, உடை தூரத்திலிருந்தே அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு வந்த தோரணை... எல்லாவற்றிலும் ரகஸியம் இருப்பது போலத் தோன்றியது.

'இவன் யார்? மாயாவி போல மனத்தை இப்படி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிருனே!

'எல்லா நேரங்களிலும் இவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிற மாதிரி செய்து விட்டானே! இவன் காதல் சாகஸங்களை முறையாகக் கற்ற திருடன்! பேதை மனங்களைக் கவரும் கள்வன். ச்சி! இவனை இனிமேல் பார்க்கவே கூடாது: பேசவும் கூடாது. காதல் விஷயத்தில் மிகவும் விஷமக்காரன்.'

அருகில் வந்து அவளுடைய தோள்பட்டையில் இரண்டு கைகளையும் வைத்தான். அதே கணத்தில் வைராக்கியங்கள் கரைந்து போய்... அவனுடைய இமுப்புக்குள் விழுந்து விட்டாள் அவள்.

அவளுடைய கரத்தைப் பற்றி இழுத்தான்.

மந்திரப்பட்டவள் போல் அவனுடன் நடந்தாள்.

அவன் மோட்டார் சைக்கிளில் ஏறி உட்கார்ந்து கொண்டான். வெறுமனே நிற்கும் அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் பதில் பேசவில்லை. பின் சீட்டில் அமர்ந்து கொண்டாள்.

நகரச் சந்தடியைக் கடந்து கொண்டிருந்தது அவனுடைய மோட்டார் சைக்கிள். தூய வெள்ளையில் மீடியம் பெல். மின்னும் சிவப்பில் ஸாட்டின் போன்ற துணியில் ஷர்ட். பௌடரின் நறுமணம்.

அவனுடைய முதுகில் முகத்தைப் பதித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

வாகனம் மீண்டும் அதே பங்களாவை அடைந்தது. அவனுக்கு முன்னுல் அந்தப் பங்களாவுக்குள் அவள் நுழைந்தாள்.

அகலமான மெத்தை கட்டில். அதன் மேல் வெளிர் மஞ்சள் விரிப்பு. கண்ணுடிக் கதவுகள் மூடிக் கிடந்தன. பால் வெள்ளை மின் விளக்கின் சீரான ஒளி அறை முழுவதும் பரவியிருந்தது.

கேஸட்டிலிருந்து ஹிந்திப் பாடலின் ஒலி. தூரத்தில் மின்சார ரயிலின் சப்தம்.

கண்களை மூடிக் கொண்டிருந்தாள் அவள். அவன் முதுகில் அவளுடைய கன்னம் பதிந்திருந்தது.

உறவுகளை நிர்ணயிப்பது உணர்ச்சிகளே தவிர வேறெதுவுமில்லை.

'ஒரு வாரத்துக்கு முன்புவரை இவன் எனக்கு முற்றிலும் அந்நியமானவனே! அண்மைக் காலமாக வீட்டுக்கு வருகிற சாதாரணமானவன். தூரத்தில்

இருந்தவரை என்னால் வெறுக்கப்பட்டவள். ஆனால், இன்று... தன் வருகைக்காக என்னை ஏங்க வைத்துக் கொண்டிருப்பவள். அந்த மோட்டார் சைக்கிளின் ஓசைக்காகத் தவங் கிடக்க வைத்து விட்டவள்.'

மோட்டார் சைக்கிள் பங்களாவுக்கு வெளியே வந்து நின்றபோது அவனிட மிருந்து சாவியைப் பெற்றுக் கொண்டு கேட் டைத் திறந்தவள் அவளே. அந்தச் சாதா ரணச் செய்கையில் கூட எத்தனை வேகம்! எத்தனை படபடப்பு!

மீண்டும் அந்த இனிய மௌன நாடகத் தின் காட்சிகள் ஆரம்பம்.

கற்பனை நிழல்கள் நிஜமாகிக் கொண்டிருந் தன. ''நம் கல்யாணம் பற்றி நாம் முடி வெடுக்க வேண்டாமா?'' என்றாள், அவ னுடைய மார்பின் மீது முகம் புதைத்துக் கொண்டு.

''என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா? உன்னை ஏமாற்றி விடுவேன் என்று சந்தே கிக்கிறாயா?''

''உங்கள் மேல் அவநம்பிக்கை கொண் டிருந்தால் நீங்கள் இழுத்த இழுப்புக் கெல்லாம் வந்திருப்பேனா?''

''சரி, நாம் திட்டமிடுவோம். எங்கே, எப்போது என்பதை நிர்ணயிப்போம். எப் படிச் செய்தாலும் அதை நாமேதான் செய் தாக வேண்டும்.''

''பார்வதத்திடம் சொல்லுவோம். அவ ளும் அருணாசலமும் ஏற்பாடு செய்யட்டுமே''





அழைத்தால் வருவேன்

வேண்டிய டேட்டில் விரும்பும் ரேட்டில் பெண்களை அனுப்ப ஒரு கம்பெனியே நடக்கிறது. அதில் ஒரு கிராக்கியான, சாரி ஒரு கால் கேர்ளான கமலதா 500 ரூபாய் கொடுத்து 'அழைத்தால் வருவேன்' என்கிறார். மாடர்ன் டிரஸ்களில் கேமிரா வித விதமாய் கமலதாவை அழகாய்க் காட்டுகிறது. ஜிது - ஜிலுப்பாய் ஆடுகிறார். நடிப்பும் வருகிறது.

இடைவேளை வரை, ஏதோ புதிதாய்ச் சொல்லப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பால் ஓடுகிறது. பிற்பகுதி பூரா என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பி, குழப்பியிருக்கிறார்கள். கமலதா கல்யாணமான டேக்ஸி டிரைவர் சுதாகரிடம் ஒரு குழந்தை பெற விரும்புகிறார். சமுதாயம் அதை நிறைவேற விடாமல் மூன்று வில்லன்களைத் தேவையில்லாமல் நுழைத்துக் கொல்கிறது.

தெருவில் சுதாகரின் டேக்ஸியைத் தவிர வேறெதுவும் ஓடுவதில்லை. சுதாகர் வேடத்தில் யாரைப் போட்டாலும் நடிப்பு இப்படித்தான் இருக்கும்: வேடம் அப்படி. கருணிக்குத் தனி சென்ஸார் தேவை.

இசை அமைப்பும், அசோக் குஞ்சலின் துல்லியமான கேமிராவும் மட்டும் திருப்தி தரும் சமாசாரங்கள்.

கதை வசனம் எழுதி இயக்கியிருக்கும் பி. ஆர். சோமு தானே படத்தில் தோன்றி (பழைய டெக்னிக்) இந்த விலைமகள் கதையால் பெண்கள் திருந்துவார்கள் அப்படி இப்படி என்கிறார். பெண்கள் பார்க்கும்படி கூட இல்லை. பாவம் சமுதாயம். பரிதாபத்குரிய சமுதாயம்.

- நளினி சாஸ்திரி

''எனக்கு ஆட்சேபணை இல்லை.''

அவள் உற்சாகமடைந்தாள்.

''உங்களை மறுமுறைசந்திக்கும்போது அந்த ஏற்பாடுகளைப் பற்றின முழு விவரத்தையும் சொல்கிறேன். ஆமாம்... இப்பொழுதெல்லாம் நீங்கள் ஏன் என் வீட்டின் பக்கமே வருவதில்லை? திடீரென்று ஏன் வருவதை நிறுத்திவிட்டீர்கள்?''

அவன் பதில் ஒன்றும் பேசவில்லை.

கல்யாணத்துக்குச் சம்மதம் தந்துவிட்டான். இனி அவனைச் சந்தேகிப்பதில் அர்த்தமில்லை. அதற்கு முன் நடந்தவைகளைப் பெரிய விஷயமாக எடுத்துக் கொண்டு குழம்புவதில் பயனில்லை. உறவுகள் பலப்படுவதும், ஆழம் பெறுவதும் உணர்ச்சியில்தான் என்பதை அவள் மனம் அங்கீகரித்துக் கொண்டுவிட்டபோது, அந்த வீண் பிரமைகளுக்கு இடமில்லாமல் போய்விட்டது.

'நாம் வாழ்கிற வாழ்க்கை... அதைச் சுற்றியுள்ள இன்றையச் சூழ்நிலை...அதைப் பாதிக்கின்ற எண்ணங்கள், சிந்தனைகள் என்று இப்படி அன்றாட வாழ்க்கை முறைகளை மாறிக் கொண்டுவருகின்றன. நம்மைச் சுற்றி நடக்கிற சம்பவங்களிலும் அந்தப் பாதிப்புகள் தெரிகின்றன. அவை நம்மைச் சீண்டுகின்றன. நாம் விருப்பமின்றி ஒதுங்கினாலும் அவை நம்மை உள்ளே இழுத்துக்கொள்கின்றன. இதிலிருந்து யாராலும் தப்ப முடிவதில்லை. கண்களை மூடிக் கொண்டு போய்விட நாம் ஜடமில்லை.

எல்லா நேரங்களிலும் ஏதோ ஒன்றின் பாதிப்பின் அடிமையாக மனிதனை மாற்ற எத்தனையோ இருக்கும்போது...

வீட்டின் உள் அறையில் ஜன்னல் கட்டையில் அமர்ந்திருந்தாள் கமங்களா.

இதுநாள் வரை தன்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த உயர்ந்த எண்ணங்கள் மறைந்து சராசரிக்குக்கும் கீழே தான் இறங்கிவிட்டதாக எண்ணினாள்.

இதைத் தவிர்த்துக் கொண்டிருக்க முடியாதா? பரமேஸ்வரனின் அத்துமீறலை முறியடிக்க முடியாமல் போகக் காரணமான மன உந்தல் எது? சூழ்நிலையின் பாதிப்பா? அல்லது வளர்ச்சியின் சீண்டலா? பாதுகாக்க வேண்டிய வேலியே அந்நியனை வரவேற்பதா?

பார்வதம் தன்னை ஏமாற்றியிருப்பாளோ? அருணாசலம் அவருக்கு ஏராளமான கடன் பாக்கி தர வேண்டுமாமே!

வியாபாரத்தைப் பெருக்குவதற்கு அவரிடம் இவர்கள் பணம் எதிர்பார்க்கிறார்கள். அவரோ ஏதோ 'டீல்' என்கிறார்.

வெளியே சென்றிருந்த பார்வதம் உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள்.

ஜன்னல் கட்டையில் உட்கார்ந்து வீதியைப் பார்த்துக் கொண்டிருந்த கமங்களாவைப் பார்த்துவிட்டு ஒன்றுமே பேசாமல் அப்பால் போய்விட்டாள்.

இப்பொழுது கொஞ்ச நாட்களாக அவள் முகத்தில் கூட அதிக உற்சாகமில்லை. இதற்கான காரணம் தெரியவில்லை. தான் பரமேஸ்வரனுடன் நெருங்கிப் பழகுவதை அவள்தான் விரும்பினாள். அதை அவளே உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தாள். 'நல்லவன்; நிறையச் சொத்து இருக்கு: வியாபாரத்தில் கூட்டுச் சேரப் போகிறான்' என்றாள். 'உன்னுடன் பழக அவன் துடித்துக் கொண்டிருக்கிறான்' என்றாள்.

அதான் எல்லாம் எல்லை மீறி நடந்துவிட்டனவே.

இனி என்ன பாக்கி இருக்கிறது? இந்தச் சமயத்தில் இவள் ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்? தான் ஒரு மூன்றாம் மனுஷி என்பதை ஒவ்வொரு நிமிஷமும் உணர்த்துவது போல நடந்து கொள்கிறாளே!

இப்பொழுதெல்லாம் முன்பு போல 'சாப்பிட்டாயா?' என்று கேட்பதில்லை. 'என்ன வேணும்?' என்று கேட்பதில்லை. மாலை நேரங்களில் உட்கார வைத்துத் தலை வாரிப் பின்னுவதில்லை.

ஏன் இந்த மௌன ஒதுங்கல்?

''பார்வதம்...''

தன்னுடைய அழைப்பு அவளுக்கே வேடிக்கையாக இருந்தது.

பீரோவைத் திறந்து எதையோ தேடிக் கொண்டிருந்த பார்வதம் திரும்பிப் பார்க்காமலே தன் காரியத்தை நிறுத்திக் கொண்டு மௌனமாக நின்றாள். அப்படி அவள் நின்ற தோரணையே, 'என்ன?' என்பது போல இருந்தது.

''உன்னுடன் சில முக்கியமான விஷயங்கள் பேச வேண்டியிருக்கு.''

பார்வதம் பதில் ஒன்றும் கூறாமல் மெதுவாகத் தன் வேலையில் தொடர்ந்து ஈடுபட்டாள். அவள் மௌனமாக அப்படி இருந்தது கூட, மீண்டும் சுமங்களாவைப் பேச அனுமதி அளித்த மாதிரியே இருந்தது.

புடவை நுனியை விரலால் சுற்றிச் சுற்றி அவிழ்த்துக் கொண்டே....

''அவர் ஏதாவது சொன்னாரா?''

அப்பொழுது பார்வதம் முற்றிலும் அந்த வேலையிலிருந்து விடுவித்துக் கொண்டாள். பீரோவின் இரு பக்கக் கதவுகளையும் சாத்திவிட்டு அதன் மேல் முதுகு படும்படி சாய்ந்த வண்ணம் நின்று சுமங்களாவின் முகத்தைப் பார்த்தாள்.

பார்வையே திடீரென்று வித்தியாசப்பட்ட பார்வையாகத் தோன்றியது அவளுக்கு.

''ஆமாம்... சொன்னார்'' என்றாள், பார்வதம்.

''அதுக்கு நீ என்ன சொன்னே?''

''உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி அவரிடம் கேட்டாயே அதுக்கா?''

''ஆமாம்!''

''நான் என்ன சொல்ல இருக்கு இதிலே?''

''என்ன சொல்ல இருக்கா?... எல்லாம் நீதானே சொல்லணும்? அதை மேற்கொண்டு நடத்த அவருக்கு யாருமே இல்லையாமே!''

''ஆமாம்.....''

'''அவருக்கு ஓர் அண்ணன் உண்டு. கல்யாணமாகிப் பத்து வருஷமாகப் போகிறது. குழந்தை இல்லை' என்றாய். இப்போதோ யாருமில்லை என்கிறாயே?''

''உடன் பிறந்தவன் இருந்து என்ன பிரயோஜனம்?''

''சரி அது போகட்டும். அந்த ஏற்பாடுகளை நீதான் செய்யேன். நான்கூட அவரிடம் இதைத்தான் சொன்னேன். அதுவுமில்லாமல் இதை நீதானே செய்ய வேண்டும்? என்னுடைய அப்பா அநாதையா என்னை விட்டுப் போன பிறகு மடத்துத் திண்ணையிலே அழுதுகொண்டு உட்கார்ந்திருந்த என்னை நீதானே அழைத்து வந்து, வளர்த்து, படிக்க



லண்டனில் உள்ள பி. பி. ஸி. வானொலி நிலையத்திற்கு ஆண்டுதோறும் சுமார் 30 லட்சம் கடிதங்கள் வருகின்றன. சமீபத்தில் ஒரு ஆஸ்திரேலியச் சிறுவனிடமிருந்து வந்த கடிதத்துக்கு எப்படிப் பதில் அளிப்பது என்று தெரியாமல் விழித்தனர். அச்சிறுவன் எழுதியிருந்தான்:

''நீங்கள் உலகில் உள்ள பெரிய தலைவர்கள் மற்றும் அறிஞர்கள் போன்றவர்கள் இறந்து போனவுடன் அதை மட்டும் அறிவிக்கின்றீர்களே, ஆனால் அப்படிப்பட்டோர் பிறக்கும்போது அந்தச் செய்தியை ஏன் அறிவிக்காமல் இருக்கின்றீர்கள்?''

-பி. நாராயணன்

வைச்சு ஆளாக்கி நாலு எழுத்துத் தெரிந்து கொள்ள உதவி, என் அநாதரவான நிலையைப் போக்கினாய்? நீயும் அவரும்தானே எனக்கு கார்டியன்! நீங்கள்தானே இதைச் செய்ய அருகதை உள்ளவர்கள்.''

''சுமங்களா!''

பார்வதத்தின் அழைப்பில் தடம் புரண்ட சப்தம் கேட்டது.

''என்ன பார்வதம்?''

''நீ படிச்ச பொண்ணு. ஓரளவு எல்லாத்தையும் புரிஞ்சுக்கிட்டுப் பேசுவேன்னு எதிர்பார்த்தேன். ஆரம்பத்திலிருந்தே ஒவ்வொன்றையும் நீ சரியாகவே புரிஞ்சுக்க மாட்டேங்கிறே....''

''நீ என்ன சொல்றே பார்வதம்?''

''நான் தெளிவாப் பேசறேன். புரியும்படியாப் பேசறேன். புரிஞ்சுக்க! அவர் உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டார்!''

''பார்வதம்!''

சுமங்களாவின் உடம்பு கண நேரத்தில் சில்லிட்டுப் போய்விட்டது. தான் நிற்கும் பூமி பிளந்து கொண்டு தான் கீழே விழுந்து விட்டது போல முழங்காலுக்குக் கீழே நடுங்கியது.

அசாதாரணமான ஓசை ஒன்றைக் கேட்டது போலத் திடீரென்று செவித் துவாரங்கள் அடைத்துக் கொண்டன.

கண்ணுக்கு முன்னால் எல்லாம் சரிவது போல இருந்தது.

உதடுகள் துடித்தன.

''பார்வதம்.... நீ... என்ன சொன்னே?''

''உண்மையைத்தான் சொன்னேன். அவர் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளணும்னு எதிர்பார்க்காதே! அந்த எண்ணத்துடன் உன்னிடம் பழகலே. அது சும்மா ஒரு பொழுது போக்கா....''

''பார்வதம்!'' என்று கத்திக் கொண்டே அவள் மேல் பாய்ந்தாள் சுமங்களா. அவள் கழுத்தை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டாள்.

(தொடரும்)

உச்சி வெய்யில் மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. சுபத்ரா பஸ்ஸுக்காகக் காத்திருந்தாள்.

எதிர் சாரியில் ஒரு 'பேனர்' அவளைக் கவர்ந்தது. இரண்டு பெரிய கம்பங்கள் நாட்டி ஒரு பெரிய வெள்ளைத் துணி கட்டியிருந்தார்கள். அதில் 'சக்ஸ் க்ளப்' என்று கொட்டையாகச் சிவப்புப் பெயிண்டினால் எழுதியிருந்தார்கள். அதை யொட்டி வரையப்பட்ட பல படங்கள். ஏதேதோ வாசகங்கள். அவள் அருகில் சென்று கவனித்தாள்.

ஒரு பெரிய ராட்சசியின் கையில் ஒரு பெண் சிக்குண்டு கதறுவது போல் ஒரு படம். அதன் கீழே 'வரதட்சிணை ராட்சசியின் கோரப் பிடியிலிருந்து பெண்களைக் காப்போம்' என்ற வாசகங்கள்.

அவளுக்கு இந்த மாதர் சங்கத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசையிருந்தது.

அந்தச் சங்கத்தின் தலைவி ரத்னா பாஸ்கரைச் சந்தித்தாள்

அவள் பட்டப் படிப்பை முடித்து வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டபோது, ''இதோ பார் சுபா! நீ வேலைக்குத்தான் போக வேண்டும் என்று முடையில்லே. ஏதோ நாலெட்டு வளரட்டுமேன்னு படிக்க வச்சேன். அப்படியே ஆசையா யிருந்தா உள்ளூரிலேயே ஏதேனும் கிடைச்சா பாரு. மேலும் உனக்கு நல்ல வரனாப் பார்த்துக் கல்யாணம் செஞ்சடலாம்னு இருக்கேன்... பொண்ணைச் சம்பாதிக்க விட்டா அப்புறம் அவளைக் கல்யாணம் செய்யவே அப்பனுக்கு மனசாரதில்லேங்கிற தினுசிலே இந்தக் காலத்திலே எல்லாருக்குமே ஒரு அபிப்பிராயம் விழுந்து போச்சு. ஸப்போஸ் உனக்கு ஒரு வரன் அமைய நாளாச்சன்னா என்னையும் அப்படிப் பேசுவார்களோ என்னமோ...''

சுபாவும் அப்பா சொன்ன மாதிரியே 'ஹாய்' ஆக இருந்தாள். பொழுது போக்கிற்காக ரத்னா பாஸ்கர் தலைமை ஏற்று நடத்தும் மாதர் சங்கத்தில் சேர்ந்துகொண்டாள். முழு மூச்சோடு சங்கப் பணிகளில் அவள் ஈடுபட்டபோது பொழுது போகாமல் இருந்த காலம் போய்ப் பொழுது போதாமல் இருந்தது. இதற்கிடையில் அப்பா பாட்டுக்குப் பெண்ணுக்கு நல்ல வரன் தேடும் படலத்தில் முனைந்தார்.

மாதர் சங்கம் நடத்தும் மாதம் இரு முறை மீட்டிங்கில் சுபத்ரா பேசாத நாளே கிடையாது. ஒரு முறை அவள் மேடையேறியபோது ''இந்த வரதட்சிணைக்கொடுமையை ஒழிக்கப் பெண் வீட்டார் முக்கிய பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும். பெண் வீட்டார் அலைவது போல் பிள்ளை வீட்டார் ஏன் நல்ல பெண் வேண்டும் என்று அலைவதில்லை? வரதட்சிணையே கொடுப்பதில்லை என்று ஒவ்வொரு பெண்வீட்டாரும் துணிந்து செயல்பட வேண்டும்.'' அவள் பெரிய முழக்கமாக முழங்கிவிட்டுக் கீழே இறங்கி வந்தபோது அங்கத்தினர்கள் எல்லோரும் அவள் கையைப் பிடித்துக் குலுக்கினார்கள். பார்வையாளர்களாக வந்த பெற்றோர்கள் அவளைக் கட்டிப்பிடித்து ஆசி கூறினார்கள்.

அவளுக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது. வரதட்சிணை வாங்காத இளைஞர் சங்கம் போல வரதட்சிணை கொடுக்காத யுவதிகள் சங்கம் ஆரம்பித்தால் என்ன என்று அவள் அபிப்பிராயம் சொன்னபோது அதற்குப் பலத்த வரவேற்புக் கிடைத்தது. ஊர் ஊராக 'கான்வாஸ்' செய்கிற பொறுப்பு அவளுக்குக் கிடைத்த போது அவள் மகிழ்ந்து போனாள்.

இந்தச் சமயத்தில் ரகுராமன் அவளைப் பெண் பார்க்க வந்தான். பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பரஸ்பரம் பிடித்து விட்டது. நிச்சயம் செய்யலாம் என்று அவள் அப்பா முனைந்தபோது எழுந்தது பிரச்னை. பிள்ளை வீட்டார் மூவாயிரம் ரூபாய் கையில் கேட்கிறார்கள் என்று அப்பா சொன்னவுடன் சுபத்ரா ஒரு 'குதி' குதித்தாள். வரதட்சிணை வாங்கும் பட்சத்தில் ரகுராமனை மணக்க முடியாது என்று தீவிரமாக மறுத்தாள்.

கடைசியில் சுபத்ராவின் பிடிவாதம் வென்றது. ரகுராமனுக்கு வேறு இடத்தில் இருமணம் ஆகிவிட்டது. சுபத்ராவின் அப்பா மீண்டும் வரன் வேட்டையில் இறங்கினார். சுபத்ராவின் கொள்கைகளுக்கு ஒத்து வந்தவை மனசுக்குப் பிடிக்கவில்லை. மனசுக்குப் பிடித்தவைகள் கொள்கைக்கு ஒத்து வரவில்லை. வருடங்கள் உருண்டு கொண்டிருந்



தன. ஆனால் சுபத்ரா அலட்டிக் கொள்ளவே யில்லை. அம்மா மட்டும் ஓயாது புலம்பினாள்.

ஒரு நாள் அவள் தந்தை ''எதிர்பாராத விதமாய் சுபத்ராவுக்குஓர் இடம் கூடி வரது'' என்று முடிப்பதற்குள்,

''யாருபையன்... அதை ஏன் முதலிலே சொல்லலே...'' என்று அம்மா குறுக்கிட்டுச் சண்டை போட்டாள்.

''பையன் யாரு தெரியுமா? ரகுராமன்!''


''யாரு... முன்னாடி சுபாவுக்குப் பார்த்தோமே...'' அம்மா சந்தேகத்தோடு அப்பாவைப் பார்த்தாள்.


''ஆமாமா அவனேதான்... அவன் முதலிலே கல்யாணம் செஞ்சுண்ட பொண்ணு செத்துப்போய்விட்டாளாம்... ஆறு மாசம் ஆறதாம். ஒரே ஒரு பையன் இருக்கானும்... அவனையே ரயிலில் பார்த்தேன். அவன் அப்பாவும் வந்தார். இரண்டு பேருமா பேசினோம்...'' இதுவரை மௌனமாக நின்று எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சுபத்ராவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்னப்பா! இரண்டாந் தாரமாகவா...'' பாதி கேட்கும்போதே அவளுக்குக் குரல் உடைந்தது.

''அதற்கென்ன இரண்டாம் தாரம்னு ஐம்பது வயசுக்காரனுக்கா கொடுக்கிறேன்? பையனுக்கு இன்னும் முப்பது கூட முடியலே. பார்க்க ஆள் நன்னா இருக்கான். முன்னாலேயே தெரிஞ்ச இடம். கை நிறையச் சம்பளம்... குழந்தை ஒண்ணு இருக்கு. அதனாலென்ன? உனக்கே கல்யாணம் ஆகியிருந்தா இப்பப் பிறந்திருக்காதா?''

''இப்படி ஒரு பிராப்தம் உன் தலையிலே எழுதியிருக்கு... ரகுராமனுக்கே பொண்டாட்டியா இப்படித்தான் வரணும்னு போட்டிருக்கே... நல்லவேளை இதுவானும் முடி







சுவஸ்திக சின்னத்தில் தோன்றும் சித்திரங்கள்.
ஓவியர்: சாந்தராம் ராவூத் தகவல்: எஸ். சந்திரசேகர்
நன்றி : லோக் சத்தா நாளிதழ்

யறுதே..." அம்மா சலிப்பும் சமாதானமுமாக அவளைத் தேற்றினாள்.

"கொள்கை அது இதுன்னு உன் இளமையெல்லாம் பாழாக்கிக் கொண்டாயே அக்கா! இனிமேலாவது தடங்கல் சொல்லாதே." சுபத்ராவின் தங்கை. நேற்றைய குழந்தை இன்று அவள் தோளுக்கு மேல் ஒரு படி வளர்ந்து இருப்பவள். 'அட்வைஸ்' செய்கிறாள்.

அவளுக்குத் திடீரென்று ஓர் அவமானம் எழுந்தது. 'இப்படி எல்லோரும் ஒரு பாரமாய் அவளை நினைக்கிற மாதிரி ஒரு பிரச்னையாகிப் போனாளே! அவளுக்குத் தனியாகச் சென்று பிழியப் பிழிய அழவேண்டும் போல் இருந்தது.

"அது சரி... சீர் எல்லாம் எப்படிச் செய்யணும்... பவுன் நகையெல்லாம் முன்னாடிப் பேசின மாதிரிதானா?" என்று அம்மா கேட்டாள்.

"ஆமாமா.. எல்லாம் முன்னாடி பேசின மாதிரிதான். ஆனா கைச் செலவுக்கு ஐயாயிரம் வேண்டுமாம். முதல் பெண்டாட்டிக்கு வைத்தியச் செலவு ஏகமாய் ஆயிட்டதாம்." அப்பா சொன்னவுடன் சுபாவுக்கு ஆத்திரமாக வந்தது. இரண்டாந் தாரந்தான் - போய்த் தொலையட்டும் என்றால் அதற்கு வரதட்சிணை வேறேயா? இதுவரை எந்தக் காரணத்தால் அவள் திருமணம் தடைப்பட்டு நின்றதோ அதுவே மறுபடிமுளைத்துப் பிரச்னையாகக் கிளப்புகிறதே...

அவள் அப்பாவுடன் இதுபற்றி வாதிட்ட போது "சுபா! லுக் ஹியர்... உனக்கு இந்தச் சீர் செனத்திக்கும் சம்பந்தமில்லே. எனக்கு முக்கியம் உனக்குக் கல்யாணமாக வேண்டியது. அதற்காக நான் ஐயாயிரம் கொடுப்பேன், பத்தாயிரம் கொடுப்பேன். என் இஷ்டம். அந்தப் பணம் நான் சம்பாதித்தது!" அப்பா இவ்வளவு கண்டிப்பாகப் பேசி சுபத்ரா கேட்டதில்லை.

முதன் முறையாக 'தான் பிடிவாதமாக வேலைக்குப் போகாதது எவ்வளவு பிசகு' என்று நினைத்தாள். அக்காவுக்குக் கல்யாணம் நடக்காததால் அவள் தனக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகத் தம்பிக்குக் கோபம்.

அவள் சாப்பிடாமல் படுத்துக் கொண்டதும் அம்மாவுக்கு மனசாகவில்லை. கையில் ஒரு பாத்திரத்தில் சாதத்தைப் பிசைந்து எடுத்துக் கொண்டு அவள் படுக்கைக்கு அருகில் வந்தாள். "சுபா! என்னம்மா இது... பச்சைக் குழந்தையாட்டம்... நீயும் மனசை வருத்திண்டு எங்களையும் ஏன் நோக அடிக்கறே... நீ வயசான பொண்ணு. விவேகம் தெரிஞ்ச பொண்ணு... வீட்டு நிலைமை தெரிய வேண்டாமா? உனக்கு அப்படி இஷ்டமில்லாமப் போனா இதை விட்டுடுவோம்... வந்து சாப்பிடு..."

அம்மா பலவந்தமாகச் சாப்பிடச் சொல்லி விட்டுப் போய்விட்டாள். மனசு பாரம் குறையும் மட்டும் சுபா அழுது தீர்த்தாள்.

ஓரளவு பசு குறைந்தவுடன் சிந்திக்க ஆரம்பித்தாள்.

'என் விஷயத்திலே ஒரு சின்னக் காரியம் ஏன் நடக்கலே?... வரதட்சிணை கொடுக்காமக் கல்யாணம் பண்ணிக்குவேன்னு அது ஏன் நடைமுறையில் சாத்தியம் ஆகலே? பெரிய பெரிய குறிக்கோள், லட்சியவாதியெல்லாம் என்ன செய்வாங்க? எது வந்தாலும் வரட்டும்னு மனோதைரியத்தோடு தன் பிடிப்பிலேந்து இறங்காம இருப்பாங்க... எனக்கு மனசிலே அவ்வளவு தைரியம் இருக்கா?... அப்பாவிடம் இந்த வரனையும் வேண்டாம்னு சொல்லிடட்டுமா? ரொம்பவும் சலிச்சுட்டேன்னு சொன்னாரே! பாவம். அவருக்குப் பெண்ணாய்ப் பிறந்து என்ன சுகத்தைக் கொடுத்தேன்... ஓயாத அலைச்சலையும், மனச் சுமையையும் துயரத்தையும்தான் கொடுத்திருக்கேன்... மனசுக்கு சந்தோஷத்தையும் கொடுக்காம... பெரிய பாரமாயிருந்துண்டு....' ஐயோ கடவுளே!' அவள் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

'அது சரி... சம்மதம்னு சொல்லிவிடுவோமா?... ஐயோ ரெண்டாந்தாரம்னா கொஞ்சம் மட்டம்தானே? இத்தனை நாள் இருந்திருந்தும் அவளுக்கென்ன அழகுக்குக் குறைவா? படிப்பில்லையா? வசதி குறைச்சலா? வயசாகிப் போச்சாம் — அப்படி என்ன இருபத்தெட்டு முடியறது... எத்தனை பேர் முப்பது வயசுக்கு மேலே கல்யாணம் ஆகாம இருக்காங்க....'

'அம்மா சொல்ற மாதிரி அவளுக்கு அதிர்ஷ்டக் குறைவுதானோ?' அவள் இமைரெண்டு எப்போதோ பார்த்த ரகுராமனை மனசில் கொண்டுவர முயற்சி செய்தாள். அப்பா சொன்ன 'ப்ளஸ்' பாயிண்டுகளை எண்ணிப் பார்த்தாள்.

'சீ! நாமே அதிர்ஷ்டமில்லை என்று குறைப்பட்டுக் கொள்ளக் கூடாது. இப்ப என்ன குறைச்சல்... இளையாள் மேலேதான் கணவனுக்குப் பிரியம் ஜாஸ்தியாம்... அதுதானே வேணும் முக்கியமா...' தனக்குத் தெரிந்து இரண்டாந் தாரமாய் வாழ்க்கைப்பட்டவர்களை நினைத்துப் பார்த்தாள். ஓரளவு மனந் தெளிந்து அப்படியே தூங்கிப் போனாள்.

மறுநாள் அப்பாவிடம் போய் முதல் காரியமாய் ''சாரிப்பா!.... நேத்து ஏதோ வேகத்திலே என்னென்னவோ பேசிட்டேன். நான் அந்த ரகுராமனையே பண்ணிக்கிறேன்... என்னம்மா பார்க்கிறே? நான் மனப்பூர்வமாத்தான் சம்மதிக்கிறேன்... உங்களுக்காக இல்லே...'' என்று அவள் சொல்லிவிட்டு நகர்ந்து வந்துவிட்டாள்.

ஒரே இரவில் அவளிடம் ஏன் இந்த மாற்றம் என்று புரியாமல் அவள் பெற்றோர்கள் திணறியபோது அம்மா அப்பாவுக்காகச் சொல்கிறாளோ என்று தங்கை சந்தேகப்பட்டபோது அவள் சர்வ சாதாரணமாக, ஒன்றுமே நடக்காதது போல், சந்தோஷமாக எப்போதும் போல் கலகலப்பாக இருந்தாள்.

குளித்துவிட்டு நல்ல புடவை உடுத்தி, தலை நிறையப் பூவைத்து அலங்காரம் செய்து கொண்டாள். மெலிசான குரலில் அடிக்கடி பாடிக்கொண்டாள். எல்லோரும் 'அப்பாடி' என்கிற உணர்வில் மேற்கொண்டு காரியங்களைக் கவனித்தபோது அவளும் சந்தோஷமாகப் பங்கு கொண்டாள்.

ஆனால் வாழ்க்கையின் யதார்த்தங்களோடும், நிதர்சனங்களோடும் மோதிய அதிர்ச்சியிலிருந்து மீளாமல் இன்னும் அவள் அடிமனசு இலேசாக வலித்துக் கொண்டிருந்தது. இனி அவள் தொடரப் போகும் பாதையில் இன்னும் இதுபோல் எத்தனை மோதல்களோ?



சரணம் ஐயப்பா


'சுவாமியேயேயேஏஏஏஏஏய்'
'சரணம் ஐயப்பா'
'சுவாமி சரணம்' 'ஐயப்ப சரணம்'
'சுவாமியே' 'ஐயப்பா'
'ஐயப்பா' 'சுவாமியே'
'பகவானே' 'பகவதியே'
'தேவனே' 'தேவியே'
'ஈஸ்வரனே' 'ஈஸ்வரியே'
'சுவாமியேஏஏஏஏஏய்'
'சரணம் ஐயப்பா'
'சுவாமி சரணம்' 'ஐயப்ப சரணம்'
'சுவாமியே' ஐயப்பா'

அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல தவறுகளையும், குற்றங்களையும் பொறுத்து, காத்து ரட்சிக்க வேண்டும் சுதனே!

சுவாமியே, சரணம் ஐயப்பா!

—நளினி சாஸ்திரி

MCA-NTC-64-TAM



ஷர்ட்டிங்ஸ்

கவர்ச்சிகரமான சிறந்த ரக
காட்டன் ஷர்ட்டிங்குகள்.
கண்ணைக் கவர்ந்திடும்
விதவித பாலியஸ்டர்
டிசைன்கள். பார்வைக்கும்,
அணிவதற்கும் சிறந்தது.

Entice

என்டைஸ்

சிறந்த ரகங்கள்.
சரியான விலை.

நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன்
(தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) லிமிடெட்
ஒரு மத்திய அரசு நிறுவனம்
கோயம்புத்தூர்-641009

இன்டென்டிங் ஏஜண்டுகள்: (தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஜே & ஜே என்டர்ப்ரைஸஸ், 14/F1 அன்சாரி தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 9 • செமி ஹோல்சேல் டிப்போ: மத்திய விநியோக டிப்போ, CS & W மில்ஸ் காம்பவுண்டு, கோயமுத்தூர் 1 • என்டைஸ் செமிஹோல்சேல் டிப்போ, 208 தம்பு செட்டித் தெரு, சென்னை 1 • என்டைஸ் ஷோரூம்கள்: என்டிசி ஹவுஸ், கோயமுத்தூர் 9 • 'சரவண பவனம்' கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர் 12 • என்டைஸ் துணிகள் எல்லா என்டிசி ஷோரூம்களிலும் கிடைக்கின்றது.

4. விதியின் பிழை

மோமினாபாத் சிறிய ஊர்தான். ஓரளவில் தமிழகத்திலுள்ள உளுந்தூர்ப்பேட்டையைப் போலிருக்கும். தண்ணீர் இல்லாத ஆறு போல் அகன்ற சாலை. இருபுறமும் பத்துப் பன்னிரண்டு கடைகள். பெரும்பாலும் சாயாக் கடைகள். திருப்திகரமான உணவு கிடைக்காது. விவசாயிகளை முன்னிட்டு அங்கே அந்த மாநாட்டைக் கூட்டியிருந்தார்கள்.

சிறிய மண்டபத்தில் மாநாடு. பிரதிநிதிகள் ஐம்பது பேர் இருப்பார்கள். பேச்சாளர்களும் தலைவர்களும் இருபது பேர். மேடையில் இருப்பவர்கள் மேடையிலிருந்து கொண்டே பீடி பிடித்தார்கள். கீழே இருப்பவர்கள் கீழே இருந்து கொண்டே பீடி பிடித்தார்கள். ஒரு பேச்சுக்காவது கைதட்டல் விழக் காணோம்.

ஆனால் அந்தக் கட்சி இன்றுவரையில் நான்கு பாராளு மன்ற உறுப்பினர்களையும், இருபது சட்ட மன்ற உறுப்பினர்களையுமாவது கொண்டு வந்து விடுகிறது!

எங்களுடன் வந்திருந்த எம். பி. எஸ். ஆங்கிலத்தில் கொஞ்ச நேரம் பேசினார்.

மதியச் சாப்பாடு பழங்காலக் கோட்டை ஒன்றில். மராட்டியத்தில் பெரும்பாலும் ஒவ்வொரு கிராமத்திலும் பத்துப் பதினைந்து சிறிய கோட்டைகள் இருக்கும். ஒவ்வொரு வீட்டையும் சுற்றிக் கோட்டை எழுப்பியிருப்பார்கள். கொஞ்சம் கூடச் சுத்தம் இல்லாத இடம். சமையல் அடுப்புக்குப் பக்கத்திலேயே மலஜலம். கண்ணை மூடிக்கொண்டு காலை வைத்தால் மலத்தில்தான் வைத்தாக வேண்டும்.

தாங்க முடியாத அந்த நாற்றத்தில் சாப்பாடு நடந்தது. ஆட்டுக் கறி ரசமும், பச்சரிசிச் சோறும் — மண் சட்டியிலேயே சாப்பாடு.

அவனுக்கிருந்த பசியில் பச்சரிசிப் பொங்கலை ரசத்தில் கரைத்துநிறையக் குடித்துவிட்டான்.

மாலையில் எம். பி. எஸ். பேசி முடித்ததும் 'போதுமடா சாமி' என்றபடி எல்லோரும் காரில் ஏறினார்கள்.

ஜஹீராபாத் வழியாக ஹைதராபாத்துக்குப் பயணம். ஜஹீராபாத் போவதற்குள்ளேயே உயிர் போய்விட்டது. சாலையில் இருந்த ஒவ்வொரு குழியிலும் ஒரு யானையைப் போட்டு மூடலாம். அதன் பிறகு அற்புதமான சிமிட்டிச் சாலை. கடை அடைக்கும் நேரத்தில் ஜஹீராபாத் சென்றார்கள். ஓரளவுக்குக் கிடைத்ததைச் சாப்பிட்டுவிட்டு ஹைதராபாத்துக்குப் புறப்பட்டார்கள்.

வழியில் ஏராளமான முயல்கள் காரில் அடிபட்டன. அத்தனையையும் தூக்கிக் கொண்டார்கள்.

ஹைதராபாத்தில் ரிட்ஸ் ஹோட்டல் என்று ஒன்று இருப்பதாகவும், அது வசதியானது என்றும் சென்னையிலேயே நடிகை சாவித்திரி அவனுக்குச் சொல்லி இருந்தார்.

ரூம் வாடகை என்னவென்று கேட்டுக் கொள்ளாமலேயே எல்லோரும் ரிட்ஸ் ஹோட்டலில் தங்கிவிட்டார்கள்.




அவர்கள் கொண்டுபோன முயலைச் சமைப்பதற்கே பன்னிரண்டு ரூபாய் பில் போட்டார்கள். அந்த ஹோட்டலில்.

நாற்பத்தி எட்டு மணி நேரத்தில் எண்ணூறு ரூபாய் பில்லாகி விட்டது. அவன் கையில் இருந்ததே அவ்வளவுதான். ஊருக்குப் போகும்வரை பெட்ரோலுக்கும் செலவுக்கும் பணம் வேண்டும்.

ஹைதராபாத்தில் அவனுக்குத் தெரிந்தவர்கள் இரண்டு பேர். ஒருவர் சாரதி ஸ்டுடியோ முதலாளி. அவர் ஊரில் இல்லை. இன்னொருவர் அன்னபூர்ணா மதுசூதன ராவ். அவர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். இத்தனைக்கும் இருபது நாட்களுக்கு முன்புதான் அவன் அவரதுகம்பெனிக்குப் பாடல்களெழுதி இருந்தான். அதற்கொரு நல்ல தொகையும் பெற்றிருந்தான். அவனுடைய வசதியும் சம்பாதிக்கும் திறமையும் தெரிந்திருந்தும் அவர் உதவ மறுத்து விட்டார். கடைசியில் ஹோட்டலுக்கு மட்டும் ஜாமீன் கொடுக்கச் சொல்லிவிட்டு அவர்கள் ஊருக்குப் புறப்பட்டார்கள்.

வீட்டு வாசலில் காலடி வைத்ததும் முதல் ஆள், மதுசூதன ராவின் ஆள்!

அவன் ஆத்திரத்தோடு ஏற்கனவே அவருக்குப் பணம் அனுப்பியதற்கான ரசீதைக் கொண்டுவந்து காண்பித்தான்.



இரண்டு மூட்டைப் பூச்சிகள் சினிமா தியேட்டரின் மேல் மாடிக்கு ஏறிக்கொண்டிருந்தன.

மூ. பூ. 1: என்னால மாடி ஏற முடியல்லே நீ வேணும்னு போயிட்டு வா.

மூ. பூ. 2: இதுக்குத்தான் அப்பவே சொன்னேன் ப்ளட் ப்ரஷர் உள்ளவங்க இரத்தத்தைக்குடிக் காதேன்னு. -சிவந்தை காந்தி

பொதுவாகவே ஏனோ ஆந்திரர்கள் யாரையும் நம்ப மாட்டார்கள்; யாருடனும் ஒட்ட மாட்டார்கள்; எவ்வளவு காலம் சென்னையில் வாழ்ந்தாலும் தமிழைக் கற்றுக் கொள்ள மாட்டார்கள்! தெலுங்கர்களைத் தவிர மற்றவர்களுக்கு நல்ல நண்பர்களாக இருக்க மாட்டார்கள்; மலையாளிகளைப் போலவோ, கர்நாடகரைப் போலவோ மனம் விட்டுப் பேச மாட்டார்கள்; மற்றவர்களுக்குச் சம்பந்தமில்லாதவர்கள் போலவே நடந்துகொள்வார்கள். ஒருசில ஆந்திரர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்கிறார்கள்.

பயணத்தில் சிரமங்கள் இருந்தாலும், மோயினுபாத் பயணம் பயனுள்ளதாகவே இருந்தது. குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருந்தவர்கள் பரந்த இந்தியாவின் ஒரு பகுதியைப் பார்க்க முடிந்தது.

வறுமை நிறைந்த மராட்டியத்தில் திராவிடர்களைச் சுரண்டுகிறவர்கள் யாருமில்லை; சேட்டியைச் சுரண்டுகிறவர்களே அதிகம்.

எவ்வளவு பொய்யான, மடத்தனமான கற்பனையில் அவர்கள் பல வருஷங்களைக் கழித்திருக்கிறார்கள்? உண்மையில் அவர்கள் மனம் அறிந்தே பொய் சொல்லி விருக்கிறார்கள்! படிப்பறிவற்ற ஒரு கூட்டத்தை மயக்குவதற்காக அந்த மருடின்ய ஊதி இருக்கிறார்கள்.

இந்தியாவின் தேசிய பெருமிதத்தில் ஒரு பிடிப்பு ஏற்படுத்திக் கொள்ள, இந்தப் பயணம் வெகுவாக உதவிற்று. உள்ளுக்குள் முடங்கிக் கிடந்த உணர்ச்சியை இது த[illegible] எழுப்பிற்று.

அதிலும் அவனைப் பொ[illegible], [illegible]ருன் பரந்த கண்[illegible]தான் வாழ முடியும்; பிறரை வாழ வைக்க முடியும் [illegible] னற்ற குறுகிய [illegible] நம் மூளைகாண்டு உலகத்தில் சுக துக்கங்களைப்பாடிவிட முடியாது. நாத்திகமும், பிரிவினை வாதமும், கவிஞனுடைய கற்பனைகளை மழுங்க அடித்து, திறமையை வெகுவாகக் குறைத்து விடுகின்றன.

அந்த வகையில் அவன் செலவழித்த பணமும் நேரமும் நியாயமே.

தோழர் சம்பத்தோடு கட்சியை விட்டு வெளியேறியதில் அவனுக்கு ஒரே ஒரு நஷ்டம் தான் உண்டு: கட்சியின் அறுவடையில் பங்கு பெறமுடியாது: அவ்வளவுதான்.

அவன் வானவெளிப் பறக்க ஆரம்பித்தான். கடவுட் பாடல்களை ஆசைதீர எழுதத் தொடங்கினான். எந்தக் கவிதையையும், கட்டுரையையும் கடவுட் தத்துவத்துடனேயே கலந்தான். நல்லதோர் வீணை செய்து அதை நலங்கெடப் புழுதியில் எறிந்து'கொண்டிருந்தவன், இப்போது ரசி[illegible]களின் முன்னால் இசை மீட்டத் தொடங்கினான்.

இந்த நேரத்தில் 1962 பொதுத் தேர்தல் நெருங்கிற்று.

பிறந்து எட்டு மாதமே ஆகி இருக்கும் ஒரு கட்சி அந்தத் தேர்தலில் ஈடுபடலாமா? கூடாதுதான். ஆனால் தேர்தலில் நிற்க வேண்டும் என்று கட்சியில் பெரும்பாலோர் விரும்பினார்கள்.

சம்பத் ஈரோட்டில் நின்றால் ஜெயிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்று அவன் கருதினான். ஆனால் சம்பத்திற்கு ஒரு விசித்திரமான யோசனை தோன்றிற்று. ''சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்க வேண்டும்; சென்னையிலேயே நிற்க வேண்டும்'' என்றார், அவர்.

தி. மு. க.வின் ஆரம்ப கட்டத்தில் தி. மு. க.வை மதிக்காததும் சென்னைதான், பின்னாளில் தி. மு. க.வின் கோட்டையாக விளங்கியதும் சென்னைதான்.

எப்போதுமே ரோஷமான குத்துச் சண்டையில் ஈடுபடுவது அவனுக்கு ரொம்பப் பிடிக்கும். சம்பத் இந்த யோசனையைச் சொன்னவுடனேயே முதன் முதலில் ஆமோதித்தவன் அவன்தான்.

அப்போது அவன் எதை ஆமோதிக்கவில்லை?

பணமும் நேரமும் பாழாவதற்கு எவ்வளவு நியாயங்கள் உண்டோ, அவ்வளவு நியாயங்களையும் அவன் ஆமோதித்திருக்கிறான்.

சம்பத் சென்னையில் போட்டியிடப் போவதா[illegible] பத்திரிகைகளில் செய்தி வந்தபோது முதலில் மகிழ்ச்சியார[illegible]ம் செய்தவர்கள் காங்கிரஸ்கா[illegible]ன். காங்கிரஸ் ஒரு அபேட்சகை[illegible] றுத்தாமல் இருக்க வேண்டும் என்[illegible] அவர்கள் ஆசைப்பட்டார்கள்.

ஆனால், காமராஜர் கேட்பாரா? இந்த யோசனையைச் சொன்னவர்களை எல்லாம் துரத்தியடித்துவிட்டு, திரு சி. ஆர். ராமசாமியை அபேட்சகராகப் போட்டுவிட்டார்.

பொது எதிரியைத் தேர்ந்தெடுத்து அடிப்பதில், காமராஜர் எப்போதுமே கெட்டிக்காரராக இருந்ததில்லை. கட்சி, கட்டுப்பாடு என்று ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லித் தவறு செய்து விடுவார்.

தோழர் சம்பத், காமராஜரிடம் போர்க்குப் போகவில்லை. முடிந்தவரை பார்க்கலாம் என்று எல்லோருமே முனைந்து இறங்கி விட்டார்கள்.

நகரத்தில் சம்பத்துக்கு ஒரு புதிய செல்வாக்கு ஏற்பட்டது. சம்பத்தின் அறிவிப்பைக் கேட்டு தி.மு.க.வினர் நடுங்குவதாக '[illegible] விகடன்' கார்ட்டூன் [illegible]

[illegible]

விடலாம் என்றும் அவனே கற்பனை செய்து கொண்டு, கம்பெனிகளிலிருந்து பணத்தை வாங்கி இறைக்க ஆரம்பித்தான். கத்தை கத்தையாகப் புதுப் புது நோட்டுகள். 'தினத் தந்தி'யில் சைக்கிள் சின்னம் போட்டு முழுப் பக்க விளம்பரம். மற்ற பத்திரிகைகளிலும் பெரிய பெரிய விளம்பரங்கள்.

ஐயாயிரம் ரூபாய் செலவில் அழகுபடுத்தப்பட்ட ஒரு புதிய டிராவலர் காரையே, சம்பத்தின் உபயோகத்துக்காகக் கொடுத்து விட்டான்.

தேர்தல் சூடு பிடித்தது. சரி பாதி காங்கிரஸ்காரர்களும், தி. க.வினரும் த.தே.க.வினரும் சேர்ந்து வேலை செய்ததால் பெரும் பெரும் கூட்டங்கள் நடந்தன. பிரம்மாண்டமான சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திலும் குதூகலத்திலும் தன்னை மறந்த அவன், நிலை தெரியாமல் செலவழிக்கத் தொடங்கினான். சில குப்பங்களில் பணத்தை வாரி இறைத்தான்.

தேர்தல் முடிவை எதிர்பார்த்து டெலிபோன் அருகிலேயே உட்கார்ந்தான். முடிவு வர வர அவனது உற்சாகம் குறைந்து ஆத்திரம் அதிகரித்தது.

சம்பத்தும் சி. ஆர். ராமசாமியும் பக்கம் பக்கமாக வந்து கொண்டிருந்தார்கள். மனோகரன் இரண்டு பேரையும் தாண்டிப் போய்க் கொண்டிருந்தார்.

மொத்தக் கணக்குப் பார்த்தபொழுது, சி. ஆர். ராமசாமி நிற்காதிருந்தால் சம்பத் ஜெயித்திருக்கக் கூடும்.

அன்றெல்லாம் அவனுக்குத் தூக்கமில்லை. தேர்தல் முடிவுகள் தொடர்ந்து வெளி வரத் தொடங்கின.

தி. மு. க. சட்டசபையில் ஐம்பது இடங்களையும், பாராளுமன்றத்தில் பதினைந்து இடங்களையும் கைப்பற்றியது.

'இது ஒரு அபாய அறிகுறி' என்றே அவனுக்குத் தோன்றிற்று. அப்போதும் கட்சியை விட்டு ஏன் விலகினோம் என்று அவன் நினைக்கவில்லை. எப்பாடு பட்டாவது தி.மு.க.வை ஒழிக்க வேண்டும் என்று கறுவினான்.

பிரத்யட்ச உண்மைகளைப் புரிந்துகொள்ளும் தகுதி அவனிடம் இல்லை. இது ஜனங்களின் மனோபாவம்; இதுதான் நீடிக்கும் என்பதை உணர்ந்தாவது அவன் அப்போது அரசியலை விட்டு விலகி யிருக்கலாம்; செய்யவில்லை. அதற்குப் பதிலாக, 'குடும்பமே அழிவதானாலும் சரி; தி.மு.க.வை. அழிப்பது' என்று கங்கணம் கட்டிக்கொண்டான்.

அப்போதெல்லாம் தி. மு. க. என்றால் அவனுக்குக் கருணாநிதி நினைவுதான் வரும். 62 பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டார். அந்தத் தொகுதிக்கு வரும்படி காங்கிரஸ்காரர்கள் அவனை அழைத்தார்கள். அவன் போகவில்லை. தேர்தலில் அண்ணாவுக்கு எதிராகப் பேச அவன் விரும்பவில்லை. சட்டசபையில் அவர் இருக்க வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். ஆனால் சம்பத் தோற்ற அதே தேர்தலில் காஞ்சிபுரத்தில் அண்ணாவும் தோற்றார்.

அவள் மறுக்கவில்லை!



மலரென்றேன். மலருக்கு முள்ளுண் டென்று
மறுத்தாள். நானுமதைச் சரியென் றெண்ணி
நிலவென்றேன். நிலவுக்குக் கறையுண் டென்று
பழித்தாள், பழித்தவளைத் தூரத்திச் சென்று

கனியென்றேன். கனியெல்லாம் இனிக்கா தென்று
கடிந்தாள். கடிந்தவளை அணுகிச் சென்று
பனியென்றேன். 'ஐஸாவைக் கின்றீர்?' என்று
பதைத்தாள். பதைத்தவளின் பக்கம் சென்று

கொடியென்றேன். கொடிகட்கோர் அழகே தென்று
கொதித்தாள். குற்றந்தான், மன்னித் துக்கொள்
ளடியென்றேன். முகஞ்சிவக்க, 'ஊடல் போதும்,
அத்தான்!' என்றென்னைத் தழுவிக் கொண்டு

மலரென்றாள். மலருக்கு முள்ளுண் டென்றேன்
மயக்கும் குணமுண்டு, மணமுண் டென்றாள்.
நிலவென்றாள். நிலவுக்குக் கறையுண் டென்றேன்.
நகைத்தாள். நிலவுக்கு ஒளியுண் டென்றாள்.

கனியென்றாள். கனியெல்லாம் இனிக்கா தென்றேன்.
கனியென்றால் சரிதான் நான் கன்னி என்றாள்.
பனியென்றாள். 'ஐயென்று சொன்னால்!' என்றேன்.
பழக்கத்தில் நான்கூட பனிதான் என்றாள்.
கொடியென்றாள். கொடிகட்கோர் அழகே தென்
றேன்.
தழுவும் குணமுண்டே என்னைப்போல் என்றாள்.
'அடிக்கள்ளி' என்(று) அவளை அள்ளிக் கொண்டேன்
அதற்குமட்டும் மறுப்பேதும் சொன்னாள் இல்லை!

-அனுராதா கட்டபொம்மன்

தி.மு.க.வினர் வெற்றி விழா கொண்டாட முடியாமல் போனதே, த.தே.க.வுக்கு ஒரு நிம்மதியாக அமைந்தது.

சம்பத் தோல்வியை ஒப்புக் கொண்டுவிட்டார். அவன் ஒப்புக்கொள்வானா! உடனே சிந்தாதிரிப்பேட்டையில் அவனே செலவழித்துப் பெரும் கூட்டத்தைக் கூட்டினான்.

இதெல்லாம் ஏன்?

அவனுக்குப் பயமோ, ஆத்திரமோ வரும் போதெல்லாம் ஒரு கூட்டத்தைக் கூட்டி, ஆறுதலடைவான்; அவ்வளவுதான்!

அந்த எழுச்சிக் கூட்டத்திற்குப் பிறகு பாடல்களில் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

சிந்தனை நன்றாகவேதான் இயங்கிக்கொண்டிருந்தது. ஆனால் இரவிலே மது அருந்தும் பழக்கம் அதிகமாகிக் கொண்டிருந்தது. தினசரி அருந்த வேண்டும்போல் தோன்றியது.

யாராவது தி.மு.க.வினர், எப்போதாவது காட்டிக் கொடுத்து விட்டால் என்ன ஆவது? ஒரு பெர்மிட் வாங்கியாக வேண்டும்!

(வளரும்)




இன்று போய் நாளை வா

கே. பாக்யராஜ் உருவாக்கி வரும் படம் 'இன்று போய் நாளை வா': பழனிச்சாமியும் வெங்கட்டும் ரொம்ப காலமாக நெருங்கிய நண்பர்கள். 'இன்று போய் நாளை வா' என்ற இந்தப் படத்தில் என்னுடன் நடிக்கிறார்கள். இல்லை, இல்லை, நாங்கள் அன்று ஆடிய ஆட்டங்கள்தான், வாழ்ந்த வாழ்க்கை தான் இன்று படமாக்கப்படுகின்றன. உண்மை வாழ்க்கையைப் படம் பிடிக்கும்போது அந்த வாழ்க்கையில் பங்கு பற்றியவர்களே நடிப்பது புதுமை தானே!

புதுமை புதுமை! புதுமை









இன்னும் சில பக்கங்கள்

• இயக்குனர் தேவராஜ் மோகன் தற்போது எடுத்துக் கொண்டிருக்கும் படம் 'இன்னும் சில பக்கங்கள்': ஊருக்கு ஒதுப்புறமாக ஜனசந்தடி அற்ற இடம். அந்த இடத்தைக் காமிரா வளைய வருகிறது. ஒற்றைப் பறவை ஒன்றின் ஒலி, மரண அமைதிக்குச் சுருதி சேர்க்கிறது. தனியே ஒரு வீடு. வீட்டைக் காமிரா நெருங்கி உள்ளே செல்லும் போது பறவையின் ஓலத்தையும் மீறி அணில் ஒன்று கீச்சிடுகிறது. ஹால், படிக்கட்டுகள், ஓர் அறை. தூரத்தில் கேட்கும் பறவையின் ஒலி, சற்று அருகில் கேட்கும் அணிலின் ஓசை — படுக்கை அறை. படுக்கையில் பெண் ஒருத்தி. அவளை மூகரும் இளைஞன் ஒருவன். இளமையின் அரங்கேற்றம். முடிவில்?

''நீ கடையைக்கட்டு. என் மனைவியை வரவேற்க நான் ஏர்போர்ட் போகணும்''— அவன்.

அதிர்ச்சி — மௌனம் — அவள். தூரத்துப் பறவையின் ஒலி, சற்று அருகில் கேட்கும் அணிலின் ஓசை. அருகில் உள்ள ஒரு டேப் ரிகார்டரை அவன் இயக்க 'மதுமதி' பாடல் 'ஆஜாரே' என ஒலிக்கிறது. கூடவே அணில், பறவை ஆகியவற்றின் ஒலிகள் கலந்து கேட்கின்றன. அவன் ஷேவ் செய்துகொள்கிறான். க்ஷவரக் கத்தி அவள் கரத்துக்குச் செல்கிறது. சில வார்த்தைகள் டயலாக். கத்தி அவன் கழுத்தை அழுத்த பீறிடும் ரத்தம் கண்ணாடியில் தெறிக்க வீலென்ற அலறல். கீச் கீச் சென்று பயந்து கத்தும் அணிலுக்கு ஆதரவாக வேறு பல அணில்களின் எதிரொலி. படபடக்கும் பறவையின் கூக்குரல். இவற்றுடன் கலந்து வரும் 'ஆஜாரே' பாடல். பயங்கரமான அவனுடைய சிரிப்பு. இப்படியே படத்தில் ஒவ்வொரு காட்சியிலும் உருவகமாகப் பல பொருத்தமான ஒலிகள். சுற்றுப்புற ஒலிகள் மூலமே சம்பவங்களுக்குச் சுவை ஏற்றப்படுகிறது. மெய்சிலிர்ப்பை உருவாக்க ஸ்பெஷல் எஃபெக்ட் ஒலிகள் அடங்கிய பத்து காஸெட் டேப்புக்கள் சேகரித்திருக்கிறோம்.


பேட்டி: —சலன்

கழுகு

• எஸ். பி. முத்துராமன் டைரக்ஷனில் உருவாகும் படம் கழுகு: இப்படத்தில் கழுகு என்ற பெயர் கொண்ட பஸ் நடிக்கிறது! இந்த பஸ் எல்லா வசதிகளும் மிக்க ஒரு பங்களாவுக்குச் சமம். கதவுகள் தானே திறந்து மூடிக்கொள்ளும். உள்ளே நுழைந்தால் படுத்துக் கொள்ளப் படுக்கை கீழேயிருந்து மேலே வரும். சகல வசதிகளும் கொண்ட குளியல் அறை. கதாநாயகன் பஸ்ஸுக்குள்ளிருந்தே தனது மோட்டார்பைக்கை ஸ்டார்ட் செய்து ஒரு சுவிட்சை அமுக்கினால் போதும். அது இறங்க சாய்மானப் பலகை தானே வெளியே வரும். இவ்வளவும் நிறைந்த அதிசய, புதுமையான பஸ் ஒன்றை நிர்மாணித்திருக்கிறோம். படத்தில் ரஜனிகாந்துடன் அது நடிக்கிறது!

சர்வதேச சத்ய சாயி

வெளிநாட்டவர் பஜனை



திங்கட்கிழமை. நவம்பர் 17ம் தேதி. பங்களூரிலிருந்து புட்டபர்த்திக்குக் காரில் போய்க்கொண்டிருக்கிறோம். பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா அவர்களின் 55வது பிறந்த தினத்தையொட்டி நடக்கும் ஒரு வார கலா நிகழ்ச்சிகளுக்கும், ஸ்ரீ சத்ய சாயி சேவா சங்கங்களின் மூன்றாவது உலக மகாநாட்டு நிகழ்ச்சி நிரல்களுக்கும், லட்சக் கணக்கான மக்கள் புட்டபர்த்தி கிராமத்தை நோக்கி விரையும் வாரம் இது. வழியில் பாகேபள்ளி என்ற ஊரருகில் சத்யசாயி சேவா தளத் தொண்டர்கள் சமாதானக் கொடி ஆட்டி நம் காரை நிறுத்துகிறார்கள். ''சாயி ராம், ஸார். சாயிராம் அம்மா! தங்களுக்குத் தாக சாந்திக்கு குளிர் பானம் வேண்டுமா, அல்லது காப்பியா? டீயா?'' என்று உபசரித்து நம்மைப் பக்கத்தில் அமைத்திருக்கும் குடிசைக்கு அழைத்துச் சென்று உபசாரத்தில் திணற அடிக்கிறார்கள். பிஸ்கட், சாக்லேட், என்றும் தட்டுக்களை நீட்டுகிறார்கள். ''இதெல்லாம் எதற்கு?'' என்றால் ''வழியில் களைத்து வந்துகொண்டிருக்கும் பயணிகளுக்குப் பணிவிடை செய்யுமாறு ஸ்வாமி சொல்லியிருக்கிறார்.'' என்று பதில் வந்தது. ''ஸ்வாமி சொல்'' என்னும் மந்திரத்துக்குக் கட்டுண்டு அவர்கள் நடப்பது போல், நாமும் இந்த உபசாரத்துக்குக் கட்டுப்படுகிறோம். மனம் குளிர்ந்து, களைப்புத் தணிந்து, பயணத்தைத் தொடர்கிறோம். இது மட்டுமா, சுவாமி சொல்லுக்குக் கட்டுப்பட்டு என்னவெல்லாம் அற்புதங்கள் நடக்கின்றன! புத்தம் புதியன போல் சாலைகள் சீர்ப்பட்டிருக்கின்றன. புட்டபர்த்தியே பூலோகத்தில் ஒரு வைகுண்டம் போல் ஜகஜ்ஜோதியாகக் காட்சியளிக்கிறது. ஸ்ரீ சத்ய சாயி கல்லூரி, ஹாஸ்டல், ஆரம்பப் பள்ளி முதலியவற்றுக்காக எழுந்திருக்கும் புதிய கட்டிடங்கள், அவற்றின் முகப்புகளில் கண்கவர் சிற்பங்கள் எல்லாம் வண்ண விளக்குகளில் ஒளிர்கின்றன. எங்கு பார்த்தாலும் தோரணங்கள், அலங்காரங்கள். சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த சேவா தள சேவகர்கள் புட்டபர்த்தி சாலைகளையும், பிரசாந்தி நகரத்தையும் சுத்தமாக சுகாதாரக்கடன் வைக்கக் கொள்வதில் அக்

● அன்று புதுமையான புரோகிராம். பகவான் பாபா—மேடை மீது வந்தமர்ந்தவுடன் தொடங்கியது. வெளிநாட்டு பக்தர்கள் பஜனை. ஆண்களும் பெண்களும் பக்தியுடன் அழகாகப் பஜனை செய்தனர். கூட்டமும் உடன் பாடியது. ஐரோப்பிய ஆண்களும் பெண்களும்தான் எத்தனை மெய்மறந்து ஜாலராவுடன் ஈசுவர நாம சங்கீர்த்தனம் செய்கின்றார்கள்!

சாப்பாட்டு ஏற்பாடு

● உணவுக் கூடங்கள் பலரகமாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. எப்பொழுதும் இருக்கும்

● மகாநாட்டுத் திறப்பு விழா

லட்சக் கணக்கான மக்களை வரவேற்க புட்டபர்த்தியைச் சித்தமாக்கியிருந்தார் ஸ்ரீ பாபா. சுகாதார வசதிகளுக்குக் குறைவே இல்லை. மூன்று லட்சத்துக்கு மேல் பிறந்த நாள் வைபவத்தைப் பார்க்க வந்துவிட்ட ஜனத் திரளைத் தங்கள் முழு சாமர்த்தியத்தையும், உழைப்பையும் காட்டி நிர்வகித்து விழாவைக் காணச் செய்தனர் சேவா தளத் தொண்டர்கள்.

உலக சம்மேளனம்

● இந்த மூன்றாவது மகாநாட்டுக்கு நாற்பது நாடுகளிலிருந்து பத்தாயிரம் பிரதிநிதிகள் வந்திருந்தனர். மகாநாட்டுக்கு முதல் தினம் பிரசாந்தி மந்திரத்தில் ஸ்ரீ பாபா ஓர் ஆன்மீக கண்காட்சியைத் திறந்து வைத்தார். உலகத்தின் பல்வேறு பாகங்களில் சாயி சங்கங்கள் செய்யும் சேவைகளைப் பற்றிய கண்காட்சி இது.

நவம்பர் 19ந் தேதி காலை மகாநாட்டு திறப்பு விழா. கோலாகலமாக சர்வதேச பிரதிநிதிகள் ஊர்வலத்துடன் ஆரம்பமாயிற்று. அவரவரும் தங்கள் நாட்டு உடை அணிந்து அணிவகுப்பு நடத்தினர்.

அணிவகுப்பின் மகுடமாக ஸ்ரீ சத்ய சாயி பாபா நடந்து வந்தார். பக்தர்கள் அவருக்குப் பொற் குடை பிடித்து, சாமரம் விசி உடன் வந்தனர். வேத கோஷம் முன்னால். பாபாவின் யானை சாயி கீதா முன்னணியில் ஆடி அசைந்து ஊர்வலத்துக்கே களை தந்தது. பஜனையும் மந்திர கோஷமும் ஓர் அரிய சூழ்நிலையை உருவாக்கின.

ஊர்வலம் பூர்ணசந்திரா மண்டபத்தில் முடிய அடுத்து மகாநாட்டுத் திறப்பு விழா. பல்வேறு உலக மொழிகளில் பாபாவைப் பற்றியும், அவரது அருளுரைகளைப் பற்றியும் பல புத்தகங்கள் அன்று வெளியிடப்பட்டன. ''சத்ய சாயி கதா'' என்ற எல். பி. ரெகார்டும் வெளியிடப்பட்டது.

தமது மகாநாட்டுத் துவக்கப்பிரசங்கத்தில் ஸ்ரீ சத்திய சாயி அவர்கள் மக்கள் கல்வ

இந்தியர்கள், வெளி நாட்டு பக்தர்கள். நூற்றுக் கணக்கான திருவிழாக் கடைகள். நிரம்பி வழியும் பஸ் ஸ்டாண்ட். மிலிட்டரி டெண்ட்களும் பந்தல்களும் பிரதிநிதிகளுக்காக அமைக்கப்பட்டிருந்தன.

எல்லாரும் பூர்ண சந்திரா மண்டபத்தை நோக்கி விரைகிறார்கள். மண்டபம்தான் எத்தனை பிரும்மாண்டமானது? 30000 ஜனங்கள் உட்காரலாம். நடுவில் ஒரு தூண் கூடக் கிடையாது. பெரிய மேடை.

சாலைகளை நிர்வாகம் செய்யும் பல லக்ஷாதிபதிகள் இங்கு ஜனங்களுக்கு அன்புடனும், பயபக்தியுடனும், தாங்களே முன்னின்று உணவு பரிமாறிக் கொண்டிருந்தனர். உணவுக் கூப்பன்கள் விற்பனை ஒருபுறம். தையல் இலைகளில் ''க்விக் மீல்'' லிஸ்டப்படி வழங்கப்பட்ட உணவை வரிசைக்கிரமப்படி வாங்கிப் போகும் மக்கள் ஒருபுறம்.

மாறவேண்டும் என்பதை வலியுறுத்தினார். நல்லவர்களாக மாறிவிட்டால், எப்பொழுதும் அவர்கள் நல்லதே செய்வார்கள் என்று கூறினார். சனாதன தர்மத்தைப் பற்றியும் விரிவான தகவல்களை எடுத்துரைத்தார். கடலைப்போல் விசாலமானதான இந்த சனாதன மதம் எல்லா மனிதகுலத்திற்கும் உயிரைப் போன்றது. இந்தியாவில் தோன்றினாலும், உலகமெங்கும் பரவி வேர் விட்ட மதம் இது. ஹிந்துக்களுக்கே சொந்தம் என்று நினைப்



பக்தர்களுடன் பாபா

'டேனியல் வெப்ஸ்டர்'இடம் ஒருவர் கேட்டார் : ''உங்களுக்குத் தோன்றிய எண்ணங்களிலேயே மிகச்சிறந்த எண்ணம் எது?''

வெப்ஸ்டர் சொன்னார் : ''நாம் ஆண்டவனுக்கும் பதில் சொல்லவேண்டியிருக்கும் என்ற எண்ணம்!''

- சம்பத்குமாரி

ஆதாரம் : 'விஸ்டம்'

பது தவறு. மனிதன் தோன்றியபோது தோன்றியது சனாதன மதம். அது யாவருக்கும் பொதுவானது. அனைவரும் ஒன்றே என்ற உண்மையைப் போதிக்கும் தர்மம் சனாதனம் என்றார். அவர் பஜனை ஒன்று பாட அனைவரும் கோஷ்டியாகச் சேர்ந்து ஒரே குரலில் பகவான் நாமசங்கீர்த்தனம் செய்தனர்.

ஸ்ரீ பாபாவின் பிரசங்கத்தை அடுத்து, ''சாயி பாதை'' என்னும் விஷயத்தைப் பற்றிய பிரசங்கங்கள் தொடர்ந்தன. அடுத்த இரண்டு நாட்களும் மகாநாட்டில் பல முக்கிய ஆன்மிகக் கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன.

இரண்டாவது தினத்தில் சமூக சேவை திட்டங்கள் பற்றியும், தொழிலாளரிடையே கடமை, கட்டுப்பாடு பக்தி ஆகியவற்றை வளர்ப்பது, பற்றியும் விவாதித்தார்கள். சாயிதத்துவங்களை பல கோணங்களிலிருந்து பல உலக அறிஞர்கள் எடுத்துரைத்தனர்.

பிறந்த நாள் வைபவம்

● விடியற்காலை பிரசாந்தி மந்திரத்திலிருந்து ஸ்ரீ சத்ய சாயி சுப்ரபாதம் ஒலிபரப்பப்படும் பொழுதே ஜனங்கள் தயாராகி பூர்ண சந்திரா மண்டபத்துக்கு வந்து கொண்டிருந்தனர். அசாத்தியமான கூட்டம். பகவான் பாபா சிவப்பு அங்கியுடன் அரியாசனத்தில் வந்தமர்ந்தவுடன், வெளி நாட்டுப் பிரதிநிதிகள் அவருக்கு மாலை போட்டு, பாத நமஸ்காரம் செய்து வணங்கினர். இதைக் கிடைப்பதற்கரிய வாய்ப்பாகவும், பாபா ஓர் அபூர்வமான, உயர்ந்த அரிய பரமாத்மா என்றும் குறிப்பிட்டுப் பேசினார்கள். தம், பிறந்த நாள் சொற்பொழிவுக்குப் பின் ஸ்ரீ பாபா தம் கையில் சிறு வெள்ளிவாளியைத் தூக்கிக் கொண்டு பலருக்கும் லட்டு அளித்தது கண்கொள்ளாக் காட்சி.

கலையரங்கம்

● இந்த ஒரு வாரமும் தினமும் மாலையில் கலை நிகழ்ச்சிகள் மக்களை மகிழ்வித்தன. கர்நாடக இசையும், மெல்லிசையும் மேல் நாட்டு பாப் இசையும் நமது சினிமா சங்கீதமும் நாடகமும் நாட்டியமும் இந்தக் கலையரங்கில் சமமாக இடம் பெற்றன.

ஒரு வாரம் சென்றதே தெரியாமல் ஏதோ ஒரு சுவர்க்கத்தில் இருந்துவிட்டுத் திரும்புகிறோம் என்ற நிறைவுடன், பெங்களூர் புறப்பட்டோம்.

ஸ்ரீ சத்ய சாயி பாபா புரியும் அற்புதங்கள் பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். சின்னஞ் சிறு புட்டபர்த்தி கிராமத்தில் அவர் ஓர் உலக மகாநாட்டையே உருவாக்கியதும் ஓர் அற்புதம்தானே!

— சகுந்தலா பாலு.



அருள்வாக்கு

சமூக ஒற்றுமைக்கு வழி

அன்னதானம் பரோபகாரத்தில் ஓர் அம்சமே. பரோபகாரம், சமூக சேவை, சோஷல் சர்வீஸ் என்று இந்த நாட்களில் ஆர்ப்பாட்டமாகப் பிரகடனம் பண்ணுவதை, முற்காலத்தில் எந்தப் பகட்டுமில்லாமல் சுபாவமாகவே மக்கள் செய்து வந்தனர். இதற்கு 'பூர்த்த தர்மம்' என்று ஒரு பெயர். ஜனங்களுக்காக கிணறு, குளம் வெட்டுவது, அன்னதானம், அவர்களின் ஆத்ம க்ஷேமத்துக்காகக் கோயில் கட்டுவது, அதன் அங்கமாக நந்தவனம் அமைப்பது எல்லாம் 'பூர்த்த தர்ம'த்தில் சேர்ந்தவை. இதில் கிணறு, குளம் வெட்டுவது முதலில் சொல்லப் பட்டிருக்கிறது. அதனால்தான் பேச்சு வழக்கில்கூட அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? வெட்டிக் கொண்டிருக்கிறானோ? என்கிறோம். 'வெட்டுவது' அவ்வளவு பெரிய தர்மம். தாகமெடுத்த பசுக்களும் மற்ற பிராணிகளும் நீர் அருந்துவதற்காகக் கிராமத்துக்கு வெளியில் மேய்ச்சல் பூமியில் ஒரு குளம் வெட்டினால் எவ்வளவோ புண்ணியம். ஒரு கிராமத்தில் அல்லது பேட்டையில் இருக்கிற சகலரும் — பணக்காரர், ஏழை என்ற வித்தியாசம் இல்லாமல் — ஒன்று சேர்ந்து மண்வெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு இப்படிப்பட்ட சரீரப் பிரயாசையுள்ள பரோபகார சேவையில் ஈடுபட வேண்டும். இதனால் சமூக ஒற்றுமையும் அதிகமாகும்.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

சர்க்கரை

மாரி-அறவாழி

"என்னப்பா தரணி! ஏன் ஒரு மாதிரியிருக்கிறாய்? வீட்டில் ஏதாவது தகராறு என்ன?'' என்று விசாரித்தான் பக்கத்து நாற்காலிக்காரப் பரசுராமன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லையே'' என்று சிரித்து மழுப்பினான் தரணிபதி.

''பொய். நீ சொல்லாவிட்டாலும் உன் முகம் சொல்லுகிறதப்பா. எப்போதும் சிரிப்பும் கும்மாளமுமாக இருப்பவன் இன்றைக்கு 'உம்ம்' மென்றிருந்தால் ஏதாவது விஷயம் இல்லாமல் இருக்காது...''

''நீ நினைப்பது போல் எதுவும் இல்லை. காலையிலிருந்தே லேசாகத் தலைவலிக்கிறது... அவ்வளவுதான்!''

அதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை பரசுராமன்.

நண்பனிடம் இப்படிச் சொல்லித் தப்பித்துக் கொண்டானே தவிர உண்மையில் அவன் மனம் சரியாகத்தான் இல்லை.

காரணம், வீட்டில் நடந்த சம்பவம்.

தரணிபதி ஒரு 'காப்பி'ப் பிரியன்.

படுக்கையிலிருந்து எழும்போதே சுடச் சுடக் காப்பி வேண்டும்.

அதற்கேற்ப அவன் மனைவி காமாட்சியும் காப்பியும் கையுமாகவே அவனை எழுப்புவாள்.

இன்று காலை, 'காப்பி' என்று கூவிக் கொண்டே அவன் எழுந்தபோது காமாட்சி எதிரே நிற்கவில்லை. அவளுடைய அலறல் சமையலறையிலிருந்து: ''ஐயோ...! இங்கே இந்த அநியாயத்தைப் பாருங்களேன்...''

என்னவோ ஏதோவென்று பயந்துபோன தரணி ''என்ன காமாட்சி? என்ன, என்ன?'' என்று எழுந்து ஓடினான்.

கையைப் பிசைந்து கொண்டு நின்ற காமாட்சி, பித்தளை அண்டாவைக் காட்டி ''போச்சே, போச்சே! அத்தனையும் பாழாப் போச்சே!'' என்று ஒப்பாரி வைத்தாள்.

அண்டாவைப் பார்த்தான் அவன். அதிர்ந்து போனான்.

சுவரில் மாட்டியிருந்த சர்க்கரை நிறைந்த பை, ஆணியோடு கழன்று அண்டாவில் விழுந்து, சர்க்கரையெல்லாம் தண்ணீரில் கரைந்து விட்டிருந்தது.

பை மட்டும் மிதந்து கொண்டிருந்தது.

என்ன செய்வதென்று தோன்றவில்லை தரணிபதிக்கு.

நாலைந்து நாட்களாகக் கருப்பட்டிக் காப்பி குடித்துக் கசந்துபோன நாவுக்கு ருசியாக நாளையிலிருந்து சர்க்கரை போட்ட காப்பி குடிக்கலாம் என்று இரவு படுக்கப் போகும்போதுதான் அவன் மனக் கோட்டை கட்டினான்.

அது இவ்வளவு சீக்கிரத்திலா இடிந்து விட வேண்டும்?

கணவன் என்ன சொல்வானோ என்று பயந்து கொண்டே அடுப்பைப் பற்றவைத்தாள் காமாட்சி.

வழக்கம்போல் கருப்பட்டிக் காப்பி தயாரித்து எடுத்து வந்து நீட்டினாள்.

தரணிபதி ஒன்றும் கடிந்துகொள்ளவில்லை.

வேண்டா வெறுப்பாக வாங்கி, விஷத்தைக் குடிப்பதுபோல் குடித்தான்.

அதே மனநிலையுடன் அலுவலகத்துக்கு வந்துவிட்டான்.

தரணிபதி அந்த அலுவலகத்தில் வருடக் கணக்காக இருக்கிறவன் என்றாலும் ரிகார்டு செக்‌ஷனுக்குப் புதிதாக மாற்றப் பட்டிருந்தான்.

குழந்தை குட்டிகள் அதிகம் இல்லாத சிறிய குடும்பம்தான். ஆனால் உறவினர்களின் தொல்லை தாங்க முடியாது.

அடிக்கடி கும்பல் கும்பலாக வந்து நாட் கணக்கில் தங்கி, வீட்டில் இருப்பதையெல்லாம் காலி செய்துவிட்டுப் போவார்கள்.

பத்து நாட்களுக்கு முன் வந்த ஒரு பட்டாளம் வீட்டிலிருந்த சர்க்கரையையெல்லாம் அடியோடு 'துவம்சம்' செய்துவிட்டுப் போயிருந்தது.

பொட்டுச் சர்க்கரை மீதியில்லை.



தரணிக்கு சர்க்கரை இல்லாத காப்பி பிடிக்கவே பிடிக்காது.

ஆனால் அது தீர்ந்துவிட்ட நிலையில் வேறு வழியின்றிக் கருப்பட்டி சேர்ந்த காப்பியைக் குடித்துத் தொலைக்க வேண்டி யிருந்தது.

ஒவ்வொரு முறை குடிக்கும்போதும் அதன் 'கவிச்சை'யும் ருசியையும் பொறுக்க முடியாமல் முகத்தைச் சுளிப்பான், மனைவியிடம்.

அதற்கு அவள், "என்னிடம் முகம்சுளித்து என்ன பயன்? பக்கத்து வீட்டுக்காரம்மா கூட தன் சர்க்கரைக் கார்டைக் கொடுப்பதாகத் தான் சொல்றுங்க. பணம் இருந்தால்தானே வாங்குவதற்கு?'' என்று பதிலடிகொடுப்பாள்.

''பணம் இருந்தால்தான் சர்க்கரை வாங்க முடியும் என்பது நீ சொல்லித்தான் எனக்குத் தெரிய வேண்டுமாக்கும்!...மாதக் கடைசியில் அதற்கு எங்கே போய்த் தொலைவேன்?''

''ஆமாம், மாதக் கடைசி மாதக் கடைசி பாடுகிறீர்கள்.... உங்களைப் போல ஆபீஸ்ல வேலை செய்யும் மற்ற ஆண்பிள்ளைகளெல்லாம் எவ்வளவு வசதியாக இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாதா என்ன! மாதம் முப்பது நாளும் கை நிறையப் பணம் வைத்திருக்கிறார்கள்., வீடு நிறையப் பொருள்கள் வாங்கிக் குவிக்கிறார்கள்.! ம்...ம்.. உங்களுக்கு எங்கே வரப் போகிறது அந்தச் சாமர்த்தியம்....''

தரணிக்கு அவள் குத்திக் காட்டுவது புரிந்தது. காமாட்சி சொன்னது மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது.

பதினொரு மணி சுமாருக்கு ஓர் ஆள் அவனுடைய செக்ஷனுக்குள் கும்பிட்டுக் கொண்டே நுழைந்தான். தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான்.

பெயர் அத்தியப்பனாம். புகழ் பெற்ற காண்ட்ராக்டர் ஒருவரின் கணக்குப்பிள்ளையாம்.

''என்ன சேதி?'' என்று விசாரித்தான் தரணி.

போபாலில் ஜோதிடர்கள் மாநாடு நடத்த தாற்காலிக டெலிபோன் இணைப்பு கேட்டனர் மாநில அரசிடம்! அனுமதி கிடைக்கவில்லை. சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்து டெலிபோன் வசதி அடிப்படை பேச்சுரிமையுடன் இணைந்தது என்று வாதிட்டு வெற்றி பெற்று விட்டனர். இது வரை செய்தியில் சுவை ஏதும் இல்லை. ஆனால் ஜஸ்டிஸ் கிருஷ்ணய்யர் ஜோதிட கழகத்தாரிடம் இப்படிக்கேட்டபோது குபீர் சிரிப்பு:

''உங்கள் ஜோதிடம் மூலம் எங்கள் தீர்ப்பைத் தெரிந்து கொண்டிருக்கலாமே!''

டி. ஆர். அலமேலு.



''உங்களைத் தனியாகப் பார்க்க வேண்டுமுங்க. எப்போது சௌகரியப்படும்?''

''எதற்குப் பார்க்க வேண்டும்?...''

''அதை யெல்லாம் அப்புறம் சொல்கிறேன் சார்.... சாயந்திரம் ஒரு 'ஏழு மணிக்கு வந்தால் தனியாக இருப்பீர்கள் அல்லவா? கொஞ்சம் முக்கியமான காரியம். உங்கள் தயவு வேண்டும்...''

தரணிபதிக்குக் குழப்பமாக இருந்தது அவன் சொன்னதெல்லாம், என்றாலும் சரி என்று சொல்வது போல் தலையாட்டி வைத்தான். அவன் போன பிறகு என்னவாக இருக்கும் என்று மேலும் குழப்பத்தில் ஆழ்ந்தான்.

சொன்னது போலவே ஏழு மணிக்குத் திரும்பவும் வந்தான் அத்தியப்பன்.

அலுவலகத்தில் எல்லோரும் போய்விட்டிருந்தார்கள். தரணிபதி மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தான்.

''இருக்கிறீர்களா சார்? எங்கே போய் விட்டீர்களோ என்று சந்தேகப் பட்டுக் கொண்டே வந்தேன். நல்ல வேளை....''

என்று குரல் கொடுத்தபடி உள்ளே வந்த அத்தியப்பன் இரண்டு இருபது ரூபாய் நோட்டுக்களை எடுத்துச் சட்டென்று தரணிபதியின் சட்டைப் பைக்குள் திணித்து விட்டான்.

''என்ன? என்ன இதெல்லாம்?.......''

என்று பதறினான் தரணி..

''ஒன்று மில்லை ஸார்.... அமைதியாக இருங்கள்'' என்று அலட்டிக் கொள்ளாமல் கையமர்த்திய அத்தியப்பன் வந்த விவரத்தைச் சொன்னான்.

புறம்போக்கு நிலம் பற்றிய விவரம் ஒன்று அவனுக்கு வேண்டுமாம். சட்டப்படி அதைக் கேட்டு வாங்குவதானால் பல சிரமங்கள் இருக்கின்றனவாம். அதனால் குறுக்கு வழியில் சீக்கிரமாக முடித்துக் கொள்வதற்காகத் தரணியிடம் நேரடியாக வந்திருக்கிறானாம். பழைய 'ரிகார்டு'களைப் பார்த்து நகல் செய்து கொடுக்க வேண்டுமாம்!

தரணிக்கு என்னவோ போலாகிவிட்டது. இதுபோன்ற விவகாரங்களை நினைத்துக் கூடப் பார்த்ததில்லை அவன். பிடிக்கவும் பிடிக்காது.

பணத்தைத் தூக்கி எறிந்துவிட வேண்டும் என்று நினைத்தான். ஆனால் அத்தியப்பன் விடவில்லை.

அதோடு தன்னைச் சாமர்த்தியம் இல்லாதவன் என்று காமாட்சி அடிக்கடி குத்திக் காட்டுவதும் நினைவுக்கு வந்தது.

இறுதியில் அத்தியப்பன் வெற்றி பெற்றான்.

எட்டு மணிக்குத் தரணிபதி வீட்டுக்குத் திரும்பியபோது வாசலிலேயே காத்திருந்தாள் காமாட்சி.

''இந்த மாத சர்க்கரை வாங்குவதற்கு நாளைதானே கடைசி நாள்?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே சென்றான் அவன்.

''ஆமாம்! ஆனால் நாளைக்குக் கிடைக்காதாம். ஸ்டாக் தீர்ந்து விட்டதாம்- இன்றோடு.''

''அடக் கடவுளே! அப்படியானால் இந்த மாதச் சர்க்கரை போனது போனதுதானா? முதல்தேதிவரை கருப்பட்டிக் காப்பிதானா?''



"BLOOD BANK" ராமமூர்த்தி...

திருச்சியில் தம்முடைய 60 வருஷ வாழ்க்கையில் இதுவரை "56" முறை ரத்ததானம் அளித்துள்ளார் ராமமூர்த்தி. பலவித சமூகசேவை சங்கங்களில் முக்கிய பங்கு வகிக்கும் திரு ராமமூர்த்தி 1965ல் திண்டிவனத்திற்கு அருகில் ஒரு விபத்து நடந்தபோதும், 1972ல் பண்ருட்டி அருகில் ஒரு விபத்து நடந்த போதும், எதிர் திசையில் வந்து கொண்டிருந்த இவர், தம்முடைய சென்னை பயணங்களை ரத்து செய்துவிட்டு ரத்த தானம் அளித்துள்ளது மேலும் சிறப்பு. இவர் தற்சமயம் திருச்சி டிராவல் சர்வீஸ் என்ற அமைப்பை ஏற்படுத்தி, வெற்றிகரமாக நிர்வகித்து வருகிறார். - ராஜேஸ்வரி



சாதாரணமாகக் குழந்தை ஒன்றைத் தத்து எடுக்க விரும்பும் தம்பதியின் விளம்பரத்தைத் தான் கண்டிருக்கிறோம். ஆனால் அண்மையில் டைம்ஸ் ஆப் இந்தியா இதழில் கீழ்க் கண்ட விளம்பரம் இருந்தது.

22 வயதான பட்டதாரி வாலிபன் வயதான தம்பதியைப் பெற்றோராகத் தத்து எடுக்க விரும்புகிறான். டெல்லியிலேயே வசிக்கும் தம்பதியாக இருந்தால் நலம். பெட்டி எண். 48945க்கு விண்ணப்பிக்கவும்.

தகவல்: - சரோஜா நரசிம்மன்

அவள் சிரித்துவிட்டுச் சொன்னாள், மூன்றாவது வீட்டுக்காரியிடம் பணம் கடன் வாங்கி அந்த மாதச் சர்க்கரை வாங்கி விட்டதை.

அகமகிழ்ந்தான் தரணி.

சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி சொன்னான்.

வியப்படைந்தாள் காமாட்சி.

"ஏது பணம்? இன்றைக்கே சம்பளம் வந்து விட்டதா என்ன?"

இலேசாக ஆர்ப்பாட்டம் தொனிக்கும் குரலில் சொன்னான் தரணி.

"சம்பளம் என்ன சம்பளம்? இனிமேல் அதற்காகக் காத்துக் கொண்டிருக்கப் போவதில்லை நான். மற்றவர்களிடமிருக்கும் ஏதோ ஒரு சாமர்த்தியம் எனக்கு இல்லை என்று அடிக்கடி குத்திக் காட்டிக் கொண்டிருப்பாயே, நீ. அது எனக்கும் இருக்கிறது என்பதை இனிமேல் காட்டப் போகிறேன். அதன் முதல் படிதான் இந்த நாற்பது ரூபாய்.... இப்போது உனக்குத் திருப்திதானே?"

காமாட்சியின் வாயெல்லாம் பல்லாகச் சிரித்தது.

இப்படிச் சமர்த்தாக இருந்தால்தான் உலகத்தில் கௌரவமாக வாழலாம் என்று தட்டிக் கொடுத்துப் பணத்தை எடுத்து வைத்துக் கொண்டாள்.

அந்தப் பணத்தில் வாங்கியதுதான் சர்க்கரை. கை ஒடிய நகல் எடுத்துச் சம்பாதித்தது. கண நேரத்தில் கரைந்து போய் விட்டதே!

நான்கு மணிக்குத் தமது செலவில் சிற்றுண்டி வாங்கித் தருவதாகக் கூறிப் பரசுராமன் தரணியை வெளியே இழுத்தான்.

அரை மனத்துடன் எழுந்தான் தரணிபதி. ஆனால் ஓர் அடி எடுத்து வைப்பதற்குள் தலை சுற்றி மயக்கம் வந்தது. அப்படியே உட்கார்ந்து விட்டான்.

உடல் என்னவோ போல் இருக்கவே அலுவலரிடம் சொல்லிவிட்டு டாக்டரிடம் சென்றான்.

நெடு நேரம் கழித்து வீட்டுக்கு வந்த கணவனைக் கவலையுடன் விசாரித்தாள் காமாட்சி.

"என்ன இன்றைக்கு இவ்வளவு தாமதம்?"

வழக்கமான சுறுசுறுப்பு இல்லாமல், சோர்வுடன் நாற்காலியில் சாய்ந்தான் தரணி.

"டாக்டர் வீட்டில் நேரமாகி விட்டது."

"டாக்டர் வீடா? அங்கு எதற்குப் போனீர்கள்?"

"அலுவலகத்தில் இன்று மயக்கம் வந்து விழுந்துவிட்டேன் காமாட்சி...."

"மயக்கமா! ஐயோ! என்ன உடம்புக்கு? டாக்டர் என்ன சொன்னார்?"

"ஏன் இப்படி அலட்டிக் கொள்கிறாய் காமாட்சி? பயப்படும்படியான பெரிய நோய் ஒன்றும் இல்லையாம். உடம்பில் சர்க்கரை அதிகமாக இருக்கிறதாம். டயாபடீஸ் ஆரம்ப நிலை.... அவ்வளவுதான்!..."

"கடவுளே! என்ன அநியாயம்? இந்த வயதில் இந்தத் தண்டனையா?"

"யோசித்துப் பார்த்தால் இது அநியாயம் என்று எனக்குத் தோன்றவில்லை. குற்றத்துக்குச் சரியான தண்டனை கிடைத்திருப்பது போலத்தான் தோன்றுகிறது." இனி சர்க்கரையே சேரக் கூடாதல்லவா?

காமாட்சி யோசித்தாள். கண்ணீர் உகுத்தாள். கணவன் செய்தது குற்றமானால் அதைச் செய்யத் தூண்டியது யார்?

அதற்கு என்ன தண்டனை?



கடுகு பதில்கள்!

✖ பத்மரங்கன், கைலாசபுரம்

கே. எட்டே கால் லட்சணமும், எமனேறும் வாகனமே என்பதில் எட்டேகால் லட்சணம் என்பதன் பொருள் என்ன?

ப: தமிழ் எண் முறையில் எட்டு என்பதை 'அ' என்றும், 'கால்' என்பதை 'வ' என்றும் எழுதுவார்கள். 'எட்டேகால்' என்பதை லட்சணத்துடன் சேர்த்துப் படித்தால் அவலட்சணமாகிறது.

✖ சி: சௌந்தர பாண்டியன், கிருஷ்ணகிரி

கே. பணத்துக்கும் கடவுளுக்கும் இடையில் உள்ள தூரம் எவ்வளவு?

ப: அதிகம் இருக்காது. பலர் பர்ஸில் பணத்துடன் கடவுள் படத்தை வைக்கிறார்கள். வேறு சிலர் கடவுள் பூஜை மேடையின் கீழ் பணத்தைப் புதைத்து வைப்பதைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். பலருக்கு காசேதான் கடவுள். ஆக கடவுளுக்கும் பணத்துக்கும் நடுவே இடைவெளி கிடையாது.

✖ துரை பால்ராஜ், கோவை-12

கே. எனது எழுத்துலக 'குரு'வாக உங்களை ஏற்றுக் கொள்ளலாமா?

ப: 'குரு' திரைப்படத்தைப் பார்த்த பிறகு 'குரு' என்ற வார்த்தையைக் கேட்டாலே எரிச்சல் வருகிறது. 'கமல்' என்ற கலைஞர் 'குரு' போன்ற காமா சோமா படங்களை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாது. (அடேடே உங்கள் கேள்வியை மறந்து விட்டேனே! வேண்டாம், ப்ளீஸ். எனக்குத் தகுதி போதாது.)

✖ நடேஷ் கண்ணு, களக்காடு

கே. கத்தி, பேனா, நாக்கு — இவற்றில் கூர்மையான ஆயுதம் எது?

ப: மூன்றும் கூர்மையானவை. ஆனால் இவற்றில் மழுங்காதது நாக்கு மட்டும் தான்.

✖ ஏ. கே. நாசர், வெட்கமாங்குடி

கே. ஆசிரியர் சாவியின் வெற்றிக்குக் காரணம் என்ன?

ப: எதிர் நீச்சல் போட வேண்டிய சமயத்தில் போடுவார்; வெள்ளத்தில் நீந்திச் செல்ல வேண்டிய சமயத்தில் நீந்திச் செல்வார். ஆகவேதான் என்றும் இளையதலைமுறை ஆசாமியாக இருக்கிறார்.

✖ என். கல்யாண் குமார், ஈரோடு

கே. தற்போது தமிழ்நாட்டில் நகைச்சுவையாளர் இல்லையென்று நா.பா. கூறியுள்ளாரே, உம்மை ஏன் மறந்து விட்டார்?

ப: என்னை விடுங்கள். நான் கடுகு. சோ, பாக்கியம் ராமசாமி, சாவி, இ. ராஜேந்திரன் போன்ற பூசணிக் காய்களே அவர் கண்ணில் படவில்லையே!

✖ ஆர். சங்கர நாராயணன், பொன்மலைப்பட்டி

கே. மாந்திரீகம், பில்லிசூனியம் - இவைகளில் நம்பிக்கை உண்டா?

ப: கிடையாது. ஆனால் சிற்சில சம்பவங்களைக் கண்கூடாகப் பார்க்கும்போது, மூலையில் ஒரு துளி நம்பிக்கை ஏற்படுகிறது. இவைகளில் கூறப்படும் அளவு விஷயங்கள் இல்லை; அதே சமயம் ஒரேயடியாக இல்லாமலும் இல்லை.

✖ மதுரை கண்ணன், அம்பாலா

கே. சென்னை டிவி நிகழ்ச்சியில் தங்களைக் கவர்ந்த அம்சம்?

ப: வாசகர் கடிதங்களைப் படித்துப் பதில் சொல்லும் திரு நாராயணசாமி மிகவும் இயல்பாகவும் நன்றாகவும் அமைக்கும் 'எதிரொலி' நிகழ்ச்சிதான்.

✖ எஸ். நிரேஞ்சனா, பாண்டிச்சேரி

கே. சமீபத்தில் தாங்கள் ரசித்த மேடைப் பேச்சு?

ப: ஒரு இசைக் கச்சேரியைத்தான் கூறிப்பிடவேண்டும். 'அபஸ்வரம்' ராம்ஜியின் ஆர்க்கெஸ்ட்ரா நிகழ்ச்சியில் இடையிடையே ராம்ஜி சுவையாக அடித்த ஜோக்குகளையும், பேச்சுக்களையும் ரசித்தேன். (பாட்டுக்களை இதனால் ஓரளவு ரசிக்க முடிந்தது. ராம்ஜியின் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.)

✖ மதுகண்ணன், காட்பாடி

கே. ஆனந்த விகடனில் நெடுங்கதைக்கு ஒரு பரிசும் தரவில்லையே?

ப: ''என்ன ஸார். சினிமாக் கதை? நான் பிரமாதமாகச் சில ஐடியா வெச்சிருக்கிறேன்'' என்று எத்தனையோ பேர் ஜம்பமாகப் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். அந்தப் புலிகள் ஒன்றுகூட ஒரு ஆறுதல் பரிசு பெறும் அளவுக்குக் கூட எழுதவில்லை. இனிமேலாவது எழுதத் துடிக்கும் இளம் எழுத்தாளர்கள் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளட்டும்.

பரிசு பெறுபவர்:

சி. சௌந்தர பாண்டியன்,
18-பி. மோகன் ராவ் காலனி
கிருஷ்ணகிரி





படம்: என். விஜயகுமார் பி. ஏ. முதலாண்டு

College Campus

ராணி வேதாசலம் அரசினர் கலைக்கல்லூரி, செங்கல்பட்டு



அடக்கம்....!

நண்பன்: ஏண்டா பாலு உன் மனைவி உன் சொல்லுக்கு அடங்கி நடப்பாளா?

பாலு: ஓ....சோப்பு கொடுத்தாத்தானே உன் புடவையைத் துவைக்க முடியும் என்றேன்.... ஓட்டமாய் ஓடிப்போய்ச் சில நொடியில் சோப்பு கொண்டுவந்து தந்துட்டா!

- என். மோகன சுந்தரம்
பி.எஸ்ஸி. முதலாண்டு

புதுக் 'குறள்'

- தீயிறத் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
லெக்சரர் வாயினால் சுட்ட புண்.
- தந்தை மகற் காற்றும் உதவி
தவறாது மணியார்டர் அனுப்புதலே.
- 'பிட்' இருக்க பார்க்கா எழுதுதல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.

- த. ந. திரிபுர சுந்தரி. பி.காம் முதலாண்டு

தொகுப்பு: நாயகன்



வெம்புனல்

தி.சா.ராஜு

தமது பழைய காரின் டிக்கியினுள் புத்தகக்கட்டை ஏற்றச் செய்து மூடிவிட்டு அதை இயக்கினார். அது முனகிக் கொண்டே நகர்ந்தது. மெள்ள மூன்றாவது கியரிலேயே ஓட்டிக் கொண்டு வந்தார். நெல்சன் பாலத்தின் மேட்டைக் கடக்க இயலாமல் அது நின்றுவிட்டது. சுந்தரம் பானெட்டைத் தூக்கி எஞ்சினைப் பார்வையிட்டார். கார்புரேட்டரை இயக்கும் இணைப்புக் கொக்கி தேய்ந்து இற்றுப்போகும் நிலையில் இருந்தது. அதைக் கழற்றிப் பரிசோதித்துக் கொண்டிருக்கும்போது எதிர்ப்புறத்தில் சத்தமே செய்யாமல் ஒரு கார் வந்து நின்றது.

அதை ஓட்டியவர் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார். சுந்தரத்தின் அருகில் வந்து முதுகைத் தட்டி, 'என்னைத் தெரிகிறதா?' என்று வினவினார். அவர் அணிந்திருந்த ஜிப்பாவில் தெளித்திருந்த இண்டிமேட்டின் மணத்தையும். மீறிப் புகையிலையின் நெடி வீசிற்று.

சுந்தரம் நெற்றியைத் தேய்த்துக் கொண்டார். உடனடியாக நினைவுக்கு வரவில்லை. அவர் ஏறிவந்த அழகான படகுக் காரை நோக்கினார். அதன் பின்னிருக்கையில் அமர்ந்திருந்த மங்கையின் முகத்தைக் கண்டதும் ஒரு கணம் விக்கித்துப் போய் நின்றார். ''நீங்கள்;... நீங்கள்... வேணுகோபாலன் இல்லையா?''

''கன் என்ன கன்? எல்லாம் வேணுதான். எத்தனை வருஷம் ஆகிவிட்டது தெரியுமா? காரிலே என்ன கோளாறு? நடேசா'.' என்று தன் டிரைவரை விளித்தார். ''நீ இதைச் சரி பார்த்து பங்களாவுக்குக் கொண்டு வா'... சுந்தரம், கையைத் துடைத்துக் கொண்டு வண்டியில் ஏறு!'' அவரை அன்புடன் அழைத்தார்.

''இது என் மகள் சுமதி'' அவர் அறிமுகப் படுத்தினார். அவள் கையை உயர்த்தி வணங்கினாள். ''இவர் யார் தெரியுமா சுமதி? உன் அபிமான எழுத்தாளர், சுந்தரமூர்த்தி.''

''மிகவும் சந்தோஷம் சார்!'' அவள் உணர்ச்சிப் பெருக்குடன் பேசினாள். ''இப்போதெல்லாம் அதிகம் எழுதுவதில்லை அல்லவா?''

''அவர் எழுதுவதை யாரும் வெளியிடுவதில்லை என்று சொல்லு. ஒவ்வொருத்தருக்கு ஒரு சீஸன். தியாகராஜ பாகவதர் சிறையிலிருந்து வெளி வந்த பிறகு நடித்த படம் எதுவும் நகரக்கூட இல்லை. எழுத்துலகில் எத்தனையோ. தில்லுமுல்லுகள். அவற்றில் எதுவும் என் நண்பனுக்குத் தெரியாது.''

நெடுஞ் சாலையின் இருபுறமும் நிறுத்தப் பட்டிருந்த விளம்பரப் போஸ்டர்களைக் கூச்சத்துடனேயே கவனித்தார் சுந்தரம். சிறைச்சாலை — சிறைச்சாலை — அவர் மனத்தில் பழைய நினைவுகள் அலைபாய்ந்தன.

ஏறக் குறையக் கால் நூற்றாண்டுக்கு முன்பு வேணுகோபாலன் சிறைச்சாலையிலிருந்து திரும்பி வந்திருந்தார். பல வாரங்களாகச் சவரம் செய்யப்படாத முகம் பரட்டை முடி. அழுக்கான ஆடை. கண்களில் பசி வேதனை. வீடு தேடி வந்தவனுக்குக் குளிக்க வசதி செய்து, தனக்கு வந்திருந்த எடுப்புச் சாப்பாட்டை அவர் ஆவலுடன் உண்பதை நிறைவுடன் பார்த்த காட்சி இப்போதுகூட! நினைவில் வந்தது. அப்போது தபால்காரரும் வந்தான். வெகு நாட்களுக்குப் பிறகு வெளியீட்டகத்திலிருந்து வந்த தொகையையும் வேணு கைமாற்றாகக் கேட்டார். தாட்சண்யம் தட்ட முடியவில்லை. சுந்தரம் தமது நண்பனைக் கடைசியாகச் சந்தித்தது அப்போதுதான்.

தொடக்கத்திலிருந்து இறுதி வகுப்புவரை இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். சுந்தரத்தின் பாதை ஒரு நேர் கோடு. தவறான வழியில் நுழையவும் மாட்டார். வேணுவின் தன்மையே வேறு. எந்த வகையிலாவது வாழ வேண்டும். செய் முறையில் சிக்கிக் கொண்டால் பழியைப் பிறர் மேல் போட வேண்டும். நாலு பேருக்கு முன்னால் நல்ல மனிதனாக நடித்துவிட்டு யாரும் காணாத வேளையில் நண்பனிடம் சரணடைய வேண்டும். அவனது நல்லியல்புகளைப் பயன்படுத்திக்கொண்டு மீண்டும் அவனையே கோட்டை விட்டு வெளியே தள்ளிப் பழிப்புக்குள்ளாக்க வேண்டும். அது கிளித்தட்டோ, மாங்காய் திருடுவதோ, காப்பி அடிப்பதோ, பெண்களைச் சீண்டுவதோ எதுவானாலும் சரி, வேணுவின் கொள்கை என்றென்றும் சுந்தரத்துக்கு வினையாக முடிந்தது.

பெண்களும் ஆண்களும் ஒன்றாகப் பயின்ற பள்ளி அது. புவனேசுவரி என்ற அழகான பெண்ணொருத்தி அவர்களுடைய ஜூனியர் வகுப்பில் பயின்றாள். கவிஞனின் வர்ணனைக்கொப்ப அவளுடைய பேரெழில் அமைந்திருந்தது. இனிய குரலும் கூட. சுந்தரத்துக்கு அவளுடைய உருவத்தில் அளவற்ற ஈடுபாடு ஏற்பட்டது. உலகம் புரியாத பிராயம். அவர்களுடைய உறவு ஒரு தலையாக அமையவில்லை. புவனேசுவரியும் சுந்தரத்தின் நேர்மையான போக்கை விரும்பினாள்.

இசையில் அவளுக்கு நல்ல தேர்ச்சி இருந்தது. காலை வழிபாட்டு நேரத்தில் அவள் அற்புதமாகப் பாடுவாள். ஆண்கள் பகுதியிலிருந்து சுந்தரத்தின் குரல் எழும்பும். பள்ளி இறுதி வகுப்பில் அவர் படிக்கும்போது அவர் களை இணைத்துப் பரவலான செய்திகள் உலவின.

ஒரு நாள். பிற்பகல் தலைமை ஆசிரியர் அவரைத் தமது அறைக்கு அழைத்தார். அங்கு தனக்கு முன்னரேயே புவனேசுவரியும் அவளுடைய தந்தையும் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்துத் துணுக்குற்றார் சுந்தரம்.

ஒரு கடிதத்தை அவரிடம் காட்டி, "இது உன்னுடைய கையெழுத்துத்தானா?" என்று வினவினார் தலைமை ஆசிரியர். சுந்தரம் வாங்கிப் பார்த்தார். அடியில் உள்ள பெயர் உள்பட எல்லாம் அவருடையதைப் போலவே இருந்தது. ஆனால் அதை அவர் எழுதவில்லை.

கடிதத்தில் உள்ளதோ புவனாவின் எழில் குறித்த அழகு வர்ணனை. கவிஞனே தோற்றுவிடுவான். "கையெழுத்து என்னுடையது மாதிரி — மாதிரி"—அவர் திணறினார்.

"வெளியில் போய் நில்லு."

தலைமை ஆசிரியரிடம் புவனா வாதாடினாள். "இதை அவர் எழுதியிருக்க முடியாது. அவர் எழுதிக் கொடுத்த துதிப் பாடல்கள் என்னிடம் இருக்கின்றன." அவள் தனது நோட்டைப் பிரித்துக் காட்டினாள்.

இரண்டும் ஒரே கையெழுத்துத்தான். புவனாவின் தந்தை சீறினார். "ஐயா, உங்கள்பள்ளி ஒழுக்கத்துக்குப் பெயர் பெற்றது..." அவர் தலைமை ஆசிரியரிடம் துயரத்துடன் பேசினார்.

சுந்தரத்தை மீண்டும் உள்ளே அழைத்தார் தலைமை ஆசான். "நாளை இந்தக் கடிதம் கையெழுத்துநிபுணரிடம் போகும். அதற்குப் பிறகு உனது இடம் குற்ற இயல் பள்ளியில் தான்."

"சம்மதம் ஐயா" சுந்தரம் கனத்த மனத்துடன் வெளியேறினார்.

மறு நாளிலிருந்து வேணு கோபாலன் பள்ளிக்கே வரவில்லை. சுந்தரம் தப்பியது உண்மைதான். ஆனால் குற்றம் சாட்டப் பட்ட கரிக்கோடு மறையவே இல்லை.

ஆண்டுகள் உருண்டு போயின. சுந்தரம் அச்சகம் ஒன்றில் வேலைக்கு அமர்ந்தார். கூடவே எழுத்துப் பணியிலும் ஈடுபட்டார். தந்தையை இழந்த புவனேசுவரி உள்ளூர்ப் பள்ளி ஒன்றில் ஆசிரியப் பணியில் அமர்ந்தாள். அவளுடைய பேரெழில் இளைஞர் வட்டத்தையே கிறங்கடித்தது. எவரையும் அணுக விடாமல் அவளுடைய மாமன் வேலி அமைத்து நின்றார்.

புவனாவுக்கும் சுந்தரத்துக்கும் இடையே அரும்பியிருந்த நல்லெண்ணம் மீண்டும் வளர்ந்தது. அதைக் கருக வைக்கும் பணியில் முனைந்தார் அவளுடைய மாமன். புவனாவுக்கு அவர் வைத்திருந்த விலை மிக அதிகம்.

அதைக் கொடுப்பதற்கென்றே இத்தனை காலத்துக்குப் பிறகு வேணு கோபாலன் மீண்டும் முளைத்தார். வேணுவின் உடை, ஆடம்பரம், பணியாட்கள், அவர் பணத்தை அள்ளிவிட்ட லாகவம் அனைத்தும் ஊராரைக் கவர்ந்தன. பணத்தைக் கொடுத்துப் புவனாவைக் கவ்விக்கொண்டு பறந்தேகினார் வேணு.

நொந்த இதயத்தை உருக்கி சுய எழுத்துக்களில் வார்த்தார் சுந்தரம். அது பல வாசகர்களை ஈர்த்தது. அவருக்கென தனி வட்டம் ஏற்பட்டது. சமுதாய கௌரவம் உயர்ந்தது. ஆனால் அந்த அளவுக்குப் பொருளாதாரம் சீர்படவில்லை. நாளாக ஆக, எழுத்தினால்



மட்டும் ஒருவன் வாழ்ந்துவிட முடியும் என்ற உறுதி அவரிடமிருந்து கழன்றது. மாற்றம் விரும்பிய வாசகர்களின் வேகத்துக்கு அவரால் ஈடுகொடுக்க முடியவில்லை. வாசகர் வட்டம் புதிய வண்ணங்களை நாடி நகர்ந்தது. அவர் தம் தனி வழியே ஏகினார்.

அவர்கள் ஏறி வந்த கார் அந்தப் பெரிய வீட்டின் வெளி வாசலைக் கடந்தபோது, அங்கே நின்ற காவலன் சலாம் வைத்தான். வண்டி போர்ட்டிகோவை அடைந்ததும் அதன் கதவைத் திறக்க ஒரு பணியாள்.

சூடான பானம் தருவித்து அவருக்கு அளித்துவிட்டுத் தம் அறைக்கு விரைந்தார் வேணு. அந்த வரவேற்பறையைப் பார்வையிட்டார் சுந்தரம். பற்பல வகை ஓவியங்கள். இமயத்தின் வெண் சிகரம், நீர் பெருகும் குற்றாலம், கழுகுத் தலம் ஆகியவை. உயர்ந்த மேஜையின் மேல் வீணையின் உருவத்தின் அருகில் பெரிய புகைப்படம். அதற்குச் செயற்கை மலர் வளையம் சாத்தியிருந்தது. வெள்ளி எழுத்துக்களில் தோற்ற — மறைவு தேதிகள். சுந்தரம் நெட்டுயிர்த்தார். புவனா மறைந்து இருபது ஆண்டுகள் போயிற்று? விழிகளின் வழி பொங்கிய தமது உணர்ச்சிப் பெருக்கைக் கைக்குட்டையால் ஒற்றி எடுத்தார்.

சேலையின் சலசலப்பு. பின்னால் சுமதி நின்று கொண்டிருந்தாள். ''படங்களெல்லாம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா அங்கிள்?'' அவள் வினவினாள். அவளுடைய விழிக் கோணத்தில் புவனாவின் நிழல். அவர் ஒரு கணம் தவித்தார்.

''படித்துக் கொண்டிருக்கிறாயா?''

அவள் தலையை அசைத்தாள். ''கல்லூரி எல்லையைக் கடந்து விட்டேன். டாக்டரேட்டுக்கு முயற்சி செய்கிறேன். அப்பாவுக்கு விருப்பமில்லை. அவருக்குப் படிப்பிலே நம்பிக்கை இல்லை.''

''உன் அப்பாவுக்கு எதிலேதான் ஈடுபாடு?''

G-Hக்கு பக்கத்தில் I வருவதுபோல்
அதனருகில் பஸ்ஸுக்கு நான் தனியே நின்றிருந்தேன்
வந்து நின்ற பஸ் அங்கேயே பிரேக்டவுன்!
J, J என்று நிறைய கும்பல்
K.L.M.N..... என சேர்ந்தவர்கள் எல்லோரும்
O Pயிலிருந்து வந்தவர்கள்
Q நிற்கும்படியாயிற்று...! -பி. பூபால் சிங்



கட்டை விரலைச் சுண்டிக் காட்டினாள் சுமதி. எப்பாடு பட்டாவது அதைச் சேர்க்க வேண்டும். சுக வாழ்வு வாழ வேண்டும், யயாதியைப் போல.''

''புருவரசின் இளமையைப் பெற்று மனைவியை அணுகிய யயாதியைக் குறித்து ஒரு நீள் கவிதை எழுதியிருந்தேன்.''

''தெரியும். அதைப் பாராட்டிய இலக்கிய நிகழ்ச்சிக்கு நானும் வந்திருந்தேன். நீங்கள் என் தந்தையின் ஆதி நாளைய நண்பர் என்று எனக்கு அப்போது தெரியாது.''

''தமிழிலே வரும் புதிய எழுத்துக்களை எல்லாம் படிக்கிறாயா?''

''ஓ! எல்லாமே வியாபார நோக்கம் கொண்டவையாகத்தான் இருக்கின்றன. வெறிக்கோட்டுக்கு அருகில் அழைத்துச் செல்லும் கிறுகிறுப்புச் சொற்கள். ஆனால் நமது பண்டைய இலக்கியங்களில் இல்லாத எந்தத் தகவலையும் இவர்கள் சொல்லிவிடவில்லையே!...''

சுந்தரம் நாற்காலியில் அமர்ந்து அவளுடைய முகத்தையே கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஏகபத்தினி விரதத்துக்கு ஒரு இரகுவீரன், பலதாரத்துக்கு யாக்ஞவல்கியர், பிரம்மச்சரியத்துக்கு பீஷ்மர், பல கணவர்களையுடைய பாஞ்சாலி, அவள் மாமியார், சோரம் போன அகலிகை, உத்தாலகரின் மனைவி, எவ்வளவு உதாரணங்கள் வேண்டும்? நமது கிளுகிளு எழுத்தாளர்கள் எவருக்குமே இவர்களைப் பற்றித் தெரியாது. அரை வேக்காட்டுக் கோமாளிகள்...'' அவள் வெறுப்புடன் பேசினாள்.

தொலைபேசியின் மணி ஒலித்தது. அப்போது அங்கு வந்த வேணுகோபாலன் அதை எடுத்துப் பேசினார். ''யாரது, நடேசனா? கார் தயாராகி விட்டதா? சரி, அதை எடுத்துக் கொண்டு ஐயா வீட்டுக்கே போய்விடு. நாங்கள் சாப்பாட்டுக்குப் பிறகு அங்கே வருகிறோம். விலாசமா? இரு. முப்பத்தெட்டு, வீரய்யன் தெரு, அசோக்நகர்.'' அவர் ஒலிவாங்கியை அதனிடத்தில் வைத்தார்.

சுவையான உணவருந்திய பிறகு நண்பர்கள் இருவரும் புறப்பட்டார்கள். சுமதியின் முதுகை மெல்லத் தட்டியவாறு கூறினார், சுந்தரம். ''அறிவைச் சேர்க்காதே மகளே! செல்வமும் அறிவும் ஒரே இடத்தில் நிலைக்காது.''

வழுக்கிக்கொண்டே கார் நகர்ந்தபோது வேணு பேசிக் கொண்டே வந்தார். ஒவ்வொரு சொல்லிலும் பணத்தின் நெடி வீசிற்று.

நண்பரை வீட்டுக்குள் அழைத்தார் சுந்தரம். அங்கு அலமாரிகளிலும் பெட்டிகளிலும் புத்தகங்களே நிறைந்து கிடந்தன. எழுதுகோலில் ஏழு வகை, மசிப் புட்டி, இறுக்கிய தாள்கள்...

பளபளக்கும் அட்டையுடன் கூடிய ஒரு புத்தகத்தை எடுத்துக் கையெழுத்திட்டுக்கொடுத்தார் சுந்தரம். ''இதைச் சுமதிக்குக் கொடு வேணு. அவளுக்கு இது பிடித்தமாக இருக்கும்.''

தலைப்பு என்ன? - 'வீழ்க தண்புனல்'

களை அடித்திருக்க முடியும் என்பதற்குச் சின்னஞ் சிறு அத்தாட்சிகளாக விளங்கின. கனோஜியின் சொற்களைக் கேட்ட அவர் பேஷ்வா இருப்பதையும் மறந்து சிறிது பலமாகவே நகைத்தார். "நானாவது என் தம்பியை அர்ப்பணிப்பதாவது! சண்டை இருக்கும் இடத்தை நாடித் திரியும் அவனுக்கு கனோஜி அனுப்பிய உத்தரவு கற்கண்டாயிருந்தது. உத்தரவு கிடைத்ததும் கார்வாருக்குப் புறப்பட்டு விட்டான். இதில் என் உத்தரவோ, அர்ப்பணிப்போ ஏதுமில்லை" என்றார் நகைப்பின் ஊடே.

ருத்ராஜி அனந்தின் சொற்களை ஆமோதிப்பதற்கு அறிகுறியாக பேஷ்வா தலையை ஒருமுறை அசைத்தார். "ஆம். யாரும் இந்திரஜித் அனந்த்தைத் தூண்ட வேண்டியதில்லை. அவன் ஒரு நாடோடி. இந்த ஸஹ்யாத்ரியின் மகாராஷ்டிரப் பிராந்தியத்தில் அவன் போகாத இடம் இல்லை" என்று கூறிய பேஷ்வா சற்று நிதானித்து "நுழையாத குடிசையும் இல்லை" என்று வார்த்தையை முடித்தார்.

பேஷ்வாவின் கிருத்திரமமான சொற்களில் கடைசிப் பகுதியைக் கேட்டதும் சாருவின் முகத்தில் சீற்றம் தெரிந்தது. பேஷ்வாவை நோக்கி, "ஓகோ! எனக்கு அமைத்தது போல் இன்னும் பல குடிசைகளை அமைத்திருக்கிறீர்களா?" என்று வினவினாள் கடு சொற்களில்.

கடல் ராணியும் பேஷ்வாவை உக்கிரத்துடன் நோக்கினாள். "பேஷ்வா குடிசை கட்டுகிறவர்; இவர்... குச்சு நுழையும் வீரர்! சேர்க்கை மிக நன்றாக இருக்கிறது." என்று கூறி பேஷ்வாவையும் பார்த்து அனந்தையும் நோக்கினாள் அக்னி வீசிய கண்களால்.

இந்தச் சமயத்தில் கனோஜி தமது சுபாவத்தைக் காட்டாதிருந்திருக்கலாம். ஆனால் வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாததால் "குச்சுக்குள் என்ன, கோட்டைக்குள்ளும் நுழைவான் அனந்த்." என்று கூறி ராணியை நோக்கி நகைத்தார்.

"அதனால்தான் கார்வாருக்குப் புறப்படு என்று சொன்னதும் சிந்து துர்க்கத்துக்குப் போய்விடுகிறேன் என்றான்" என்று விளக்கினார் ருத்ராஜி அனந்த் விஷமக் குரலில்.

"அப்படியா!" என்று கறுவினாள் ராணி. இதழ்களைச் சினத்துடன் உட்புறம் மடித்துப் பற்களால் கடித்துக் கொண்டாள்.

"குழந்தை என்ன செய்வான்? கடல் ராணியின் அழகும் கொள்ளைக்காரி என்ற பிரசித்தியும் அத்தனை அதிகமாயிருந்தது" என்று காரணம் சொன்னார் ருத்ராஜி.

சற்றே மௌனமாயிருந்த சாருவின் கண்கள் தீப்பொறிகளைக் கக்கின. "பேஷ்வா! மேலைக் கடலோரமாக வேவு பார்க்க எத்தனை குடிசைகளை அமைத்தீர்கள்? எத்தனை அழகிகளை ஆங்காங்கு நிறுத்தினீர்கள் இந்தக் கடல் வீரருக்கு வலை வீச?" என்று கேட்டாள் சாரு.



பேஷ்வாவின் முகத்தில் எந்தவிதமான உணர்ச்சியும் தெரியவில்லை. ''வேறு குடிசை அமைக்கவில்லை. இவன் கார்வாருக்குப் புறப்பட்ட இரவு நடந்ததைக் கவனித்தேன். வேறு குடிசையால் பயனில்லை என்று நீர் மானித்தேன். நான் உன் மாமன்தான். இருப்பினும் அத்தனை வெளிப்படையாக மலைக் குடிசையில்...'' என்று பேஷ்வா சிறிது தயங்கினார் வாசகத்தை முடிக்க.

''வெளிப்படையாக என்ன நடந்தது?'' கடல் ராணி சீறினாள்.

''எதுவும் நடக்கவில்லை. காதலர்களின் அசட்டுத்தனம். அதற்கும் அனந்தைக் கோபித்துப் பயனில்லை. இவள்தான் அவனை இறுக்க... உம்... உம்.... உத்தரவு கொடுத்தான் கார்வார் செல்ல'' என்ற பாஜிராவ் ''மருமகளே! இதில் ஏதும் தவறில்லை. பெருத்த அபாயத்தை நாடிச் செல்லும் போதோ, திரும்பி வெற்றியுடன் வரும் போதோ உரிமையுள்ளவன் வீரனை அணைப்பது க்ஷத்திரிய மரபு'' என்று சரிக்கட்ட முயன்றார். ''இதற்கு ராமாயணத்தில் அத்தாட்சி இருக்கிறது. கரதூஷணர்களின் பெரும் படையை வெற்றி கொண்ட ராமன் காயங்களுடன் பர்ணசாலைக்குள் நுழைந்த போது சீதை அவனை மார்புறத் தழுவிக் கொண்டாள்'' என்று புராண அத்தாட்சியும் காட்டினார்.

அதுவரை சும்மாயிருந்த வாபூஷே பெரிதாக நகைத்தான். ''யூ மீன் சீதா ஹக்ட் த ஹீரோ ஆஃப்டர் விக்டரி! அவர் விமன் டோண்ட் வெயிட் தட் லாங்.தே ஹக் அஸ் எனி டைம் (சீதை வெற்றிக்குப் பிறகுதான் வீரனை அணைத்துக் கொண்டாளா? எங்கள் நாட்டுப் பெண்கள் அவ்வளவு நேரம் காத்திருக்க மாட்டார்கள். சண்டைக்கு முன்னும் பின்னும் எந்தச் சமயத்திலும் அணைப்பார்கள்)'' என்று கூறித் தனது சராயிலிருந்து ஒரு மதுக் குப்பியை எடுத்துச் சிறிது மதுவை உறிஞ்சினான்.

அதைக் கண்ட கனோஜி தமது உதடுகளை நாக்கால் தடவிக் கொண்டார். பிறகு வாபூஷேயை நோக்கிக் கையை நீட்டினார். ''கூடாது கனோஜி. நீர் மதுவை அருந்தக் கூடாது. மருத்துவர் கூறியிருக்கிறார்'' என்று பாஜிராவ் தடுத்தார்.

''மருத்துவருக்குக் கடல் வாழ்க்கையைப் பற்றி என்ன தெரியும்? அகப்பட்டபோது மதுவையும் மங்கையரையும் அனுபவிக்க வேண்டும். இதை நான் இங்கே வந்த அந்தத் தமிழன் இதய சந்திரனுக்கே சொல்லிக் கொடுத்தேன்'' என்று தமது கொள்கையைத் திரும்பப் படித்தார்.

சங்கர்பந்த் அந்த மண்டபத்திலிருந்த அனைவரையும் வெறுப்புடன் பார்த்தார். ''நமக்குப் பெண்களையும் குடியையும் தவிர பேசுவதற்கு வேறு ஏதுமில்லையா?'' என்று கேட்டார் வெறுப்பு குரலிலும் துலங்க.

''வாழ்க்கைக்கு வேறு எவை ரசம் கூட்டுகின்றன?'' என்று வினவினார் கனோஜி.

பாஜிராவ் தமது ஒரு கையின் அசைப்பினால் அந்தத் தர்க்கத்துக்கு முடிவு கட்டினார். ''சங்கர்பந்த் கேட்பது சரி. நாம் இங்கு கூடியிருப்பது இந்த விஷயங்களை சர்ச்சை செய்ய அல்ல. கனோஜியின் உதவியாலும் ருத்ராஜியின் உதவியாலும் நாம் இப்பொழுது வெள்ளைக் கடற் கொள்ளைக்காரர்களை முறியடித்து விரட்டியிருக்கிறோம். பிரிட்டிஷ் கடல் பலத்தையும் ஓரளவு நாசம் செய்திருக்கிறோம்'' என்று கூறிய பேஷ்வாவை கனோஜி இடைமறித்து ''பேஷ்வா! அனாவசியமாகப் புகழை எங்களுக்கு அளிக்கிறீர்கள். உங்கள் சூழ்ச்சி இல்லாவிட்டால் இது எதுவுமே நடந்திருக்காது. என் மகன் துலாஜி என்னையும் மீறி வெள்ளைக் கொள்ளைக்காரர்களை அடைந்ததும், அனந்த் சிந்து துர்க்கம் சென்றதும் எல்லாம் உங்கள் திட்டம்தானே?'' என்று கேட்டார்.

பாஜிராவின் கூரிய கண்கள் எதிரே உட்கார்ந்திருந்த அறுவரையும் நோக்கின ஒரு விநாடி. பிறகு பதிந்தன கடல் ராணி மீது. ''ராணி! உனக்கு வந்த கடிதத்தைப் பற்றிச் சொல்கிறாயா?'' என்று வினவினார் மெதுவாக.

ராணி அழகாகப் புன்முறுவல் கொண்டாள். ''ஒரு பெரிய வீரன், அழகன் என்னைச் சந்திக்கப் போவதாகவும், அவருக்கு உதவுமாறும் ஓலை அனுப்பியிருந்தீர்கள். அந்த

புனித யாத்திரை

இந்திரா காங்கிரஸ் முதல்வர்கள் எந்த அளவுக்கு டில்லிக்குக் காவடி தூக்குகிறார்கள்? சில முதல்வர்களை நூறு நாட்களுக்குக் கவனித்தபோது அவர்கள் பின்வரும் கணக்கில் நாட்களை டில்லியில் கழித்தார்கள்:

சில உதாரணங்கள்: பீஹார் முதல்வர் ஜகன்னாத் மிஸ்ரா 28; ராஜஸ்தான் முதல்வர் ஜகன்னாத் பஹாடியா 48; குஜராத் மாநில முதல்வர் பேருசிங் சோலங்கி 15; ஒரிஸ்ஸா முதல்வர் ஜே. பி. பட்நாயக் 15; பஞ்சாப் முதல்வர் தர்பாராசிங் 98; உத்திரப் பிரதேச முதல்வர் 31; மஹாராஷ்டிர முதல்வர் அப்துல்ரஹ்மான் அன்டுலே 30; மத்தியப் பிரதேச முதல்வர் அர்ஜுன் சிங் 36.

தூரம் அதிகம் இல்லை என்ற முறையில் ஹரியானா முதல்வர் பஜன்லால் ஒரு நாள் விட்டு ஒரு நாள் டில்லியில் கழித்தார். கர்நாடக முதல்வர் குண்டு ராவ் நான்கு நாட்களுக்கு ஒரு நாள் என்ற விகிதத்தில் டில்லி விஜயம் செய்தார்.

ஒவ்வொரு முதல்வருடன் கூட வரும் சிப்பந்திகள், அவர்களுக்கு ஆகும் பிரயாணச் செலவுகள் இதையெல்லாம் கணக்குப் பார்த்தால் தலை சுற்றும்! தகவல்: **மேனு**

ஆதாரம்: **இந்தியா டுடே**



இனிமையான நேரங்களின் இனிமையை
அதிகரிக்கச் செய்வது.......

கல்கி



ஜனவரி 4,
'81 ஸ்பெஷல்
அதிக பக்கங்கள்
சுஜாதா எழுதும்
புதிய தொடர்கதை
தண்ணீர் - முழு நீள நாடகம்
உலகத் தமிழ் விழா
- சிறப்பு மடல்
☆ சிறு கதைகள்

வீரன் நான் கடல் நீராடும் துறைக்கு வருவார் என்று மட்டும் எழுதவில்லை. அவர் அங்க அடையாளங்களையும் குறிப்பிடவில்லை. அது கிடக்கட்டும் பேஷ்வா! எங்களையெல்லாம் சூத்திரப் பாவைகளாக ஆட்டி வைத்தவர் நீங்கள்தானே? சூத்திரக் கயிறுகளை எப்படி இயக்கினீர்கள் என்று தாங்களே சொல்லிவிடலாமே'' என்றாள்.

அதை மற்றவர்கள் ஆமோதிக்கவே பேஷ்வா பேசலானார்:

''ராணி! நான் சூத்திரதாரி என்று சொல்வது சரியாகாது. ஆட்சியிலிருப்பவர்கள் யாருக்கும் நாட்டைக் காக்கும் பொறுப்பு உண்டு. அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தகுதியான ஆயுதங்களைக் கையாள்வது தவறாகாது. அப்படி ஆயுதங்களைப் பொறுக்கினேன். பிரிட்டிஷ் ஆண்டு கணக்குப்படி 1715வது ஆண்டு டிசம்பர் மாதத்தில் கவர்னர் சார்லஸ் பூன் பம்பாய் வந்த பிறகு அரபிக் கடலில் நமது அமைதி குலைந்தது. அவர் நமது கடல்பலத்தை முறிக்க முயன்று பல தோல்விகளை கனோஜியிடம் அடைந்தும் சும்மா இருக்கவில்லை. மேலும் தொந்தரவு செய்தார். அவர் பல வினத்தாலும் அசட்டுத் தனத்தாலும் வெள்ளைக் கொள்ளையர் அரபிக் கடலைச் சூறையாட முற்பட்டார்கள். கனோஜிக்கும் வயதேறிவிட்டதால் அவர் போரில் ஈடுபட மறுத்தார். காரணம், அவரது நண்பர், எனது தந்தை பேஷ்வா பாலாஜி விசுவநாத் காலமாகிவிட்டதுதான். 1720ம் ஆண்டு நமது வரலாற்றில் முக்கியமானது. அந்த ஆண்டில் என் தந்தை மறைந்து நான் சிறு வயதில் பேஷ்வாவானேன். 1720ல் மடகாஸ்கர் கொள்ளைக்காரர்களான இங்க்லண்டும் டெய்லரும் அரபிக் கடலில் அனர்த்தம் செய்து கொண்டிருந்தார்கள். 1720ல் கவர்னர் பூன் விஜயதுர்க்கத்தைத் தாக்கினார். ஆகவே 1720வது ஆண்டு மகாராஷ்டிர சரித்திரத்தில் முக்கிய ஆண்டு. அந்த ஆண்டுக்கு முதல் ஆண்டில்தான் காப்டன் மாக்ரே காஸண்ட்ரா என்ற பெரிய போர்க் கப்பலை இங்க்லண்டிடமும் டெய்லரிடமும் பறி-கொடுத்தார். அந்தக் கப்பலால் அரபிக் கடல் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது. அந்த ஆண்டில்தான் மகாராஜா ஷாஹு என்னைப் பார்த்துக் கேட்டார், 'பல அக்கிரமங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறேன். அதற்கு நீ என்ன செய்ய உத்தேசம்?'' என்று. வேறு வழியின்றிப் புதுத் திட்டம் வகுத்தேன். இந்திரஜித் அனந்தின் போர்த்திறன் என் காதில் விழுந்தது. அவன் ஒரு நாடோடி என்றும் சம்பந்தமில்லாத சண்டைகளிலெல்லாம் நுழைபவன் என்றும் கேள்விப்பட்டேன். கார்வாரில் பிரிட்டிஷ் கடற் படையையும் தரையில் இறங்கிய மாலுமிகளையும் புரவிப் படை கொண்டு அவன் நாசம் செய்ததைப் பற்றிப் பெரும் பிரசித்தி இருந்தது. அடுத்தபடி துலாஜி ஆங்கரே தந்தையையும் மீறிக் கடலில் உலாவுவதாகவும் கேள்விப்பட்டேன். முதியவர்கள் உதவாதபோது இந்த இரண்டு வாலிபர்களையும் உபயோகப்படுத்தத் தீர்மானித்தேன். இருவரையும் நானே தனிமையில் சந்தித்துப் பேசினேன். அப்பொழுதுதான் கடல் ராணியைப் பற்றி விளக்கினான் அனந்த். துலாஜியும் மிகுந்த பெருமையுடன் ராணியைப் பற்றிக் கூறினான். இரண்டு வாலிபர்களும் இஷ்டப்படி நடக்க அனுமதி கொடுத்தேன். என் மருமகளை வேவுகாரியாக்கி அனந்திடம் ஒப்படைத்தேன். அனந்த் அடிக்கடி எனக்குச் செய்தி அனுப்பவும் உத்தரவிட்டிருந்தேன். இருவரும் புறப்பட்டார்கள். துலாஜி கடலை நோக்கிச் சென்றான். சாருவிடம் மயங்கிய அனந்த் பிரியாவிடை பெற்று மலை வழியே நடந்தான். மீதிக் கதையை இரு வாலிபர்களும் சொல்வார்கள்'' இங்கு மௌனமானார் பேஷ்வா. அவர் கண்கள் அனந்தை நோக்கின.

அவற்றின் குறிப்பறிந்த அனந்த் சொன்னான்: ''பேஷ்வாவின் உத்தரவைப் பெற்ற நாங்கள் இருவரும் என்ன செய்ய வேண்டும் என தீர்மானித்தோம். துலாஜி ஆங்ரே எப்படியாவது காஸண்ட்ராவில் ஏறிவிட வேண்டியதென்றும், வெள்ளைக் கொள்ளைக்காரரிடம் சேர்ந்து பணி புரிந்து தேவையானபோது என்னிடம் இணைய வேண்டியதென்றும் தீர்மானித்தோம். சரித்திரம் பயின்ற நான் எந்த இடத்தில் கொள்ளைக்காரர்களைச் சந்திக்கலாம் என்று பார்த்தேன். சிந்து துர்க்கம் வசதியாயிருந்தது. அதற்கான திட்டங்களை நானும் துலாஜியும் வகுத்தோம். சிந்து துர்க்கத்துக்கு துலாஜி ஆங்ரே காஸண்ட்ராவைக் கொண்டு வரவேண்டியதென்றும் அங்கு நாங்கள் சந்திப்பதென்றும் முடிவு செய்தோம். நான் மீண்டும் கார்வார் சென்றேன். துலாஜி கடலுக்குச் சென்றான். கார்வாரில் நான் லாங்ஜான் ஸில்வரை ஓராண்டு கழித்துச் சந்தித்தேன். அவனைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தேன். கொள்ளைக்காரனைக் கொண்டு கொள்ளைக்காரரைப் பிடிக்க முடிவு செய்து அவனைக் காப்பாற்றி அவனுடன் சிந்து துர்க்கம் வந்தேன். வருவதற்குமுன்பே துலாஜிக்குச் செய்தி அனுப்பினேன். பத்து நாட்களில் அவனைச் சிந்து துர்க்கத்தில் சந்திப்பதாக. நான் சிந்து துர்க்கம் வெளிப் பாறையில் அமர்ந்து சிவாஜி மகாராஜாவையும் அந்தக் கோட்டைச் சிறப்பையும் எண்ணினேன்.

''நெப்போலியன் தினசரி நான்கைந்து மணி நேரத்திற்கு மேல் தூங்கியதே இல்லை. ஆனால் அவர் முதன் முதலில் போரில் தோல்வியடைந்தபோது இடைவிடாது முப்பத்தாறு மணிநேரம் தூங்கினாராம்.

-பிரியா பாலு



அங்கிருந்த அறையில் தூங்கினேன். அரைத் தூக்கத்தில் கடல் ராணி என்னை எழுப்பினாள். அடுத்து நடந்தது அவளுக்குத் தெரியும்'' இங்கு நிறுத்தினான் பேச்சை அனந்த்.

ராணி உணர்ச்சி வசப் பட்டிருந்தாள். ஆகவே யாரும் கேட்காமலே கதையைத் தொடர்ந்தாள்: ''அங்குதான் இந்தச் சோம்பேறி வீரனைச் சந்தித்தேன். ஒரு தூங்கு மூஞ்சி எப்படி இரு வெள்ளைக்காரர்களை அநாயாசமாகச் சுட முடியும் என்பதைப் பார்த்தேன். பிறகு இவர் செய்த சாகசங்கள் ஜகப் பிரசித்தம். என்னை மெள்ளக் கைக்குள் போட்டுக் கொண்டார். இவர் சிந்து துர்க்கம் வருவதற்கும் காஸண்ட்ரா இவரைத் தேடி வருவதற்கும் சரியாக இருந்தது. எனக்கும் காப்டன் இங்க்லண்டுக்கும் வில்வரை இவர்தான் அறிமுகப்படுத்தினார். மூவரைப் பற்றிய சகல விவரங்களையும் இவர் அறிந்திருந்தார். பிறகு நாங்கள் காஸண்ட்ராவுக்குச் சென்றோம். அங்கு துலாஜி கூனனாக இருந்தார். பிறகு நன்றாக நிமிர்ந்தார். ஆனால் நானும் அனந்தும் மாக்ரே பெரும் பொக்கிஷம் கொண்டு வருவதாகச் சொல்லி காஸண்ட்ராவை பூர்ண கட்டுக்குக் கொண்டு வந்த தந்திரத்தின் மூல புருஷர் துலாஜிதான். சிந்து துர்க்கத்தில் துலாஜியும் இவரும் செய்த தந்திரங்கள் பல. விளைந்த விநோதங்கள் எவ்வளவோ. திடீரென்று ஒரு நாள் அனந்த் மறைந்தார் சுரங்கப் பாதை வழியாக. நானும் அவரைத் தொடர்ந்து விஜய துர்க்கம் வந்தேன். அங்கு எனக்குப் பதில் கடல் ராணியாக இவள் வீற்றிருந்தாள். காப்டன் மாக்ரேயிடம் காஸண்ட்ராவை ஒப்படைப்பதாக ஒப்பந்தமும் நடந்தது. மாக்ரே அங்கு எப்படி வந்தார்? லா பூஷே எப்படி சிந்து துர்க்கம் வந்தார்? இவை எனக்குப் புரியவில்லை...''

இதற்கு கனோஜி பதில் சொன்னார்: ''பேஷ்வா அவர்கள், கொள்ளைக்காரர் பலம், நம்மை ஆள முயலும் பிரிட்டிஷ் பலம் இரண்டையும் முறியடிக்க வேண்டுமென்றார். அதற்காக மாக்ரேயிடம் ஓர் ஒப்பந்தம் செய்தேன். இதற்கிடையில் பிரசித்தி பெற்ற பிரெஞ்சுக் கொள்ளைக்காரர் லா பூஷே அரபிக் கடலில் நடமாடுவதாகக் கேள்விப்பட்டேன். அவருடன் தொடர்பு கொண்டு அவரைக் கடல் ராணிக்கு உதவுமாறும், அதற்காக காஸண்ட்ராவை அவருக்கு அளிப்பதாகவும் ஒப்பந்தம் செய்தேன். மால்வானிகளின் கப்பல்கள் இருக்கும் ரகசிய இடம் செல்ல ஒரு கப்பலையும் கொடுத்தேன். லா பூஷே நாங்கள் இட்டபடி செய்தார். கடல் ராணியின் கப்பல்கள் இருக்குமிடம் சென்றார். தமது பிரெஞ்சு மாலுமிகளுடன் மால்வானிகளையும் தம்முடன் சேர்த்துக்கொண்டார். வழியில் ஸித்திகளின் கப்பலைக் கொளுத்தினார். சிந்து துர்க்கமும் சென்றார். அங்கு டெய்லரையும் இங்க்லண்டையும் நட்புக் கொண்டார். அனந்தையும் துலாஜியையும் நட்பு கொண்டார்.'' என்று கூறினார் கனோஜி.

பேஷ்வா கடைசியாக அனந்தை நோக்கினார். ''பிறகு உன் திட்டங்களை அடிக்கடி





கல்லூரி ஸ்டிரைக்
சொல்லித் திரும்பிய
ஆசைத்தம்பியை
அழைத்துக் கேட்டேன்
- இது உங்கள் முறையா?
ஆசிரியர் முறையா?

புலவர் சந்திரன்

எழுதி அனுப்பினாய். எதிரிகளை இங்கு சந்திக்கப் போவதாகக் கூறினாய். நீ முதலில் எழுதியபோது கவர்னர் பூன் இங்கிலாந்து போய்விட்டதாக எழுதியிருந்தது உனக்கு நினைவிருக்கும். அது தவறான வதந்தி. புது கவர்னர் பிப்ஸ் வந்ததும் பூன் போகவில்லை. தமது தோல்விகளுக்கு ஈடுகட்ட இந்தப் போரில் ஈடுபட்டார். ஆனால் இனிப் போய் விடுவார். பிப்ஸ் ஐந்து மாதங்களாகக் காத்திருக்கிறார் பதவி ஏற்க. இந்தத் தோல்விக்குப் பிறகு பூன் இருக்க மாட்டார்.'' என்றார். பிறகு ஒரு கேள்வி கேட்டார்: ''அனந்த்! உனக்கு நல்ல வாய்ப்பிருந்தபோது காஸண்ட்ராவை ஏன் தப்பிப் போக விட்டாள்?'' என்று.

''கடல் ராணி காஸண்ட்ராவை நாசப் படுத்துவதை விரும்பவில்லை. அவள்தான் போகவிட்டாள்'' என்றான் அனந்த்.

''ஏன் ராணி?'' என்றுகேட்டார் பேஷ்வா.

''நமது திட்டம் கொள்ளைக்காரர்களையும் பிரிட்டிஷ் பலத்தையும் உடைப்பது. காஸண்ட்ராவின் பாய்மரங்கள் போய்விட்டன. அதன் பீரங்கி பலத்தைத் தங்கள் தரை வீரர் திட்டமும் கடல் வீரர் திட்டமும் முறித்து விட்டன. காஸண்ட்ரா இப்பொழுது சிறகிழந்த பறவை. மாக்ரேயின் கப்பல்களில் நான்கு போய்விட்டன. இருப்பினும் மாக்ரே காஸண்ட்ராவைத் தொடர்ந்திருக்கிறார். வெள்ளையரை வெள்ளையரே அழித்துக் கொள்வார்கள். இனி நாம் செய்ய வேண்டியது அதிகமில்லை'' என்றாள் ராணி.

''ரத்னா! உனக்குக் கடல் ராணி என்ற பெயர் தகும். நீ 'கடல் ராணி'யையும் அதன் பீரங்கிகளையும் இயக்கியதைக் கவனித்தேன்.'' என்று பாராட்டினார் பேஷ்வா. ''உன் முடிவு சரி'' என்றும் குறிப்பிட்டார்.

ராணி ஆசனத்திலிருந்து எழுந்தாள். ''பேஷ்வா! சாரு எப்பொழுது மரக்கலத்தை நடத்தப் பயின்றான்? அவன் சுக்கான் பிடித்து 'கடல் ராணி'யைச் சரியாகத் திருப்பி விருக்கா விட்டால் இந்தப் போர் இத்தனை திறம்பட நடந்திருக்காது'' என்றாள்.

''ஆமாம் சாரு! நீ எப்பொழுது கப்பலைச் செலுத்தக் கற்றுக் கொண்டாய்?'' என்று பேஷ்வா கேட்டார்.

சாரு தனது அழகிய கண்களால் பேஷ்வாவை ஏறெடுத்து நோக்கினான். ''குடிசையிலிருந்த காலத்தில் கனோஜி அடிக்கடி வந்து கப்பல் மார்க்கங்களைச் சொல்லிக் கொண்டிருந்

தார். மனத்தில் பதிந்ததை நடைமுறையில் செய்து பார்த்தேன்'' என்று சொன்னாள்.

பேஷ்வா முடிவில் அனைவரையும் பாராட்டினார். கடைசியில் லாபூஷே எழுந்திருந்தான். ''காஸண்ட்ராவின் கதை இன்னும் முடியவில்லை. அதை நான்] கைப்பற்றாவிட்டால் உறங்கமாட்டேன். அதற்கொரு கப்பல் வேண்டும்'' என்றான்.

''கப்பலுக்கு என் பெயரை முதலில் சூட்டியது நீங்கள். அதை எடுத்துக்கொள்ளுங்கள்'' என்றாள் கடல் ராணி.

''உங்களிருவரையும் சிந்து துர்க்கத்தில் விட்டுப் போகிறேன் வாருங்கள்'' என்று அழைத்தான் லா பூஷே இரு பெண்களையும் நோக்கி.

''மூவரையும் என்று சொல்லுங்கள்'' என்றான் துலாஜி.

''மறந்துவிட்டேன். ஆம் ஆம். மூவர்'' என்றார் பேஷ்வா. பிறகு சாருவை நோக்கி ''இனி உனக்கு மலைக்குடிசை தேவையில்லை'' என்று கூறி நகைத்தார் பெரிதாக.

• • •

அடுத்த மாதத்தில் ஒருநாள் காலை ரத்னா அலைகடல் தாமரையாக மீண்டும் கடலில் நீந்திக் கொண்டிருந்தாள். மீண்டும் பழைய கரைக்கு வந்தாள். அன்றும் உறங்கிக்கொண்டிருந்தான் அறை வாயிலில் அனந்த். அதே பழைய கிழிந்த உடை, அதே இரண்டுகைத் துப்பாக்கிகள் கச்சையில். அவனை உற்று நோக்கிய கடல் ராணி ''எழுந்திருங்கள், வெட்கமில்லை?'' என்று அவன் தோளைத் தொட்டு அசைத்தாள். அந்தச் சமயத்தில் உள்ளேயிருந்து வெளியே வந்தாள் சாரு நெகிழ்ந்த உடையுடன்.

''புருஷனைக் கேட்கிறாயே. நமக்கு வெட்கம் இருக்கிறதா? மூவரும் ஒரே அறையில்..'' என்று துவங்கி நிறுத்தினாள் சாரு.

''சே!சே! சாரு நம்பாதே. இந்தப் பொய்த் தூக்கத்தை நம்பாதே'' என்றாள் ராணி.

இரு பெண்களும் அனந்தை நோக்கி வந்தார்கள். முதல் நாள் போல் அன்றும் அவன் கைத்துப்பாக்கிகள் இரண்டும் இயங்கின மின்னல் வேகத்தில். ஆகாயத்திலிருந்து விழுந்தன இரு கடற்பறவைகள் இரு பெண்களுக்கும் இடையில்.

''இவற்றை எதற்குச் சுட்டீர்கள்?'' என்று கேட்டாள் ராணி.

''வெள்ளைக்காரர் யாருமில்லை உன்னைத் தூக்கிப் போக. தவிர நீங்கள் சமைப்பதற்கு ஏதாவது வேண்டாமா?'' என்றான் அனந்த்.

''சமையலுக்குத்தான் நாங்கள் ஏற்பட்டோமா?'' என்று சீறினாள் சாரு.

''சமையலுக்கும்தான்'' என்ற அனந்த், அந்த 'உம்'மை சிறிது அழுத்திச்சொன்னான். அவர்கள் மீது தன் கண்களை ஓடவிட்டான்.

''சே! சுத்த வெட்கங் கெட்டவர். வாடி சாரு'' என்று அவளையும் அழைத்துக் கொண்டுஅறைக்குள் சென்றாள் கடல் ராணி.

சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்த அனந்த் அறையை நோக்கிச் சென்றான். கதவு அடைத்திருந்தது. இருமுறை கதவைத்



காதல் வாகனம்!

THE LOVE BUG

● மாஜி மோட்டார் கார் பந்தய நிபுணருக்கும் ஒரு மாயக் காருக்கும் உள்ள நேசத்தைச் சுவைபடச் சித்திரிக்கும் கதையமைப்புக் கொண்ட படம். வால்ட் டிஸ்னி நிறுவனத்தின் தயாரிப்பு. ஆரம்ப முதல் இறுதிவரை ஒரே கலாட்டாவும் சிரிப்பும்தான்.

ஜிம் ஒரு கார் புரோக்கரைச் சந்திக்கிறான். வண்டு (பக்) என்று வர்ணிக்கப்படும் வோக்ஸ்வாகன் கார் ஒன்றினைச் சில சிப்பந்திகள் தாறுமாறாகவும் அலட்சியமாகவும் கையாளும் முறையைக் கண்டிக்கிறான். அந்தக் காருக்கு ஒரு மனம் இருக்கிறது! அது நெகிழ்கிறது. மறுநாள் காலை அந்தக் கார், அவன் வீட்டு வாசலில் வந்து நிற்கிறது! தனக்குத் திருட்டுப் பட்டம் வந்துவிடப் போகிறதே எனப் பயந்து ஜிம் அதனை விலைக்கு வாங்கி விடுகிறான். காரின் உற்ற நண்பனாகிறான். அது அவனுக்குப் பல விதங்களில் உதவுகிறது. கரோலிடம் ஜிம் கொள்ளும் காதல் மலர்ந்து கனிய வழி வகுக்கிறது. மோட்டார் கார் ரேஸில் வெற்றியைத் தேடித் தருகிறது.

இந்த அதிசயக் காரை அழித்து ஒழிக்கச் சதி நடக்கிறது. எல்லாச் சதிகளும் முறியடிக்கப்பட்டுக் கடைசியில் வெற்றி வாகை சூடுவது காரும் காதலர்களும்தான்.

''தி கார்'' என்ற படத்தில் கொலைகாரக் காரைப் பார்த்தோம். ''லவ் பக்'' என்ற படத்தில் மனிதாபிமானமுள்ள காரைக் காண்கிறோம்.

—டி.எம்.ஆர்.



சிகரெட் குடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது 1 ரூபாய்க்கு 10*

STATUTORY WARNING

CIGARETTE SMOKING IS INJURIOUS TO HEALTH

CASVS-238-182 TAM

பிரதான விற்பனையாளர் : மெஸ்ஸர்ஸ் ஏ. வி. எஸ். & கம்பெனி கிருஷ்ணகிரி – 635 002

கராட்டே சியாமளா!

● ஸ்பெயின் நாட்டில் இம்மாதம் முதல் வாரத்தில் நடந்த அகில உலக கராத்தே போட்டியில் பங்கேற்க ஒரே பெண் பிரதிநிதியாய்த் தமிழகத்தின் சார்பில் சென்றிருப்பவர் செல்வி ஆர். சியாமளா. எழும்பூரிலுள்ள சென்னை மாநில மகளிர் உயர்நிலைப் பள்ளியில் பிளஸ் டூ நிலையில் இரண்டாவது ஆண்டு படிக்கிறார்.

கராத்தே கலையில் பல வகை உண்டு. சியாமளா கற்றுத் தேர்ந்திருப்பது ''ஷிடோரி யுகாய்ஷின் கான்ஸ்'' முறை. போட்டிக்குப் புறப்படு முன்பு செல்வி சியாமளாவைச் சந்தித்தபோது அவர் சொன்னது:

''என் தந்தைக்குக் கராத்தே கலையில் சிறு வயது முதற்கொண்டே ஆர்வம். அதனால் என் அண்ணன்வேணுகோபாலை கராத்தே பயிற்சிக்கு அனுப்பினார். எனக்கும் கராத்தே கற்க வேண்டும் என்கிற ஆசை இதனால் துளிர் விட்டது. எனது பதினோராவது வயதில் நானும் கற்க ஆரம்பித்தேன்.''

திரு மோஸஸ் முத்தையாவிடம் நாலரை ஆண்டுகளாகக் கராத்தே பயிலும் சியாமளா இக்கலையில் 'பிரௌன் பெல்ட்' பெற்றிருக்கிறார்.

சென்றஆண்டு பெங்களூரில் நடந்த அகில இந்திய அளவிலான கராத்தே போட்டியில் தேசியப் பெண்கள் சாம்பியன் பட்டத்தை சியாமளா வென்றிருக்கிறார். —நாயகன்



தட்டினான். ''வரலாமா?'' என்றும் கேட்டான். ''கூடாது'' என்றாள் சாரு.

''ஏன்?'' என்று கேட்டான் அனந்த்.

''நீங்கள் வரக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை'' என்றாள் ராணி.

அடுத்து இருவர் நகைப்பும் இன்பமாக ஒலித்தது அவன் காதில். கதவில் சாய்ந்து கொண்டான் அனந்த். ''சொர்க்கம் இப்படித்தான் இருக்கும்''என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டான். ''சொர்க்க வாசல் எப்பொழுது திறக்கும்?'' என்றும் தனக்குள் கேட்டுக் கொண்டான். கேள்வியை நினைத்துத் தானே முறுவல் செய்து கொண்டான். ''இந்த சிந்து துர்க்கம்எனது சொந்த துர்க்கம், சொர்க் கம்'' என்று முணு முணுத்தான். அந்த முணு முணுப்பில் இன்பம் இருந்தது. முகத்தில் திருப்தி இருந்தது. எதிரே விரிந்தது அரபிக் கடல். அதன் அகண்டம் அவன் இதயத்தைக் கொள்ளை கொண்டது. 'காதலைப் போலத்தான் கடலும். கரையில்லாதது, முடிவில்லாதது' என்ற தத்துவம் அவன் இதயத்தை ஆட்கொண்டது. **(முற்றும்)**

பின்னுரை

1. காஸண்ட்ரா இந்தப் போரால் பெரிதும் நாசம் அடைந்திருந்தது. மாக்ரே அதைத் தொடர்ந்து போரிட்டாலும் காப்டன் இங்க்லண்டின் திறமையால் காஸண்ட்ரா தப்பி கொச்சிக்குச் சென்று கொச்சி மன்னன் உதவியால் பழுது பார்க்கப் பட்டு மடகாஸ்கரை நோக்கி ஓடியது. இந்த உதவிக்காகக் கொச்சி மகாராஜாவின் பெண்ணுக்குக் கொள்ளைக்காரர்கள் கொள்ளைப் பொருள்கள் பலவற்றையும் பரிசளித்தார்கள். பிறகு இங்க்லண்ட், ஸில்வர் டெய்லர் மூவருக்கும் சண்டை உண்டாகவே டெய்லர் அதிகாரமேற்று இங்க்லண்டையும் ஸில்வரையும் மொரீஷியஸ் தீவில் இறக்கிவிட்டான். அங்கிருந்து அவர்கள் ஸெயிண்ட் மேரீஸுக்குச் சென்றார்கள்.(Pirates of Malabar-By John Biddulph -P-P. 155-156.

2. பிறகு லாபூஷே தான் சொன்னபடி காஸண்ட்ராவைக் கைப்பற்றிக்கொண்டான். அதைக் கொண்டு போர்ச்சுகீஸ் வைஸ்ராய் காண்டி டி எரிஸிராவின் ''நோஸ்ட்ரா ஸெஞராடி காபோ'' என்ற கப்பலைப் பிடித்து அதிலிருந்த வைரங்களையும் ஏராளமான தங்கத்தையும் கைப்பற்றிக் கொண்டான். வைஸ்ராயை மட்டும் தப்பவிட்டான். Kanhoji Angrey Maratha Admiral-By Manohar Malgonkar - Foot note on page 246.

3. கவர்னர் பூன் மனமுடைந்து 1722 ஜூன் மாதம் 9ந் தேதி பிரிட்டனுக்குப் பயணமானார்.

4. காப்டன் மாக்ரேயின் சேவைக்கு மெச்சி பிரிட்டிஷ் அதிகாரிகள் அவரை 1738ல் சென்னை கவர்னராக நியமித்தார்கள். இங்கு பெரும் பொருள் திரட்டி (1,00,000 பவுன்கள்) மாக்ரே சொந்த நாடு சென்றார். (Biddulph - page 160.

5. காப்டன் ஸ்டாண்டன், மாக்ரேக்கு உதவியதற்காக மேஜர் பதவிக்கு உயர்த்தப் பட்டார். லெப்டினன்ட் ஸ்மித் காப்டனானான். (Biddulph-Early notes)

வெளிநாடு போயிருந்தேன்

— விஜய்



சமீபத்தில் நான் — அதாவது அய்யம்பேட்டை அய்யாசாமிதான்! — கராச்சி, லண்டன், ரோம், பாரிஸ், நியூயார்க் இங்கெல்லாம் சுற்றி வந்தது உங்களுக்குத் தெரியாது. கொஞ்ச நாட்கள் பொறுத்துப் பார்த்தேன். என்னடா, யாரும் கேட்கக் காணோம் என்று. சரி சரி நானே எழுதிவிடுவது என்று தீர்மானித்துவிட்டேன்—பயணக் கட்டுரைதான்! சரி, படிக்கிறீர்களா?

சென்னை நுங்கம்பாக்கத்தில் — சாரி, மீனம்பாக்கத்தில் விமானத்தில் ஏறுவதற்கு முன்னால் என் பாட்டி அபசகுனம் மாதிரி குடுகுடுவென்று ஓடி வந்தாள். கையில் ஒரு பொட்டலத்தைத் திணித்தாள்.

''என்ன இது, திருநெல்வேலி அல்வாவா?''

''வச்சுக்கோடா... போற இடத்தில் கிடைக்காமக் கஷ்டப்படுவே... கொஞ்சம் வேப்பிலைக் கட்டிதான்!''

அதைப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டேன். நல்ல வேளை, ஏர்ஹோஸ்டஸ் பார்த்துக் கேலி பண்ணினால் மானம் போகுமே என்று பயந்தேன்.

விமானம் உயரே கிளம்பி அரை மணி நேரமாகியும் ஒன்றும் கொண்டு வந்து தரவில்லை. எனக்கோ பசி. கைப் பையில் இருந்த பொட்டலத்தில் இட்லியும் மிளகாய்ப் பொடியும் இருந்தன. அதைப் பிரித்தால்... யாராவது பங்கு கேட்டால்?

கடைசியில் உணவு வந்தது ஆமாம்—கடைசியில்தான்! கோழிக்கால் சூப்!


''சும்மா குடித்துக் கொள்ளுங்கள் மிஸ்டர் அய்யாசாமி! இது வெஜிடேரியன் கோழிதான்!'' என்றாள் ஏர் ஹோஸ்டஸ் அம்புஜம். அவள் தமிழ் நாட்டுக்காரியாம்! என் உள்ளம் சிலிர்த்தது. வாழ்க தமிழ்!

''எனக்குக் கொஞ்சம் ஐஸ் வாட்டர் போதும்'' என்று சமாளித்தேன்.

அடுத்த ஸ்டாப் கராச்சி. காராசேவின் ஞாபகம் எனக்கு வந்தது. விமானம் அரை மணி நேரம் நிற்கும் என்றார்கள். பக்கத்தில் ஏதாவது உடுப்பி ஹோட்டல் இருந்தால் இட்லியைச் சாம்பாருடன் காலி பண்ணிவிடலாமே என்று யோசித்தேன். ம்ஹூம்! ஒன்றும் காணோம்! 'இட்லியே உன் நிலை என்ன?' என்று ஏங்கினேன்.

அடுத்தது லண்டன் என்று நினைக்கிறேன்.

விமானத்தை விட்டு இறங்கியதுமே என் நண்பர் சூசைநாயகம் என்னை எதிர்கொண்டழைத்தார். டாக்சியில் போகும்போது என் இட்லிப் பொட்டலத்தை அவரே காலி பண்ணிவிட்டார். ஒரு ஓட்டலில் இறங்கினோம்.



''என்ன சாப்பிடுகிறாய்?''

''எனக்கு புடலங்காய் கூட்டு, வெண்டைக்காய் பச்சடி... ரசம்....''

''இது உன் மாமியார் வீடுன்னு நினைச்சியா என்ன? இங்கே பீரும் கேக்கும் மட்டும்தான் கிடைக்கும்...''

ஒரே அதிர்ச்சி எனக்கு!

அடுத்த விமானத்தில் நான் பாரீசுக்குக் கிளம்பினேன். சும்மா சொல்லக்கூடாது. எனக்குப் பிடித்தமான வத்தல் குழம்பை பாரீசில்தான் ருசித்தேன். நண்பர் நாயுடு பிறகு சொன்னார் — இது ஒருவகை விசேஷ கடல் பிராணியில் செய்யப் பட்டது என்று. விளக்கெண்ணெய் குடித்தது போலாயிற்று.

''வாயில் எடுத்துவிட்டால் உன்னைத் தொலைத்து விடுவேன்!'' என்று பயமுறுத்தியதால் 'கடல் பிராணி ஜீர்ணோபவ:' என்று சத்தம் போடாமல் இருந்து விட்டேன்.

இந்த நியூயார்க் இருக்கிறதே, ஒரே தமாஷ் போங்கள்! சந்தடி மிகுந்த பாதை



யொன்றில் மிளகாய் பஜ்ஜி போட்டுக் கொண்டிருந்தார் ஒருவர் — அசல் மதுரைத் தமிழர். பேட்டி சூடாக இருந்தது.

''இங்கே உமக்கு வரும்படி எப்படி?''

''வரும்படியா? இந்த நியூயார்க்கில் பாதி பேர் கத்தியைக் காட்டியே என்னிடம் மிளகாய் பஜ்ஜி சாப்பிடுகிறார்கள், ஸ்வாமி!''

''பின்னே எப்படி காலட்சேபம் நடக்கிறது?''

''ஹோம் டெலிவரி பண்ணித்தான் சமாளிக்கிறேன்.''

''அப்படியா?''

''பாருமேன், கார்ட்டர் கூட என் மிளகாய் பஜ்ஜியைச் சாப்பிட்டு என்னுடன் போஸ் கொடுத்திருக்கிறார்!''

போட்டோவைப் பார்த்தேன்.

''இது நெஜமாகவே கார்ட்டர்தானே?'' என்று கேட்டுவிட்டு ஓட்டம் பிடித்தேன். மறுநாள் சென்னைக்கு வந்து சேர்ந்தேன்.

—சரி, அப்புறம், அந்த நாடுகளில் என்னவெல்லாம் பார்த்தேன், அந்த நாட்டைப் பற்றி என்ன தெரிந்து கொண்டேன் என்று கேட்கிறீர்களா?


நாசமாய்ப் போச்சு. பயணக் கட்டுரைகளில் இப்போ அதெல்லாம் யார் ஸ்வாமி எழுதுகிறார்கள்? — ஆளை விடுங்கள்!'

புள்ளிகள்: செய்திகள்



இளைய ராஜா

கர்நாடக மாநிலத்தின் மேற்குப் பகுதியில் உள்ள மூகாம்பிகை அம்மன் கோவிலுக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்ற இளைய ராஜா, அந்த அம்மனின் மீது பிரபல கன்னட பாடலாசிரியர் உதயசங்கர் எழுதிய நான்கு தெய்வீகப் பாடல்களுக்கு இசை அமைத்து, இசைத்தட்டுகளாக வெளியிட்டிருக்கிறார். முதன் முதலாகக் கன்னடத்தில் சொந்தக் குரலில் பாடியுமிருக்கிறார். இளைய ராஜா ஒரு ஒரிஸ்ஸுவர்.





மாருதி

ஓவியர் மாருதி மூன்று காரியங்களைச் செய்து வருகிறார். கர்நாடக சங்கீதத்தில் உள்ள ஈடுபாடு காரணமாகப் புல்லாங்குழல் கற்றுக் கொண்டு வருகிறார். கராத்தே தெரிந்தவராதலால் விளம்பரங்களுக்கு நல்ல ஆண்மைத் தோற்றம் கொண்ட மாடலாக விளங்குகிறார்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை ஓவியமாகத் தீட்ட எண்ணியுள்ளார். இதற்காகப்பல ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

டி. ஆர். விஸ்வநாதன்

இன்ரிகோ இசைத்தட்டு ரெகார்டிங் ஆபீஸரான டி. ஆர். விஸ்வநாதன் தமது ஸ்தாபனம் புது முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளதைக் கூறுகிறார். சாதாரணமாக இசைத்தட்டுகளைக் கறுப்பு நிறத்தில்தான் காணமுடியும். இவர்கள் பச்சை, நீலம், சிவப்பு போன்ற பல வண்ண இசைத்தட்டுகளையும் வெளியிடுகிறார்கள்.





ஆர்யா

பாரதியார் என்றாலே சட்டென்று நமது நினைவில் தோன்றும் படம் ஒன்று தான். அந்தப் பிரபல ஓவியத்தைத் தீட்டியவர் பாரதியாரை நேரில் பலமுறை பார்த்த ஆர்யா. இயற் பெயர் பாஷ்யம்.

பாரதியார் நூற்றாண்டு வருகிறது. பாரதி அன்பர்களுக்காக பாரதியாரின் புகைப்படம் போன்றே சிறப்பாக அச்சிட்ட படங்களைத் தயாராக வைத்திருக்கிறார் ஆர்யா. தமிழ்நாடு முதல்வராக இருந்த அண்ணா ஆர்யாவின் இந்தப்படத்தை பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் பள்ளிகளுக்கும் சிபாரிசு செய்தார்.

படம் வாங்க விரும்புவோருக்கு முகவரி: ஆர்யா, 30-ஏ, விசாலாட்சி தோட்டம், வாரன் ரோடு, சென்னை-4

தொகுப்பு: சிக்கி, ஏ. சுவாமிநாதன்

பாட்டுக்கொரு புலவன்



5. அரசியல் தலைவன்

கவியரசர் பாரதியார் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையைச் சார்ந்திருந்தார். ஆனால், அவர் அன்றைய மிதவாத காங்கிரசைப் பின்பற்றினரில்லை. அந்த மகாசபை தன்னைப் பின்பற்றும்படியாக அதற்கு வழி காட்டும் வகையில் பாடல்கள் புனைந்தார்.

1908 ஜனவரியில் வெளியான ''சுதேச கீதங்கள்'' என்னும் நூலிலேயும், அடுத்து 1909ல் வெளியிட்ட ''ஜென்ம பூமி''என்னும் நூலிலேயும் காணப்படும் கவிதைகளிலே ''பாரதத்துக்குப் பரிபூரண சுதந்திரம் வேண்டும்'' என்கிறார் பாரதியார்.

''தொண்டு செய்யும் அடிமை'' என்று தொடங்கும் பாடலிலே, ''தொண்டு செய்யும் அடிமை உனக்குச் சுதந்திர நினைவோடா? பண்டு கண்டதுண்டோ — அதற்கு நீ பாத்திர மாவாயோ?'' என்று, பூரண சுதந்திரம் கோரும் பாரதவாசிக்குப் பரங்கியன் பதிலளிப்பது போல் பாரதியார் பாடியுள்ளார்.

''சுதந்திரப் பெருமை'' என்னும் பாடலிலேயும் அந்த மகா கவி பூரண சுதந்திரத்தையே வலியுறுத்துகிறார்.

திலகர் போன்ற தீவிரவாதிகள் கூட பாரதத்துக்குப் பூரண சுதந்திரம் வேண்டும் என்று கேட்காத காலத்திலே ஒரு தமிழ்க் கவிஞன் கேட்டிருக்கிறான் என்றால், அது, தமிழராகிய நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருவதுவானே?

காந்தியடிகள் விடுதலைப் போரின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்வரை விடுதலை பெற்ற இந்தியா எப்படி இருக்கும் — எப்படி இருக்க வேண்டும் என்று இந்திய தேசியத் தலைவர்களில் எவரும் சிந்தித்தது கூட இல்லை. அந்தக் காலத்திலேயே — அதாவது 1909க்கு முன்பே, சுதந்திர இந்தியா எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதையும் தம் கவிதைகளிலே கற்பனை செய்து காட்டுகிறார்.

''எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு; நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு'' என்று பாரதியார் பாடுகிறார். அவர் விடுதலை விரும்பியது பாரத மண்ணுக்கு மட்டுமல்ல; மக்களுக்கும்தான்!

சாதிக் கொடுமைகளிலிருந்து விடுதலை!— சமயப் பகைமைகளிலிருந்து விடுதலை! பொருளாதாரச் சுரண்டலிலிருந்து விடுதலை! — மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலை!— என, எங்கும், எதிலும் விடுதலை வாழ்வை விரும்பினார். ஏழை — பணக்காரன் என்ற வர்க்கக் கொடுமையிலிருந்தும் விடுபட்ட இந்தியாவையே அவர் விரும்பினார்.

பாரதியார் முழுமையான அறிவுடையவராக இருந்தார். அவர் வெறும் மொழிப் புலவராக மட்டுமல்லாமல், ஒரு மாபெரும் அரசியல் தலைவருக்குத் தேவைப்படும் தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தார்.

சுதந்திர இந்தியாவிலே தொழிலும், வாணிபமும், சர்வதேச உறவும் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதனை''பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்'' என்ற பாடலிலே கற்பனை செய்து காட்டுகிறார்.

விஞ்ஞான முறைப்படி சுதந்திர பாரதம் திட்டமிட்டு முன்னேற வேண்டும் எனக் கனவு கண்டார்.

''காசி நகர்ப் புலவர் பேசுமுரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்'' என்றும், ''வானையளப்போம் — கடல் மீனை அளப்போம்'' என்றும் ''சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்; சந்தித் தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்'' என்றும் பாரதி பாடியவை விஞ்ஞானத்தில் சுதந்திர பாரதம் முன்னேறவேண்டும் என்ற கருத்துக்களைக் கொண்டவையாகும்.

தமிழ்ப் பாவினங்களிலே பெரும்பாலானவற்றைப் பாரதியார் பயன்படுத்தியிருக்கிறார். அகப்பொருள் இலக்கணப்படி கண்ணன் பாட்டைப் படைத்திருக்கிறார். நான்மணி மாலை, பஞ்சகம், தசாங்கம், பள்ளியெழுச்சி, நவரத்தின மாலை ஆகியவற்றையும் படைத்துள்ளார்.

நொண்டிச்சிந்து, காவடிச் சிந்து ஆகிய சிந்துகளையும் பயன்படுத்திப் பாமரர்களும் ரசிக்கும் வகையில் பாடல்களைப் புனைந்துள்ளார். பழைய மெட்டுக்களில் பாடியதுடன் புதிய மெட்டுக்களையும் படைத்திருக்கிறார்.

பாரதியார் இசை ஞானத்தையும் நிறைவுறப் பெற்றிருந்தார். அதனால் இசைப் பாடல்களையும் படைத்தளிக்க அவரால் முடிந்திருக்கிறது. அவருடைய பாடல்களில் பலவற்றை இன்றைய இசைவாணர்கள் கச்சேரிகளில் பாடக் கேட்டு மகிழ்கிறோம். பாடல் ஒவ்வொன்றுக்கும் உரிய ராகம் இன்னதென்றும் தாளம் இன்னதென்றும் அவர் பொறித்துக் காட்டியிருக்கிறார். (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டம் - பாரதீய வித்யாபவன் சொற்பொழிவிலிருந்து)

ம.பொ.சி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

டா:.பே பிரதான விற்பனை உரிமை
பெருமையுடன் வழிவழியாக
வளர்ந்துவரும் ஸ்தாபனம்.

MF
Massey Ferguson

TAFE

டாஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் இந்திய வேளாண்மைக்கு கடப்பாடு உடையவர்கள். அவர்களின் பரஸ்பர நம்பிக்கையால்தான், இந்தியநாடு முழுவதிலும் சிறந்த முறையில் அனைத்திந்திய பிரதான விற்பனை அமைப்பின் கீழ் விற்பனை மற்றும் சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. அவர்களின் கூட்டு முயற்சியால்தான் பல விற்பனை மையங்கள் ஒரு தலைமுறையையும் தாண்டி இயங்கி வருகின்றன. இதில் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மையங்கள் கால் நூற்றுண்டுக்கான பணிக்கென விருதுகள் பெற்றுள்ளன.

தொழில் ரீதியாக போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில் டாஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் வளர்ந்துவரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகத்தொடர்ந்து போராடி வருகின்றார்கள்.

இந்திய வேளாண்மையை வளப்படுத்துவதைத் தத்துவமாகக் கொண்டுள்ளது—டா:.பே.

MF
Massey Ferguson

TAFE

ட்ராக்டர்ஸ் அண்ட் :பார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட்

சென்னை

MAC/T/45-A/Tam


REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Sri Lanka

உகந்த பெயிண்ட்டைத் தேர்ந்தெடுப்பதைப் போலவே உங்கள் பட்ஜெட்டுக்குத் தகுந்த பெயிண்ட்டைத் தெரிந்து கொள்வதும் அவசியம்.

வாருங்கள்-நெரோலாக் பெயிண்ட்ஸ் கூறும் லாபகரமான விளக்கத்தைக் கேளுங்கள்.

நீங்கள் உங்கள் இல்லத்துக்கு பல ஆண்டுகளுக்கு ஒரு முறை வண்ணம் தீட்டுகிறீர்கள். அதனால் உங்களுக்கு நிறைய பணச் செலவு ஆகிறது. நேரமும் செலவாகிறது.

ஆகவே நீங்கள் வண்ணம் பூசுவதற்கு எவ்வளவு பணம் செலவழிக்க முடியும் என்பதை முதலில் தீர்மானிக்கவேண்டும். பிறகு உங்கள் பட்ஜெட்டுக்குத் தகுந்தபடி வண்ணங் களைக் கலந்து பூசுவது எளிதாகி விடுகிறது.



ஆனால் உங்களுக்குத் தேவைப்படும் பெயிண்டின் வகையைத் தேர்ந்தெடுக்கும் போது, பணத்தை மிச்சப்படுத்தும் ஆசையில் பெயிண்ட்டின் தரத்தை கோட்டை விட்டுவிடக்கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். தரமுள்ள பெயிண்ட்டுகளையே எப்போதும் உபயோகியுங்கள். உங்களுடைய வீட்டின் ஒவ்வொரு உபயோகத்துக்கும் ஏற்ற தரம் உயர்ந்த பலவகை பெயிண்ட்டுகளை வழங்குகிறது, **நெரோலாக் பெயிண்ட்ஸ்.**



உங்கள் பணத்துக்கு முழு மதிப்பைப் பெற, இதோ உபயோக மிக்க சில குறிப்புகள்—

1. வீட்டுச் சுவர்கள் கவர்ச்சியுடன் எப்போதும் எழிலோங்கி தோன்றுவதற்கு **சிலிகோன் கொண்ட நெரோலாக் அக்ரிலிக் எமல்ஷன்** மிகவும் உகந்தது. அதை எளிதாக கழுவிவிடலாம், பராமரிப்பதுவும் சுலபம்.

2. ஆயில் பௌண்ட் டிஸ்டெம்பர் வேண்டுவோருக்கு **நெரோலாக் பெயிண்ட்ஸ்** வழங்குகிறது **சோல்ஜர் பிராண்ட் ஆயில் பௌண்ட் டிஸ்டெம்பர்.** இதன் வகையில் இதைவிட சிறந்ததாக வாங்குவதை உங்களால் கனவு கூட காணமுடியாது.

3. ஒவ்வொரு வீட்டிலும் சில இடங்கள் கால நிலைப் பாதிப்புக்கு உள்ளாகின்றன. சமையலறை அலமாரிகள், பர்னிச்சர், கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்கு **நெரோலாக் ஸின்தெடிக் எனாமல்** உபயோகியுங்கள்.



வண்ணம் பூசும்போது செலவைக் குறைப்பதற்கு பல வழிகள் இருக்கின்றன. அதற்காக தரம் குறைந்த பெயிண்ட்டுகளை வாங்கவேண்டுமென்பதல்ல. "All you wanted to know about painting"



என்ற எங்களின் **நெரோலாக் பெயிண்ட்ஸ்** இலவச ஆங்கில வெளியீட்டுக்கு எழுதவும். கீழே தரப்பட்டுள்ள கூப்பனை கிழித்து எங்களுக்கு அனுப்பினால் போதும்.



நெரோலாக் பெயிண்ட்ஸ்

இல்லங்களுக்கு எழிலூட்டும் வண்ணங்...

பெயர் ....

முகவரி ....

.... பின் கோட்

குட்லாஸ் நெரோலாக் பெயிண்ட்ஸ் லிமிடெட்
...... 400 013

167 (V)
ULKA-GNP-167 TAM